நன்னடத்தை மற்றும் சிறுவர் பாராமரிப்பு
சேவைகள் திணைக்களம்

கொழும்புப் பல்கலைக்கழகம், சட்ட பீடம்
மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்

# மாணவர் கைநூல்

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி - 2024

2024

Save the Children

IOM
UN MIGRATION

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாராமரிப்பு சேவைகள் திணைக்களம்

கொழும்புப் பல்கலைக்கழகம், சட்ட பீடம்
மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்

# மாணவர் கைநூல்

## விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி

2024

Save the Children

IOM UN MIGRATION

கொழும்புப் பல்கலைக்கழகம், சட்ட பீடம்

மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்

## *எமது நோக்கு*

*அனைத்து மக்களின் கண்ணியமும் உரிமைகளும் மதிக்கப்படக்கூடிய, உரிமை உணர்வுடனான ஒரு தேசத்தை உருவாக்குதல்*

## *எமது செயற்பணி*

*பலதரப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மனித உரிமைகள் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சிறந்த மையமாக இருத்தல்*

## நன்றி நவிலல்


### செயற்திட்டக் குழு மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் – மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்

பேராசிரியர் (தலைமை) வசந்த செனவிரத்ன – பணிப்பாளர்

எம்.ஏ.எம். ஹக்கீம் - பிரதிப் பணிப்பாளர்

சத்துரி ஜெயவர்தன – செயற்திட்ட முகாமையாளர்

லேகா ஹேரத் - உதவி நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்

எஸ். ஸ்ரீ தயாளினி – செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர்

### செயற்திட்டக் குழு மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் – சேவ் த சில்ரன்

புத்தினி விதான – சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் - சிறுவர் பாதுகாப்பு மற்றும் வணிகத்தில் சிறுவர் உரிமைகள்

ஜனனி சந்திரமோகன் - சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் – மனநல உள-சமூக ஆதரவு மற்றும் சிறுவர் பங்கேற்பு

சுஷேதா கோபல்லவ, சிரேஷ்ட முகாமையாளர்- மனித விற்பனை எதிர்ப்பு பிரிவு

### செயற்திட்டக் குழு மற்றும் தொல்நுட்ப நிபுணர்கள் – புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு

மினோலி பி. டான், தலைவர் - பாதுகாப்பு பிரிவு

மிச்செல் பெர்மன் – சிரேஷ்ட செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் - மனித விற்பனையை எதிர்த்தல், பாதுகாப்பு பிரிவு

### மொழிப்பெயர்ப்பாளர்கள்:

சிங்களம்:
பவித்ரா கன்னங்கரா,
உதவி விரிவுரையாளர்,
சமூகவியல் துறை,
கலை பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

தமிழ்:
நிஷாந்தனி ரட்ணம்
சட்டத்தரணி (இலங்கை)

சாயீஸ்வரி பத்மசீலன்
உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
KAATSU சர்வதேச பல்கலைக்கழகம்
இலங்கை.

### முகப்பு அட்டை வடிவமைப்பு:

நயனிகா செனவிரத்ன – தொடர்பாடல் உத்தியோகத்தர், CSHR

இணை வெளியீடு:

மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்
94, குமாரதுங்க முனிதாச மாவத்தை
கொழும்பு 03, இலங்கை
+94 (0) 11 2500879
https://cshr.cmb.ac.lk/

இலங்கை சேவ் த சில்ரன்
18 சின்சபா வீதி, கொழும்பு 06, இலங்கை
www.srilanka.savethechildren.net/

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு
09 ஆம் மாடி, IBSL கட்டிடம், இல. 80 A,
ஏல்விடிகல மாவத்தை,
கொழும்பு 08, இலங்கை
https://srilanka.iom.int/


பொறுப்புத் துறப்பு: இந்த கைநூல் ஏப்ரல் 2024 வரை பெறப்பட்ட தகவல்களுடன் தொகுக்கப்பட்டுள்ளது இந்த கைநூல் பொதுவான தகவலுக்காக மட்டுமே தவிர அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்காக அல்ல என்பதை நினைவில் கொள்ளவும். இதிலுள்ள எந்த தகவலும் சம்பந்தப்பட்ட அதிகார ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

இந்த கைநூலில் உள்ள தகவல்கள் மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையத்திற்குச் சொந்தமானது. இக்குறித்த வெளியீட்டினையோ அல்லது CSHR இன் பெயரையோ குறிப்பிடலாம். இவ்வெளியீட்டின் எந்தப் பகுதியையும் மீண்டும் உருவாக்கவோ அல்லது பிரதி செய்யவோ முடியாது.

இந்த கைநூலின் வெளியீடு, இல. SSJTIP22GR0008 இன் விதிமுறைகளின் படி, மனித வியாபாரத்தைக் கண்காணிக்கவும் எதிர்த்துப் போராடுவதற்குமான அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகத்தின் ஆதரவின் மூலமே சாத்தியமானது. இங்கு வெளிப்படுத்தப்படும் எந்தக் கருத்தும் ஆசிரியரின் (களின்) கருத்துகளாகும், மேலும் அவை அமெரிக்க வெளியுறவுத் துறையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

© மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்; © சேவ் த சில்ரன்; © புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு 2024

இக்கைநூலில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் கற்கையலகுகளை அபிவிருத்தி செய்தவர்களின் கருத்துக்கள் மட்டுமே என்பதோடு IOM மற்றும் சேவ் த சில்ரன் ஆகியவற்றின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பதால் இக்குறித்த வெளியீடு மற்றும் அதன் விளைவுகளுக்கு குறித்த நிறுவனங்கள் பொறுப்பேற்காது.

மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையமானது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்துடன் இணைந்த ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும். பலதரப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மனித உரிமைகள் தொடர்பான கற்கைகள் மற்றும் ஆய்விற்கான சிறந்த மையமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மனித உரிமைகள் தொடர்பான கற்கைகள் மற்றும் ஆய்வு திட்டங்களை முன்னெடுப்பதும் நெறிப்படுத்துவதும் இதன் பணிப்பானைகளாகும்.

சிறுவர் மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், சிறுவர்களுக்கான குறிப்பான சேவைகளை வழங்குவதோடு இலங்கையின் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புதுமையான அணுகுமுறைகள் குறித்த ஏராளமான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

அவசர சூழ்நிலைகள் மற்றும் அபிவிருத்தி சூழல்களில் சிறுவர்களுக்கான உடனடி மற்றும் நீடித்த அபிவிருத்திகளுக்கு பங்களிக்க 120 இற்கும் மேற்பட்ட நாடுகளில் சேவ் த சில்ட்ரன் செயல்படுகின்றது. எல்லா சிறுவர்களும் உயிர்வாழும், கற்றுக்கொள்ளும் மற்றும் பாதுகாக்கப்படும் ஓர் உலகத்தை நாங்கள் விரும்புகிறோம்.

மனிதாபிமான மற்றும் ஒழுங்கான இடப்பெயர்வு, புலம்பெயர்ந்தோர் மற்றும் சமூகத்திற்கு நன்மை பயக்கும் என்ற கொள்கையில் IOM உறுதியாக உள்ளது. IOM உலகளவில் 480 இற்கும் மேற்பட்ட நாட்டு அலுவலகங்கள் மற்றும் துணை அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. வெளியீட்டாளரின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, இந்த வெளியீட்டின் எந்தப் பகுதியையும் மீண்டும் உருவாக்கவோ, சேமிக்கவோ கூடாது அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும், மின்னணு, இயந்திர மூலமாக நகலெடுக்கவோ, பதிவு செய்யவோ அல்லது வேறுவிதமாகவோ பரிமாற்றலாகாது.

**உருவாக்கம்:**
கொழும்புப் பல்கலைக்கழகம்,
சட்ட பீடம்
மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்

**இணை அனுசரணை:**
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
Save the Children

**பணிப்பாணை:**
IOM UN MIGRATION

**நிதியுதவி:**

CSHR பின்வரும் **தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு** மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது:

பேராசிரியர் (தலைமை) வசந்தா
செனவிரத்ன பகிரங்க மற்றும் சர்வதேச சட்டத்துறை
சட்ட பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் நிஷாரா பெர்னாண்டோ
சமூகவியல் துறை
கலைப் பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் பியஞ்சலி டி சொய்சா
மனநல மருத்துவத் துறை
மருத்துவ பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

நிர்மலி பெரேரா
சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

பிரியங்கிகா ரத்நாயக்க
உதவிப் பணிப்பாளர்
உளவியல் துறை திணைக்களம்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

ஜனனி சந்திரமோகன்
சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர்
மனநல உள்-சமூக ஆதரவு மற்றும் சிறுவர் பங்கேற்பு
சேவ் த சில்ரன், இலங்கை

ரொஷான் தம்மபால
சுயாதீன மருத்துவ உளவியலாளர்

சுஷேதா கோபல்லாவ
சிரேஷ்ட முகாமையாளர்
மனித விற்பனை எதிர்ப்பு பிரிவு
சேவ் த சில்ரன், இலங்கை

நிவேதிதா ஜீவபாலன்
மனநல நிபுணர்/முகாமையாளர்
சிறுவர் பாதுகாப்பு பிரிவு – LEADS

ஈ. டபில்யூ. சலனிகா சந்தமாலி
விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சேவை வழங்குபவர்

புத்தினி விதான
சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர்
வணிகத்தில் குழந்தை பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகள்
சேவ் த சில்ரன், இலங்கை

இக்கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடநெறிக்கான **கற்கையலகுகளை விருத்தி செய்தவர்களுக்கு** CSHR தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது:

சந்தரேகா லியனகே
உதவி ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள்

ரொஷான் தம்மபால
சுயாதீன மருத்துவ உளவியலாளர்

நிலூஷா குணதிலக
மருத்துவ உளவியலாளர்

நிவேதிதா ஜீவபாலன்
மனநல நிபுணர்/முகாமையாளர்
சிறுவர் பாதுகாப்பு பிரிவு – LEADS

சுபோத எம் மலவர ஆராச்சி
நிர்வாக பணிப்பாளர், LIFE கன்சல்டன்சி நிறுவனம் மற்றும் திறன் பயிற்றுவிப்பாளர்

புத்தினி விதான
சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர்
வணிகத்தில் குழந்தை பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகள்
சேவ் த சில்ரன், இலங்கை

CSHR நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் அதன் மாகாண ஆணையாளர்களுக்கு தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

கயனி கௌஷல்யா விஜேசிங்க
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் – தேசிய அலுவலகம்

நிர்மலி பெரேரா
சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் – தேசிய அலுவலகம்

டி.எம்.சி.கே. குணரத்ன
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் – மத்திய மாகாணம்

ரிஸ்வானி ரி.ஃபான்
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

இராஜேந்திரன் குருபரன்
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - வடக்கு மாகாணம்

சுரிதா பெரேரா
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

எம்.ஏ. மல்காந்தி பியசேன
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - வடமேல் மாகாணம்

ஜி.டி. லக்மாலி யூ குமாரி
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்

ரஷிகா யூ.ஐ திஸ்ஸாநாயக
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - தென் மாகாணம்

டி.எம்.என். சதுரங்கி
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - ஊவா மாகாணம்

பேசலா ஆர். அபேசூரிய
மாகாண ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - மேல் மாகாணம்

# உள்ளடக்கம்


***நன்றி நவிலல்……………………………………………………………………………………..i***

***முன்னுரை………………………………………………………………………………………...vi***

***கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடாதிபதியின் செய்தி……………………………………viii***

***பிரதிப் பணிப்பாளரின் செய்தி…………………………………………………………………ix***

***நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் செய்தி................................xi***

***சேவ் த சில்ரன் இலங்கைக்கான நிறுவனத்தின் செய்தி...................................................................xii***

***புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் செய்தி.........................................................................xiii***

***சுருக்கெழுத்துக்கள்.........................................................................................................................xiv***

1. கொழும்புப் பல்கலைக்கழகம்..........................................................................................................1
2. மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்.........................................................................2
3. பாடநெறிக்கான அறிமுகம்...............................................................................................................3
4. பாடநெறியின் உள்ளடக்கம்.............................................................................................................5
   - 4.1. சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதான கோட்பாடுகள்......................................................6
   - 4.2. சட்டக் கட்டமைப்பு.......................................................................................................................15
   - 4.3. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய விதமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல்.......................................................................................22
   - 4.4. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய விதமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பராமரிப்புத் தேவைகள்..........................................................................28
   - 4.5. சிறுவர்களின் சவாலான நடத்தைகள் மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சிக்கல்களை முகாமைத்துவம் செய்தல்..............................................................................36
   - 4.6. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சம்பவ முகாமைத்துவமும் பதிவுகளை பேணுதலும்...........41
   - 4.7. தனிநபர் பராமரிப்புத் திட்டம் மற்றும் மீளிணைப்பு............................................................63
   - 4.8. சுய-கவனிப்பு மற்றும் பராமரிப்பாளருக்கான மன அழுத்த முகாமைத்துவம்.......................71
5. விரிவுரைகளுக்கான நேர அட்டவணை...........................................................................................77
6. பாடநெறிக்கான வழிகாட்டுதல்கள்..................................................................................................85
7. மதிப்பீட்டு அட்டவணை.......................................................................................................................88
8. வீட்டிலிருந்து ஆக்கும் ஒப்படை.........................................................................................................89
9. தனிப்பட்ட சமர்ப்பணம்.........................................................................................................................90
10. பாடநெறி குறித்த ஏனைய வழிகாட்டுதல்கள்..................................................................................91
11. நிர்வாக வழிகாட்டுதல்கள்.................................................................................................................93
12. முக்கிய திகதிகள்...............................................................................................................................95
13. முக்கிய தகவல்கள்.............................................................................................................................96

## முன்னுரை



விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியானது, அடையாளம் காணப்பட்ட அனைத்து பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான குறிப்பாக விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சேவைகளை குறிப்பாக அவற்றின் தரம் மற்றும் அணுகலை மேம்படுத்துவதற்காக சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற பராமரிப்பு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்யும் வகையிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு வினைதிறனான பாதுகாப்பினை வழங்கும் வகையிலும், மேலும் சிறுவர் விற்பனை தொடர்பான சம்பவங்கள் பற்றிய புரிதலையும் அவற்றை அறிக்கைப்படுத்தலையும் அதிகரிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த கைநூலில், அரச நிறுவனங்களில் பணிபுரிகின்ற பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி பற்றிய விரிவான வழிகாட்டியாக அமைகின்றது. சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் சேவ் த சில்ட்ரன் ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட இக்கைநூல் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கே பிரத்தியேகமான கொள்கைகள் மற்றும் கல்வி விதிமுறைகளை கோடிட்டுக் காட்டுகிறது.

மாணவர்கள் இந்தக் கல்விப் பயணத்தைத் தொடங்கும்போது, இந்தக் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் புரிந்துகொண்டு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுடன் தங்களைப் பரிட்சயப்படுத்திக்கொள்வது ஒவ்வொரு பங்கேற்பாளரின் பொறுப்பாகும்.

பாடநெறியின் அமைப்பு, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் தேவைகள் மற்றும் நலன்களைப் பூர்த்தி செய்யும் வகையில் பராமரிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளின் மாதிரியை கலந்தாலோசித்ததின் அடிப்படையில் நெகிழ்வானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கற்கையலகுகள் பாடநெறி உள்ளடக்கத்தின் விரிவான கண்ணோட்டத்தை வழங்குவதோடு கொழும்பு பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தரங்களுக்கு இயைபானதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் முழுவதும், CSHR குழுவானது மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய அறிவாற்றலைத் தூண்டும் வகையிலான அனுபவத்தை வழங்க அர்ப்பணிப்படன் செயலாற்றும். விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான அறிவு மற்றும் திறன்களைப் பின்தொடர மாணவர்களை ஆதரிப்பதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

இந்தக் பாடநெறியைப் பின்பற்றுகின்ற அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பேராசிரியர் (தலைமை) வசந்தா செனவிரத்ன**
பணிப்பாளர்
மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

## கொழும்புப் பல்கலைக்கழக, சட்ட பீடாதிபதியின் செய்தி



அன்பான பங்குபற்றுனர்களே,

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். அரச சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 200 பராமரிப்பாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த பாடநெறி சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பில் தொழில்முறை சார்ந்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பை வழங்குகிறது

சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் சேவ் த சில்ட்ரன், ஒன்றிணைந்து முன்னெடுத்துள்ள இந்த முயற்சி சமூக நீதியை மேம்படுத்துவதற்கும், குறிப்பாக பின்தங்கிய ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளுக்காக வாதிடுவதற்குமான எமது உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்த முக்கியமான துறையில் உங்கள் அறிவையும் திறமையையும் மேம்படுத்துவதற்கான உங்கள் அர்ப்பணிப்பை நான் பாராட்டுகிறேன். உங்கள் பங்கேற்பு உங்கள் தொழில்முறை பயணத்தை வளப்படுத்துவது மட்டுமல்லாமல், சிறுவர் விற்பனைக்கு ஆளாகும் சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கும் பங்களிக்கிறது.

இந்த பாடநெறி முழுவதும், அதன் உள்ளடக்கத்தை முழுமையாக உள்வாங்கி சக உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைப்பதையும், மனித உரிமை சார் கொள்கைகளை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கும், சம்பவ முகாமைத்துவம் மற்றும் சிறுவர் பராமரிப்பிற்கு புதுமையான அணுகுமுறைகளை கையாள்வதற்கும் சட்ட பீடத்தின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தலையும் நான் ஊக்குவிக்கிறேன்.

இந்த பாடநெறியில் நீங்கள் சிறப்பாக செயற்பட வாழ்த்துவதோடு உங்கள் பணியில் பாடநெறி ஏற்படுத்துகின்ற சாதகமான தாக்கத்தைக் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.

**பேராசிரியர் (கலாநிதி). என். எஸ். புஞ்சிஹேவா**
பீடாதிபதி
சட்ட பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

# பிரதிப் பணிப்பாளரின் செய்தி



விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறிக்கான, உங்கள் பயணத்தைத் தொடங்கும்போது உங்களை அன்புடன் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரச சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் தங்குமிடங்களில் பணிபுரியும் பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்துவதில் எங்கள் பாடநெறி தனித்துவமானதாக விளங்குவதோடு மனித உரிமைகள் கட்டமைப்பிற்குள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை அவர்களுக்கு வழங்குகின்றது. கொழும்புப் பல்கலைக்கழக, சட்ட பீடம் மற்றும் குறித்த துறையில் உள்ள மதிப்புமிக்க நிபுணர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், எமது பாடநெறியின் பாடத்திட்டம், பயிற்சிகள் என்பன பொருத்தமான நுண்ணறிவினை வழங்கக்கூடிய வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

விரிவுரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் ஆகியவற்றின் மூலம், மனித உரிமைக் கோட்பாடுகள், சட்டக் கட்டமைப்புகள் மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குறித்த சம்பவ முகாமைத்துவத்துக்கான சிறந்த நடைமுறைகள் பற்றிய விரிவான புரிதலை இப்பாடநெறி வழங்குகின்றது. பங்கேற்பாளர்கள் ஒருவரையொருவர் ஈடுபடுத்தி, பகிரப்பட்ட அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய ஆதரவான கற்றல் சூழலை வளர்ப்பதற்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம்.

மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையமானது பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தி, கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. நீங்கள் இந்த பாடநெறியை தொடங்கும்போது, அனுபவம் வாய்ந்த நிபுணர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும், இந்த முக்கியமான துறை சார்ந்த அறிவு மேம்பாட்டுக்கு பங்களிக்கவும் உங்களுக்கு வாய்ப்பாக அமையும்.

பாநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்ய உங்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான உங்கள் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது, மேலும் இந்த பாடநெறி அவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த உங்களுக்கு வலிமைளிக்கும் என்று நான் நம்புகின்றேன்.

**ஏம்.ஏ.எம். ஹக்கீம்**
சிரேஷ்ட விரிவுரையாளர், பிரதிப் பணிப்பாளர், CSHR
பகிரங்க மற்றும் சர்வதேச சட்டத் துறை
சட்ட பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் செய்தி



நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கென வடிவமைக்கப்பட்ட விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறிக்கு உங்களை வரவேற்கின்றோம். பாதிக்கப்பட்ட குழந்தைகள் குறிப்பாக விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கடத்தப்பட்டதில் இருந்து ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை அடையும் வரை ஏற்படுகின்ற உடல், பாலியல், மன மற்றும் உணர்வு ரீதியான கஷ்டங்களை தாங்கிக்கொள்ளுகிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அடையாளப்படுத்தல் மற்றும் போதுமான உளவியல் ஆதரவு இல்லாமல் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தங்களுடைய மீட்சி நோக்கிய மற்றும் தங்களுடைய வாழ்வை மீள கட்டியெழுப்புகின்ற பயணத்தில் தவிர்க்க முடியாத தடைகளை சந்திக்கின்றார்கள். எனவே, அவர்களை ஆரம்பத்திலேயே அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் தேவையான சிகிச்சைகளை வழங்குதல் அவசியமாகின்றது. அதேபோல சமூகத்துடன் அவர்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்தலும் மிகவும் முக்கியமாகின்றது.

அந்தவகையில், சிறுவர்கள் பாதுகாப்புத் துறையைச் சேரந்த வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களுடன் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆலோசனைக்குப் பின்னர், இப்பாடநெறிக்கான விரிவான பயிற்சி அலகுகள் மிகவும் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கற்கையலகுகள் சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்கும் வகையில், சிறுவர் உரிமைகள் தொடர்பான முக்கிய கொள்கைகளில் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குறிப்பாக விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காண்பது, அவர்களின் பராமரிப்புத் தேவைகளை புரிந்துகொள்வது, சவாலான நடத்தைகள் மற்றும் இடர்களை திறம்பட நிர்வகிப்பது, சிறுவர் பராமரிப்பு தொடர்பான சம்பவ முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பது, தனிப்பயனாக்கப்பட்ட பராமரிப்புத் திட்டங்களைப் பராமரிப்பது மற்றும் சமூகத்துடனான வெற்றிகரமான மீளிணைப்பினை எளிதாக்குவது போன்ற முக்கியமான விடயங்களை உள்ளடக்குகின்றன. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுடன் பணிபுரிவதற்கான கேள்வியை கருத்தில் கொண்டு, பயிற்சி அலகுகளில் சுய-கவனிப்பு மற்றும் பராமரிப்பாளருக்கான மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சேவ் த சில்ரன், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த உயர் சான்றிதழ் பாடநெறி, உங்களுடைய மேற்பார்வையின் கீழ் இருக்கின்ற பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு முன்மாதிரியான பராமரிப்பினை வழங்க உங்களைச் சித்தப்படுத்துகின்றது.

உங்களுடைய அர்ப்பணிப்பும் பரிவும் மாற்றத்தை ஏற்படுத்துவதில் விலைமதிப்பற்றவை. சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சாத்தியமான சிறந்த சேவைகளை உறுதி செய்வதற்காக இப்பாடநெறியில் நீங்கள் தீவிரமாக பங்கேற்பதை ஊக்குவிக்கின்ற அதேவேளையில், உங்களின் முன்னோக்கிய பயணத்திற்கு நான் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கயனி கௌசஷல்யா விஜேசிங்க**
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

# சேவ் த சில்ரன் இலங்கைக்கான நிறுவனத்தின் செய்தி



கொழும்புப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி குறித்த எனது எண்ணங்களையும் கருத்துக்களையும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையிலுள்ள சிறுவர் விற்பனையை தடுக்கும் அரச மற்றும் சிவில் சமூக முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது சேவ் த சில்ரனின் சிறுவர்களை பாதுகாப்பதற்கான முன்னுரிமைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இந்த எல்லைக்குள் கடந்த சில ஆண்டுகளாக, விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருக்கின்ற போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய எமது புரிதலை நாங்கள் விருத்தி செய்துள்ளோம். விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எவ்வாறு தவறாக புரிந்துகொள்ளப்படுகிறார்கள், அவர்கள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களாக அடையாளம் காணப்படுவதில்லை, பல சமயங்களில் அவர்களுக்காக வழங்கப்படுகின்ற உதவிகள் பொருத்தமற்ற மற்றும் அதிக தீங்கினை விளைவிக்கக் கூடிய தலையீடுகளுக்கு இட்டுச் செல்கின்றன.

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பொருத்தமான மற்றும் தரமான ஆதரவின் பரந்த கட்டமைப்பிற்குள், பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் நேரடித் தொடர்பினை கொண்டுள்ளவர்களின் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை கட்டமைக்க, பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீட்கவும் நேர்மறையான சமாளிக்கும் உத்திகளை உருவாக்கவும் தேவையான சிறந்த தரமான பராமரிப்பு மற்றும் ஆதரவைப் பெறுவதை உறுதிசெய்ய சேவ் த சில்ரன் உறுதிபூண்டுள்ளது. சிறுவர்களின் முழுமையான வளர்ச்சிக்கான சிறந்த சூழல் வீட்டுச் சூழலாக இருப்பதால், நிறுவன ரீதியான பராமரிப்பு என்பது எந்தவொரு குழந்தைக்கும் வழங்கப்படுகின்ற இறுதி வாய்ப்பாக இருக்க வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். எனவே, பராமரிப்பு நிறுவனங்கள் அவர்களின் வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் அதே சூழலை வழங்காது என்பதால், சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் சேரும் சிறுவர்கள் ஏற்கனவே பாதகமான நிலையில் இருக்கின்ற சூழலில், சிறுவர்களின் வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் எல்லா நேரங்களிலும் முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதிசெய்ய, பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பராமரிப்பு சேவைகளை வழங்குபவர்கள் தகுந்த திறன்களைக் கொண்டவர்களாக இருப்பது முக்கியமானது. சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு இந்த உயர் சான்றிதழ் பாடநெறியை வழங்குவதற்கு கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் ஒத்துழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

குறிப்பாக சட்ட அமுலாக்கம் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு சிறுவர்களின் உரிமைகள் குறித்து கட்டமைக்கப்பட்ட பயிற்சியை வழங்குவதில் சேவ் த சில்ரன் CSHR உடன் நீண்ட கால ஒத்துழைப்பினைக் கொண்டுள்ளது. எமது அண்மைக்கால ஒத்துழைப்புகள் சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்களின் திறன் உள்ளடங்களாக, விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கான சேவைகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்தியமையே, இக்குறித்த பாடநெறியை உருவாக்க வழிவகுத்தது.

எமது இந்த திட்டத்திற்கு, கொழும்புப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் (தலைவர்) எச்.டி. கருணாரத்ன, சட்ட பீடாதிபதி பேராசிரியர் (கலாநிதி) என்.எஸ். புஞ்சிஹேவா மற்றும் CSHR இன் பணிப்பாளர் பேராசிரியர் (தலைவர்) வசந்தா செனவிரத்ன மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் அர்ப்பணிப்பிற்கும் நான் நன்றி தெரிவிப்பதோடு மனதார பாராட்டுகிறேன். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் கயனி கௌஷல்யா விஜேசிங்க மற்றும் அத்திணைக்களத்தில் பணிபுரிகின்ற சக உத்தியோகத்தர்கள் இப்பாடநெறியை தொழில்நுட்ப ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் ஆதரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக நான் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். உயர்தர பாடநெறியை உருவாக்கி வழங்குவதற்கு தங்களுடைய மதிப்புமிக்க நேரத்தையும் நிபுணத்துவத்தையும் வழங்கிய தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவிற்கும் விரிவுரையாளர் குழுவிற்கும் எனது நன்றிகள். IOM, சேவ் த சில்ரன் மற்றும் ஏனைய பங்காளர்களால் செயல்படுத்தப்பட்ட 'IMPACT' திட்டம் என்ற முயற்சிக்கு நிதி ரீதியாக ஆதரவளித்ததற்காக IOM மற்றும் மனித விற்பனையை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய அமெரிக்க வெளியுறவுத்துறை அலுவலகத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அனைத்து பங்கேற்பாளர்களும் ஒரு சிறந்த கற்றல் அனுபவத்தை பெற என்னுடைய வாழ்த்துக்கள், மேலும் விற்பனையால் பாதிக்கப்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் சாதகமான பராமரிப்பு சூழலை உறுதி செய்வதற்கு, இப்படநெறியின் மூலம் கற்றுக்கொள்கின்ற திறன்களை நீங்கள் நடைமுறையில் பயன்படுத்துவீர்கள் என நான் நம்புகின்றேன்.

**ஜூலியன் செல்லப்பா**
இலங்கைக்கான பணிப்பாளர்
சேவ் த சில்ரன் – இலங்கைக்கான அலுவலகம்

# புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின்



அன்பார்ந்த பங்கேற்பாளர்களே,

அரச மற்றும் அரசுசாரா சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 200 பராமரிப்ப உத்தியோகத்தர்களை மேம்படுத்தும் வகையில், கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் சேவ் த சில்ரன் என்பவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள “விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ்” பாடநெறிக்கு பங்கேற்பாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன். மிகவும் பாதிக்கப்படக்கூடிய, விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு உதவுவதற்கும் மற்றும் பயனுள்ள சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபடுவதற்கும் பொருத்தமான அறிவையும் திறன்களையும் இப்பாடநெறி வழங்குமென நான் நம்புகின்றேன்.

மனித வியாபாரம் என்பது ஒரு குற்றமாகும், இது சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களின் முழுமையான, ஒருங்கிணைந்த மற்றும் செயலூக்கமான எதிர்வினையின் அவசியத்தை உணர்த்துகின்றது. மேலும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு திறம்படஉதவுவதில் மிகவும் இன்றியமையாதவை. 2007 ஆம் ஆண்டிலிருந்து புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம், ஐ.நா புலம்பெயர்வு நிறுவனம் ஆகியன இலங்கையில் சிறுவர் விற்பனைக்கு எதிராக களத்தில் பணியாற்றி வருவதுடன், இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து தேசிய ரீதியான எதிர்ப்பினை நிறுவுவதற்கும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் முக்கிய பங்காற்றியுள்ளன. மேலும், 2010 ஆம் ஆண்டு முதல் மனித விற்பனைக்கு எதிரான பணிக்குழுவிற்கு மனித விற்பனையைக் கண்காணித்தல் மற்றும் அதனை எதிர்த்துப் போராடுவதற்கான இரண்டு தொடர்ச்சியான ஐந்தாண்டு தேசிய மூலோபாய செயல் திட்டங்கள் மற்றும் அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனித விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான நியம தொழிற்பாட்டு நடபடிமுறைகள் (SOP) போன்றவற்றை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றது. IOM, சேவ் த சில்ரனின் ஒத்துழைப்புடன், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல், பரிந்துரைத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான SOP வழிகாட்டுதல் குறிப்பை (2021) உருவாக்குவதில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சிற்கு தொழில்நுட்ப உதவியை வழங்கியுள்ளது.

IOM, சேவ் த சில்ரன் உடன் இணைந்து, மனித விற்பனையை கண்காணிக்கவும் எதிர்த்துப் போராடுவதற்குமான ஐக்கிய அமெரிக்க வெளியுறவுத்துறை அலுவலகத்தின் (J/TIP) நிதியுதவியுடன் அரச மற்றும் அரசுசாரா சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 200 பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு இப்பாடநெறியினை இலவசமாக வழங்குவதற்கு சாத்தியமானது.

இந்த உயர் சான்றிதழ் பாடநெறியின் பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்களுடைய பராமரிப்பின் கீழ் இருக்கின்ற விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்ளுக்கு திறம்பட உதவுவதற்கும் பாதுகாப்பதற்கும் தேவையான நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்கான வெற்றிகரமான மற்றும் பயனுள்ள கற்றல் பயணமாக இருக்க வேண்டுமென நான் மனதார பாராட்டுகின்றேன்.

**சரத் தாஸ்**
இலங்கை மற்றும் மாலைத்தீவிற்கான தூதரகத் தலைவர்,
புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு

# சுருக்கெழுத்துகள்

| | |
|---|---|
| CRC | Child Rights Convention - சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் |
| CSHR | Centre for the Study of Human Rights - மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் |
| CVoT | Child Victims of Trafficking –விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் |
| DPCCS | Department of Probation and Child Care Services - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் |
| ICD | International Classification of Diseases – அனைத்துலக நோய்கள் வகைப்பாடு |
| ILO | International Labour Organization – பன்னாட்டு தொழிலாளரர் அமைப்பு |
| IMPACT | Strengthening Government and CSO Capacity to Combat Trafficking in Persons and Create Greater Impact - மனித விற்பனையை எதிர்த்து போராடுவதற்கு அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் அதிகரித்த விளைவினை ஏற்படுத்தல் |
| IOM | International Organization for Migration - புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு |
| JMO | Judicial Medical Officer – சட்ட மருத்துவ அதிகாரி |
| MHPSS | Mental Health and Psychosocial Support – மனநல மற்றும் உளவியல் ஆதரவு |
| NCPA | National Child Protection Authority - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை |
| OHCHR | Office of the High Commission for Human Rights - மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிக அலுவலகம் |
| SAARC | South Asian Association for Regional Cooperation - பிராந்தியஒத்துழைப்பிற்கான செற்காசிய அமைப்பு |
| SCI | Save the Children International - சேவ் த சில்ரன் |
| TIP | Trafficking in Persons – மனித வியாபாரம் |
| TRC | Technical Review Committee - தொழில்நுட்ப மீளாய்வுக் குழு |
| UN | United Nations - ஐக்கிய நாடுகள் |
| UOC | University of Colombo - கொழும்புப் பல்கலைக்கழகம் |

| | |
|---|---|
| UNTOC | United National Convention against Transnational Organized Crime - நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பிரகடனம் |
| UNICEF | United Nations International Children's Emergency Fund - ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் |
| WHO | World Health Organisation - உலக சுகாதார அமைப்பு |

# 1. கொழும்புப் பல்கலைக்கழகம்

1921 இல் நிறுவப்பட்ட கொழும்புப் பல்கலைக்கழகம் இலங்கையின் பழமையான உயர்கல்வி நிறுவனமாகும். சமஸ்கிருதத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட பொன்மொழியான "ஞானம் அறிவொளியாகும்" என்பதற்கு ஏற்ப, கொழும்புப் பல்கலைக்கழகம் அனைத்து துறைகளிலும் கல்வியில் சிறந்து விளங்க தொடர்ந்து பாடுபடுகிறது. பல்கலைக்கழகம் 10 பீடங்கள், அந்த பீடங்களுக்குள் 68 கல்வித் திணைக்களங்கள், 6 நிறுவனங்கள், ஒரு வளாகம், ஒரு பாடசாலை மற்றும் 20 இற்கும் மேற்பட்ட நிலையங்கள் மற்றும் அலகுகள் ஆகியவற்றுடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியில் ஹைடெல்பெர்க் பல்கலைக்கழகம், சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிச் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பட்டய மேலாண்மை கணக்கியல் நிறுவனம் (CIMA), ஆஸ்திரேலியாவில் மேற்கு சிட்னி பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம் மற்றும் ஸ்பெயினில் உள்ள கிரனாடா பல்கலைக்கழகம் உள்ளிட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் பல கல்விசார் கூட்டாண்மைகளைப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

பல்வகையான கல்வித் துறைக்கு மேலதிகமாக, கொழும்புப் பல்கலைக்கழகம் நூலக சேவைகள், தொழில் வழிகாட்டுதல்கள், விளையாட்டு, மாணவர் சங்கங்கள் மற்றும் வளாகத்தில் தங்கும் வசதிகளையும் வழங்குவதோடு ஏனைய வசதிகளில் ஒரு கலை அரங்கமும் அடங்கும், அங்கு மாணவர்கள் கலை சார் நிகழ்ச்சிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த முடியும்.

சமூக நல்லிணக்கம், கலாச்சார பன்முகத்தன்மை, சம வாய்ப்பு மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களிடையேயான ஒற்றுமை ஆகிய விழுமியங்களை வலியுறுத்துகின்ற பலகலாச்சார மற்றும் பல்லினங்களைக் கொண்ட பல்கலைக்கழகம் திகழ்வதை நினைத்து பெருமைக் கொள்கின்றது. சர்வதேச மாணவர்களுக்கு பல புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதோடு சுவீடனில் உள்ள உப்சாலா பல்கலைக்கழகம், ஜேர்மனியிலுள்ள ஜஸ்டஸ் லீபிக் பல்கலைக்கழகம், டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல்கலைக்கழகம், ஜேர்மனியிலுள்ள ஹைடெல்பெர்க் பல்கலைக்கழகம், சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிச் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பட்டய மேலாண்மை கணக்கியல் நிறுவனம் (CIMA), ஆஸ்திரேலியாவில் உள்ள மேற்கு சிட்னி பல்கலைக்கழகம் மற்றும் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம், மற்றும் ஸ்பெயினில் உள்ள கிரனாடா பல்கலைக்கழகம் உள்ளிட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் பல கல்விசார் கூட்டாண்மைகளை கொண்டுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகம் கல்வி கற்றலுக்கு துணையாக பல வழிகளில் மாணவர் வாழ்க்கையை மேம்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பல ஆண்டுகளாக, பல்கலைக்கழகம் நாங்கள் வழங்கும் கல்வியின் மதிப்பை உயர்த்துவதற்காக தொழில்துறையுடன் வலுவான இணைப்புகளை உருவாக்கியுள்ளது. அதேபோன்று பல்கலைக்கழகம் வழங்கும் விளையாட்டு வசதிகள் மாணவர்களை கல்வி மற்றும் சமூக வாழ்க்கையை சமநிலைப்படுத்த ஊக்குவிப்பதோடு, விளையாட்டு அரங்கில் ஒவ்வொரு ஆண்டும் நமது மாணவர்களால் பல தேசிய மற்றும் சர்வதேச சாதனைகள் பதிவு செய்யப்படுகின்றன.

**[மேலதிக தகவல்களுக்கு: https://cmb.ac.lk/ என்ற இணையத்தள முகவரியை பார்வையிடவும்]**

## 2. மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்

மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம் (CSHR) 1991 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பதிலளிக்கும் வகையில் நிறுவப்பட்டது. இது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்திற்குள் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாக உருவாக்கப்பட்டது, பொதுமக்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் உரிமை மீறல்களுக்கான பரிகாரங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் CSHR ஆனது 25 ஆண்டுகளுக்கும் மேலாக மனித உரிமைகள் கல்வி மற்றும் ஆய்வினை பணிப்பாணைகளாகக் கொண்டு மனித உரிமைகள் தொடர்பான கற்கையை வழங்குவதில் முன்னோடியாக திகழ்ந்து வருகின்றது.

CSHR கல்வித் திட்டங்களின் கீழ் சான்றிதழ் பாடநெறிகள், உயர்தர பயிற்சி திட்டங்கள், டிப்ளோமோ நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் முதுகலை நிகழ்ச்சி திட்டங்களை வழங்குகிறது. ஆய்வு என்று வரும் போது, CSHR உரிமைகள் தொடர்பாக நடைமுறையில் பொருந்தக்கூடிய ஆய்வினை மேற்கொள்கிறது மற்றும் பிற நிறுவனங்களுக்கான ஆய்வினையும் நடத்துகிறது. மேலும் CSHR, அரசு மற்றும் அரசு சாரா துறைகளில் உள்ளவர்களின் திறனை வலுப்படுத்துவதையும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் அவர்களின் பங்குதாரர்களின் உரிமைகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. பல வருடங்களாக, CSHR இரண்டாம் தர பாடசாலை மாணவர்கள், கிராமப்புற மற்றும் பெருந்தோட்ட சமூகங்கள், பல்கலைக்கழக சமூகம், ஆயுதப்படைகள், பொலிஸ் மற்றும் சிறை அதிகாரிகள், நீதித்துறை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், சிறைக் கைதிகள் மற்றும் பொதுமக்கள் போன்ற குழுக்களுடன் பணியாற்றி வருகின்றது.

CSHR தனது நூலகத்தின் மூலம் மனித உரிமைகள் தொடர்பான அறிவு மற்றும் பிற அறிவுச் சேவைகளைப் பரப்புவதில் திறனை கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு உதவுகிறது. மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நூலகத்தின் மூலம் பயனடைகிறார்கள்.

மனித உரிமைகள் திறனை வளர்ப்பது தொடர்பாக, CSHR பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

- SCI நிதியுதவியுடன் ஹேஷீயு உடன் இணைந்து கிட்டத்தட்ட 100 அதிகாரிகளுக்கான தேவைகளை கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்ட மூன்று மாத கால பயிற்சித் திட்டம்.
- SCI நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட இலங்கையில் சிறுவர் நலன் தொடர்பான பயிற்சித் திட்டம்
- அமெரிக்க தூதரகத்தால் நிதியளிக்கப்பட்ட வடரேகாவில் உள்ள இளைஞர் மறுவாழ்வு மையத்தின் இளைஞர்களுக்கான நிகழ்ச்சி திட்டம்

CSHR அதன் கூட்டாளர்களுக்குத் திறம்பட திட்டங்களைப் கொண்டு சேர்ப்பதற்காக ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியான அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துகிறது.

அனைத்து மக்களின் கண்ணியமும் உரிமைகளும் மதிக்கப்படக்கூடிய ஓர் தேசத்தை உருவாக்குவதே CSHR இன் குறிக்கோள் ஆகும்.

## 3. பாடநெறிக்கான அறிமுகம்

DPCCR இன் ஆதரவுடன் இலங்கை சேவ் த சில்ட்ரன் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட இடைவெளியை கண்டறியும் பகுப்பாய்வு (gap analysis) ஒன்றினூடாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற பராமரிப்பு உத்தியோகத்தர்கள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரிப்பதிலும் நிர்வகிப்பதிலும் போதுமான அடிப்படை புரிதல் மற்றும் பயிற்சி இல்லை என்பதை CSHR கண்டறிந்தது. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுவதற்கும், அவர்களின் பாதுகாப்பில் உள்ள குழந்தைகளுக்கு பயனுள்ள பாதுகாப்பினை வழங்குவதற்கும் அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களில் உள்ள பராமரிப்பு உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்துவதற்கான அவசியத்தை இக்குறித்த பகுப்பாய்வு மையமாகக் கொண்டுள்ளது. பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு ஏற்றவாறு, விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் தரமான சேவைகளை அணுகுவதில் பங்களிப்பது குறித்து உருவாக்கப்பட்ட உயர் சான்றிதழ் பாடநெறியில் குறித்த உத்தியோகத்தர்களை உள்வாங்கும் வகையில், ஏற்கனவே உள்ள அறிவு, சேவைகள், மற்றும் செயற்பாடுகளில் காணப்படுகின்ற இடைவெளியை அடையாளம் காண்பதற்கு மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் சேவ் த சில்ரன் போன்றன கைக்கோர்த்துள்ளன.

இதனடிப்படையில், CSHR விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை, பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளை குறிப்பாக அதன் தரம் மற்றும் அணுகக்கூடிய தன்மை போன்றவற்றை மேம்படுத்துவதற்காக, சட்ட, சமூகவியல், உளவியல், உள-சமூகவியல் குறித்து ஆதரவளிக்கின்ற வல்லுநர்கள் உள்ளடங்கிய குழுவின் தொழில்நுட்ப தர மேம்பாட்டின் வழிகாட்டுதலின் கீழ் DPCCS மற்றும் NCPA இன் நிறுவன மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் வடிவமைத்துள்ளது.

கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்) அல்லது அதற்கு இணையான தகுதியைப் பூர்த்தி செய்த அரசு மற்றும் அரசு சாரா பராமரிப்பு நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற 200 பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்க இந்தத் திட்டம் குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு சேவ் த சில்ரனின் ஆதரவுடன் இக்குறித்த பாடநெறி இலவசமாக வழங்கப்படுகின்றது.

**பாடநெறியின் கட்டமைப்பு**

இந்தப் பாடநெறி **இலங்கை தகைமைக் கட்டமைப்பு நிலை 2** (SLQF 2) இன் புள்ளி திட்ட முறையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது ஒரு மாணவர் *ஆறு மாதங்களுக்குள்* (06 மாதங்கள்) எட்டு (08) கற்பித்த அலகுகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதன் மூலம் **15 புள்ளிகளை** பெற அனுமதிக்கின்றது.

இந்தப் பாடநெறி விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்குகின்றது. இது தொடர்புடைய விடய பரப்புகளான, சிறுவர் உரிமைகள், சட்டக் கட்டமைப்பு, சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் பாதுகாப்பு, பராமரிப்புத் திட்டம், மன அழுத்த முகாமைத்துவம், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பராமரிப்புத் தேவைகள், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பதிவுகளை பேணல் போன்றவற்றின் அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்துகின்றது.

**நிதி உதவி**

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் ஒத்துழைப்புடன் மனித விற்பனையை எதிர்ப்பதற்கான அமெரிக்க வெளியுறவுத்துறை அலுவலகத்தின் நிதியுதவியில், 'மனித விற்பனையை எதிர்த்து போராடுவதற்கு அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களை வுலப்படுத்துவதன் மூலம் அதிகரித்த விளைவினை ஏற்படுத்தல்' என்ற திட்டத்தின் கீழ் சேவ் த சில்ட்ரனின் ஆதரவுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட 200 பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு இந்த பாடநெறியானது இலவசமாக வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நடைபெறும் போது போக்குவரத்து மற்றும் மதிய உணவுக்கும், விரிவுரைகள் இணைய வழியாக நடைபெறும் போது தொலைத்தொடர்பு செலவுகளுக்கும் பொருத்தமான கொடுப்பனவுகளை கொழும்பு பல்கலைக்கழகம் வழங்கும். கொழும்பில் விரிவுரைகள் நடைபெறும் போது கொழும்பில் இரவு தங்குவதற்குரிய பொருத்தமான ஏற்பாடுகளை DPCCS முன்னெடுக்கும்.

## 4. பாடநெறியின் உள்ளடக்கம்

**விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி**

**(SLQF நிலை 02/15 புள்ளிகள்/60 மணித்தியாலங்கள்)**

| இல. | தொகுதிகள்/அடிப்படை அலகுகள் | புள்ளிகளின் பெறுமதி |
|---|---|---|
| 1. | **தொகுதி 01**<br>சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதான கோட்பாடுகள் | 02 |
| 2. | **தொகுதி 02**<br>சட்ட கட்டமைப்பு | 01 |
| 3. | **தொகுதி 03**<br>சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய விதமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல் | 02 |
| 4. | **தொகுதி 04**<br>சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய விதமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பராமரிப்பு தேவைகள் | 02 |
| 5. | **தொகுதி 05**<br>சிறுவர்களின் சவாலான நடத்தைகள் மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சிக்கல்களை முகாமைத்துவம் செய்தல் | 02 |
| 6. | **தொகுதி 06**<br>சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சம்பவ முகாமைத்துவம் பதிவுகளை பேணுதலும் | 02 |
| 7. | **தொகுதி 07**<br>தனிநபர் பராமரிப்புத் திட்டம் மற்றும் மீளிணைப்பு | 02 |
| 8. | **தொகுதி 08**<br>சுய-கவனிப்பு மற்றும் பராமரிப்பாளர்களுக்கான மன அழுத்த முகாமைத்துவம் | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | 15 |

## 4.1. சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதான கோட்பாடுகள்

**பாடநெறிக்கான விளக்கம்**

இப்பாடநெறி சிறுவர் உரிமைகள் துறை தொடர்பிலான ஓர் அறிமுகமாகும். இதன் அடிப்படை கருத்தேற்புகள், வரலாற்றுப் பின்னணி, மற்றும் சட்ட கட்டமைப்பு. இது சிறுவர்களிற்கு சேவையினை வழங்குவதற்கு அவசியமான ஆற்றல்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான விரிவான அறிவினை விருத்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கற்றல் குறிக்கோள்கள்:**

- பங்குபற்றுபவர்களுக்கு சிறுவர் விற்பனை பற்றி விழிப்புணர்வேற்படுத்துவது மற்றும் இதனால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவிசெய்தல்.
- பங்குபற்றுநர்களுக்கு சிறுவர் பற்றிய வரைவிலக்கணம் மற்றும் சிறுவர் உரிமைகள் என்றால் என்ன (விருத்தி செய்தலுக்கான உரிமை, உயிர் வாழ்வதற்கான உரிமை, பங்குபற்றலுக்கான உரிமை, மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை) என்பது பற்றி தெரியப்படுத்தல்.
- நிறுவன பராமரிப்பில் இருக்கும் சிறுவர்களின் உரிமைகளை உறுதிசெய்தல்
- அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும் அனைத்து சிறுவர்களிற்கும் உகந்த வகையிலான சூழலினை உருவாக்குதல்.

**பிரதான தலைப்புக்கள்**

### 4.1.1. சிறுவர் மற்றும் சிறுவர் உரிமைகளை வரையறுத்தல்

சிறுவர் என்ற பதத்தினை வரையறுக்கும் போது, ஐக்கிய நாடுகள் சபையின் தேசியப் பேரவையினால் 1989 ஆம் ஆண்டில் பொருள்கோடல் செய்யப்பட்ட வரைவிலக்கணமே சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக சிறுவர் என்ற பதமானது "ஏற்புடையதான சட்டத்தின் கீழ் முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலேயொழிய 18 வயதிற்கு கீழுள்ள ஒவ்வொரு மனிதனும் சிறுவர் எனப்பொருள்படுவர்" – (சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் - உறுப்புரை 1)

'சிறுவர்' என்ற பதத்தினை இலங்கையில் பல்வேறு சட்டங்கள், கட்டளை சட்டங்கள், மற்றும் தற்போது வலுவிலுள்ள கட்டளைகள் என்பன வெவ்வேறாக வரைவிலக்கணப்படுத்துகின்றன.

உதாரணங்கள்:

1. கல்வி கட்டளை சட்டம் - 16 வயதிற்கு குறைந்த சிறுவர்கள்
2. சிறுவர்கள் மற்றும் இளைஞர் சட்டம் - (16 வயதிற்கு குறைந்த சிறுவர்கள்)
3. பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொழில் கட்டளை சட்டம் - (16 வயதிற்கு குறைந்த சிறுவர்கள்)

சிறுவர்களின் உரிமைகள் என்பது வெறுமனே அவர்கள் சிறுவர்களாக இருப்பதன் காரணமாக அவர்களிற்கு கிடைக்கப்பெறும் உரிமைகளாகும். ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயமானது இத்தகைய உரிமைகளுக்காக பரந்தளவில் அனைத்துலப் பிரகடனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ் ஆவணமானது 54 உறுப்புரைகளைக் கொண்டுள்ளதுடன், பல்வேறு நாடுகளினால் கையொப்பமிடப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உறுப்புரைகள் 1-40 சிறுவர்களின் உரிமைகளை எடுத்துரைத்தல்

உறுப்புரைகள் 41-45 சமவாயத்தினை நடைமுறைப்படுத்தல், உறுதிப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட முறைப்பாட்டு முறைமை

உறுப்புரைகள் 46-54 சமவாத்திற்காக ஓர் அரசங்கத்தின் வகிபாகமானது வலிதானமதாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிருவாக அமைப்புக்கு அமைவானதாகவும் இருத்தல் வேண்டும் என்பது பற்றி குறிப்பிடுகின்றது.

சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகவே, இலங்கையானது சிறுவர் பட்டயத்தினை விருத்தி செய்துள்ளது.

இதற்கமைவாக சிறுவர்களின் உரிமைகள்:.

- உறுப்புரை 1 – சிறுவர் என்பதற்கான வரைவிலக்கணம்
- உறுப்புரை 2 – பாரபட்சமின்மை
- உறுப்புரை 3 – பிள்ளையின் சிறந்த நலன்
- உறுப்புரை 4 - உரிமைகளை நடைமுறைப்படுத்தல்
- உறுப்புரை 5 – பெற்றோர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் சிறுவர்களின் வளர்ச்சித் திறன்
- உறுப்புரை 6 - உயிர்வாழ்தலுக்கான உரிமை, பிழைத்து வாழ்தல் மற்றும் விருத்தி
- உறுப்புரை 7 - பெயர் மற்றும் தேசியம்
- உறுப்புரை 8 - அடையாளத்தை பாதுகாத்தல்
- உறுப்புரை 9 - பெற்றோர்களிடமிருந்து பிரிந்து செல்வதிலிருந்து பாதுகாத்தல்
- உறுப்புரை 10 – குடும்ப மீள் ஒன்றிணைப்பு
- உறுப்புரை 11 - கடத்தலிலிருந்து பாதுகாத்தல்
- உறுப்புரை 12 – கருத்துக்கான உரிமை
- உறுப்புரை 13 - கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்
- உறுப்புரை 14 - சிந்தனை செய்வதற்கான, மனசாட்சியை பின்பற்றுவதற்கான மற்றும் மதத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம்
- உறுப்புரை 15 – ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்
- உறுப்புரை 16 – தனியுரிமைக்கான பாதுகாப்பு
- உறுப்புரை 17 – பொருத்தமான தகவல்களை அணுகுதல்
- உறுப்புரை 18 – தேசாபிமானத்தினை ஊக்குவித்தல்
- உறுப்புரை 19 – பெற்றோரின் பொறுப்பு
- உறுப்புரை 20 – துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பிலிருந்து பாதுகாப்பு
- உறுப்புரை 21 – குடும்பம் அற்ற பிள்ளைகளை பாதுகாத்தல்
- உறுப்புரை 22 – தத்தெடுத்தல்
- உறுப்புரை 23 – அகதி சிறுவர்கள்
- உறுப்புரை 24 – மாற்றுத்திறனாளி சிறுவர்கள்
- உறுப்புரை 25 – சுகாதாரம் மற்றும் சுகாதார சேவை

உறுப்புரை 26 – சமூக பாதுகாப்பு அளவீடுகள்

உறுப்புரை 27 – வாழ்வதற்கான தராதரம்

உறுப்புரை 28 – கல்வி

உறுப்புரை 29 – கல்விக்கான இலக்கு

உறுப்புரை 30 – சிறுபான்மை இனத்தவர்களின் பிள்ளைகள்

உறுப்புரை 31 – ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் கலாசார நடவடிக்கைகள்

உறுப்புரை 32 – சிறுவர் தொழிலிலிருந்து பாதுகாப்பு

உறுப்புரை 33 – கடத்தல் மற்றும் போதைப் பொருட்களிலிருந்து பாதுகாப்பு

உறுப்புரை 34 – பாலியல் சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பு

உறுப்புரை 35 – பாலியல் சுரண்டல்கள் மற்றும் கடத்தலிலிருந்து பாதுகாப்பு

உறுப்புரை 36 – சித்திரவதை மற்றும் சுதந்திரம் பறிக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பு

உறுப்புரை 37 – ஆயுதம் தாங்கிய யுத்தத்திலிருந்து பாதுகாப்பு

உறுப்புரை 38 – மறுவாழ்வு பராமரிப்பு

உறுப்புரை 39 – சிறுவர் நீதிமன்ற (juvenile) நிருவாகம்

உறுப்புரை 40 – செயற்குழுவினை உருவாக்குதல்

சிறுவர் உரிமைகள் பற்றிய கல்வியானது 4 பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்படலாம். இந்த வகைப்பாடுகள் தெளிவுபடுத்த உதவினாலும் ஒவ்வொரு உரிமைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன.

| | |
|---|---|
| பாதுகாப்பு | உயிர்வாழ்தல் |
| அபிவிருத்தி | பங்குபற்றல் |

## 4.1.2. சிறுவர் உரிமைகளைக் கற்பதற்கான நோக்கம்

- உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட நோக்கில், சிறுவர்களிற்கு அவர்களின் உரிமைகள் வழங்கப்படுகின்றன என்பதனை உறுதிசெய்தல் அமைப்புக்களிலுள்ள ஊழியர்களின் பொறுப்பாகும்.
- சிறுவர்களிற்கு உகந்த சேவையினை வழங்கும் முகமாக அவர்களின் உரிமைகள் மற்றும் தகுதிகள் பற்றி விழிப்புணர்வு கொண்டிருத்தல் அவசியமாகும்.
- அமைப்பாக்கப்பட்ட சிறுவர்கள் சலுகைகளற்றவர்கள் மற்றும் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களுமாவர்.
- ஒரு பிள்ளையை சிறந்த குடிமகனாக மாற்றுவதற்கு அவர்கள் அவர்களது உரிமைகளை கொண்டிருப்பதனை உறுதிசெய்தல் வேண்டும். காரணம், சிறுவர் இன்று எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதானது அவர்களின் எதிர்காலத்தினை நேரடியாக பாதிக்கும்.
- உணவு மற்றும் போசணை போன்ற உடலியல் தேவைகள் மட்டுமன்றி அன்பு, அரவணைப்பு மற்றும் பங்குபற்றுதல் போன்ற உளவியல் தேவைகளினையும் பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும்.
- சிறுவர்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது அவர்களிடம் உருவாகும் பலவீனமான குணவியல்பினை இனங்காணல்.

- ஒன்றிணைந்து செயற்படுதலானது பிள்ளையொன்றின் ஒட்டுமொத்த விருத்திக்கும் பாரியளவில் பங்களிக்க முடியும் என்பதனை முன்னிலைப்படுத்திக் காட்டல்.
- சிறுவர் உரிமைகளிற்கு அமைவாக அனைத்து சிறுவர்களையும் சமமாக நடாத்துவதின் அவசியப்பாட்டினை வலியுறுத்துவதற்கு.
- அமைப்பாக்கப்படுத்தப்பட்ட சிறுவர்களை அவர்களையும் இணைத்துக்கொள்ளும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் அவசியத்தினை வலியுறுத்துவதற்கு.
- விருத்தியடைந்து கொண்டுவரும் குணவியல்பினாலும் மற்றும் வளர்ந்தோரின் வழிகாட்டலில் தங்கியிருக்கும் நபர்கள் என்றவகையிலும் அவர்கள் தாங்களாகவே சுயமாக தீர்மானங்களை எடுக்க முடியாது.

### 4.1.3. சிறுவர் உரிமைகள் தொடர்பான அடிப்படை கோட்பாடுகள் (CRC)

- பிள்ளையின் சிறந்த நலன் (உறுப்புரை 3)
- பாரபட்சமின்மை (உறுப்புரை 2)
- உயிர் வாழ்வதற்கான உரிமை, தப்பி வாழ்தல், விருத்தி (உறுப்புரை 6)
- கருத்து சுதந்திரம் (உறுப்புரை 12)

### 4.1.4. துஷ்பிரயோகத்தில் சிறுவர்கள் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக மாறுவதற்கான காரணங்களை அடையாளம் காணல்

**பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார, மற்றும் உளவியல் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.**

**சமூகக் காரணிகள்**

- பெற்றோர் பிரிந்து செல்லல்/விவாகரத்து/கவலை/புறக்கணிப்பு
- தங்கள் பிள்ளைகளின் தேவைகள், வளர்ச்சி மற்றும் குழந்தை வளர்ப்பு என்பன பற்றிய பெற்றோர்களின் அறியாமை.
- வறுமை மற்றும் வேலையின்மை போன்ற சமூக பாதக காரணிகள்..
- முறிவடைந்த குடும்பங்கள்/சிதறிய குடும்பங்கள்
- சமூகத்தில் வன்முறை
- அபாயகரமான சுற்றத்தவர்/சூழல்
- சிறுவர்களுக்கெதிரான வன்முறையின் சிக்கலான தன்மை பற்றி பெற்றோர்களின் அறியாமை.
- இணையம், கையடக்க தொலைபேசிகள், மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பற்றிய பெற்றோர்களின் அறியாமை.
- எதிர்மறையான பெற்றோர் - பிள்ளை உறவுமுறை/பாதக முறையிலான ஆசிரியர்களுக்கு இடையிலான தொடர்பு.

**பொருளாதார காரணிகள்**

- தாய் வெளிநாடு செல்லுதல்
- சிறுவர் தொழிலாளர்/கொள்முதல்
- குடும்ப வருமானம் மற்றும் செலவு என்பனவற்றை திட்டமிடல் பற்றிய குறைந்தளவான அறிவு
- விரைவில் பணம் சம்பாதிப்பதற்கான விருப்பம்
- குறைந்தளவான பௌதிக வசதிகள்

- சார்பு மனநிலை
- சொத்துக்கள் உரிமைக் கொள்வதில் உள்ள சிக்கல்கள்
- சமூக விரோதமான மற்றும் சட்ட விரோதமான முறையில் வாழ்தல்
- வறிய நிலை/நிரந்தரமான வருமானமின்மை போன்ற காரணிகளால் அழுத்தம்

**கலாசார காரணிகள்**

- அடையாள நெருக்கடி
- சமூக விதிகள், தீங்கு விளைவிக்கக் கூடிய சடங்குகள் மற்றும் கலாச்சார நடைமுறைகள்
- சாதி பிணக்குகள்
- திருத்துவதற்கான வழிமுறையாக உடல் ரீதியான தண்டணைகளை நம்புதல்
- பல்வேறு சமயங்களுடன் தொடர்புடைய தெளிவற்ற வழக்காறுகள் மற்றும் கலாச்சாரங்கள்.
- சிறுவர் திருமணம்
- சமூகத்தில் பால்நிலை பாரபட்சம்

**உளவியல் காரணிகள்**

- உணர்ச்சிக் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடு
- பிள்ளைகளினால் பெற்றோர்கள் பாரபட்சமாக நடாத்தப்படுதல்.
- மன நலம் மற்றும் பெற்றோர்களின் மனச் சோர்வு மற்றும் வேறு மன நல பிரச்சினைகள்.
- பெற்றோர்களின் மன அழுத்தம், கவலை, மற்றும் உளச் சோர்வு அல்லது வேறு உளவியல் பிரச்சினைகள்.
- குடும்ப வன்முறை மற்றும் பிணக்கு தொடர்பான வரலாறு
- சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பெற்றோர்கள்.
- தன் பிள்ளைகளிடமிருந்தான அதீத மற்றும் பொருத்தமற்ற எதிர்பார்ப்புகள்
- மாற்று தந்தை/தாயின் வன்முறைகளிற்கு பிள்ளைகள் ஆளாதல்
- சமூக விரோத நடத்தைகள்
- சுய மரியாதை
- தகைமைக் குறைபாடுகள்
- தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் மீதான பாரபட்சமான நடத்தைகள்

### 4.1.5. இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்களுக்காக தலையிடும் முறைமை

பிள்ளையின் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய தன்மையின் நிலையினை துல்லியமாக மதிப்பீடு செய்தல் அவசியமாகும். குறித்த பிள்ளை மீதான தலையீட்டினை சரியாக செய்ற்படுத்துவதற்கு அதன் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய தன்மையானது மிக குறைவானதா, நடுநிலையானதா, அல்லது உயர்வானதா என தீர்மானித்தல் அவசியமாகும்.

**மதிப்பீட்டு முறைகள்**

1. கவனிப்பு 2. நேர்காணல் 3. குழுக் கலந்துரையாடல் 4. பல்வேறு மாதிரிகள்

**மதிப்பீட்டுக் கருவிகள்**

1. குடும்ப கிளைப்படம் 2. வரலாற்று சுயவிவரம் 3. சுற்று சுழல் வரைபடம் 4. திறன் வரைபடம் 5. வாழ்க்கை அனுபவம்

கண்டறியப்பட்ட காரணிகளின் அடிப்படையிலேயே சிறுவர் மீதான தலையீடு மதிப்பிடப்படும்.

மிக இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்களிற்கு சம்பவ மாநாடுகள்/குடும்ப ஒன்று கூடல்கள் மற்றும் பல்துறைசார் அணுகுமுறையினூடாக பராமரிப்பு திட்டங்களை உருவாக்குவது முக்கியமென்பதுடன், மத்திம/குறைவான அளவிலுள்ள இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்களிற்கு தனிநபர் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல் என்பன முக்கியமாகும் (பயிற்றுவிப்பாளர்கள இத்தகு நுட்பங்கள் பற்றி தெரியப்படுத்த வேண்டும்).

பராமரிப்புத் திட்டங்கள் அல்லது தனியார் விருத்தி திட்டங்களை பின்தொடர்தல்/ ஒழுங்குபடுத்தலினூடாக மற்றும் அவற்றை தேவைக்கேற்ப திருத்தங்களை மேற்கொள்ளவதனூடாக இற்றைப்படுத்தப்பட்ட சேவையொன்றினை வழங்குதல்.

### 4.1.6. அமைப்பாக்கப்பட்ட சிறுவர்கள் மீதான சேவை வழங்குனர்களின் பொறுப்புக்கள்

இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்களிற்கு சேவைகளை வழங்கும் குழுவென்ற வகையில் அமைப்புக்களை சார்ந்த ஊழியர்களிற்கு அத்தகைய சிறுவர்கள் மீது விசேடமான கடப்பாடானது காணப்படுகின்றது. இவ்வமைப்புக்களின் ஊழியர்களிற்கு அனைத்து சிறுவர்களினது பௌதிக, உளவியல், சமூக மற்றும் ஆன்மீக தேவைகளை சமமான முறையில் பூர்த்திசெய்யும் தலையாய கடப்பாடு உள்ளது.

இதற்கமைவாக,

- இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களிற்கு சேவைகளை வழங்குவது தொடர்பான திறன்களை வளர்த்துக்கொள்ளல்.
- சிறுவர் உளவியல், நடத்தையினை வடிவமைத்தல், மற்றும் குழுப்பணி என்பன தொடர்பில் பயிற்சியளித்தல் மற்றும் அனுபவங்களை இடைமாற்றல்.
- சிறுவர்கள் ஏதேனும் காரணிகளின் அடிப்படையில் அமைப்பாக்கம் செய்யப்பட்டால் அவர்களை இயன்றளவில் விரைவாக சமூகமயப்படுத்தப்படுவதற்கான சிறப்பான பங்களிப்பினை ஆற்ற வேண்டும்.
- சமூகத்தில் நல்ல குடிமகன்களாக வாழ்வதற்கு அவசியமான திறமைகள் மற்றும் பயிற்சியினை சிறுவர்களிற்கு வழங்குதல்.
- அமைப்புக்களில் சிறுவர்கள் தங்கியிருக்கும்போது வாழ்க்கைக்கான திறன்களை முடியுமான வரையில் கற்றுக்கொடுத்தல்.
- இயலுமான போதெல்லாம் வெளிச் சமூகத்துடன் பழகுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சிறுவர் தொடர்பான விடயங்கள் தொடர்பாக தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளில் சிறுவர்களையும் இணைத்துக்கொள்ளல்.
- அமைப்புக்களில் உள்ள ஊழியர்கள் அங்குள்ள சிறுவர்களிற்கு முன்மாதிரியாகத் திகழ்வதனை உறுதிசெய்தல் வேண்டும்.
- அமைப்புக்களின் ஊழியர்களின் செயற்பாடுகளை இனங்காணல், அமுல்படுத்தல் மற்றும் தொடர்ந்து மீளாய்வு செய்தல்.
- சிறுவர்களின் வித்தியாசமான நடத்தைகள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இனங்காணப்படும் போது அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட்டு, தேவையான உதவிகள் பெறப்படல் வேண்டும்.

- பாடத்தினை விருத்திசெய்ய பங்களிக்க முடியுமானபோதெல்லாம் அவர்களின் அனுபவங்களையும் உட்சேர்ப்பதன் மூலமாக சிறுவர்களிற்கு வழங்கப்படும் சேவையின் தரத்தினை மேம்படுத்தல்.
- சிறுவர்களின் எதிர்கால வெற்றியினை உறுதிசெய்யவும் மற்றும் அவர்களின் சட்டரீதியான பாதுகாவலனாக எல்லா நேரங்களிலும் செயற்படுவதற்காகவும், தொடர்ச்சியான கல்வி மற்றும் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.
- அமைப்புகளின் குழு ஒன்று கூடல்களில் ஆர்வமாக பங்குபற்றுதல்.

### 4.1.7. பிள்ளைகளின் பொறுப்புகள்

சிறுவர்களிற்கு அவர்களின் உரிமைகளை மட்டுமே கற்றுக் கொடுப்பதனால் அவர்கள் தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை தவிர்த்து தமது கோரிக்கைகளில் மட்டுமே குறியாக இருக்கும் குழுக்களாக மாறிவிடுவார்கள். ஆகவே, சிறுவர்களின் மனநிலையினை அறிதல் மற்றும் அவர்களின் வயதுக்கு ஏற்றதான பொறுப்புகள் பற்றிய புரிந்துணர்வினை விதைத்தல்.

- போதுமான கல்வியை மற்றும் தொழில்முறைப் பயிற்சியினைக் கொண்டிருத்தல்.
- தனிப்பட்ட விடயங்களைக் கையாளுதல், தனிப்பட்ட சுகாதாரத்தை பேணுதல் மற்றும் தன் சுற்றுச்சூழலினை சுத்தமாக வைத்திருத்தில் (வயதிற்கு உகந்த வகையில்)
- உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல் - மற்றவர்களிற்கு தீங்கு விளைவிக்காத வகையில் நடந்து கொள்ளுதல்.
- உடலைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு (நல்ல மற்றும் கெட்ட தொடுகை பற்றி அறிந்திருத்தல்)
- பொருட்கள் மற்றும் சேவைகளை சிக்கனமாகவும் கவனமாகவும் கையாளும் பழக்கத்தினை மற்றும் பொறுப்புணர்வினை விதைத்தல்.
- அமைப்பினை ஒருவரின் இல்லமாக நடாத்துதல் மற்றும் அமைப்பின் ஊழியர்கள் மற்றும் ஏனைய அங்கத்தவர்களை ஒரே குடும்பமாக கருதுதல்.

### 4.1.8. அமைப்புகளில் உள்ள சிறுவர்களின் வகைப்பாடுகளினை இனங்காணல்

சிறுவர்கள் அன்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படுகின்ற தனிநபர்கள் என்ற வகையில் சிறுவர்கள் அமைப்பாக்கப்படுத்தப்பட்டிருப்பினும், அவர்கள் ஒரே வகைப்பாட்டிற்குள் அடங்குவதில்லை.

- அனாதரவற்றோர்
- கைவிடப்பட்ட சிறுவர்கள்
- ஆதரவற்ற சிறுவர்கள்
- சட்டத்திற்கு முரணான சிறுவர்கள்
- பாதிக்கப்பட்ட சிறுவர்கள்
- கண்காணிக்கப்படாத சிறுவர்கள்

### 4.1.9. அமைப்பிற்குள்ளாக பல்துறை அணுகுமுறையில் சிறுவர்களிற்கு சேவை செய்தல்

சிறுவர்களிற்கான சேவைகள் நிறைவேற்றப்படும் முகமாக சிறுவர்கள் முகங்கொடுக்கும் அனைத்து பிரச்சினைகளையும் இனங்கானும் வகையிலான பன்முகமான தலையீட்டினை முன்னெடுப்பது அவசியமாகும். இது தொடர்புபட்ட அனைத்து நிலையங்கள், அலுவலர்கள், மற்றும் அமைப்புக்களுடன் நல்லுறவு பேணப்படுவதனை தேவைப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக,

| | |
|---|---|
| பிணக்கு / தீர்வு | இடையீடு |
| கல்வியினைப் பெறல் | பாடசாலை / கல்வியமைச்சு / பிரதேச செயலாளர் |
| பிறப்புச் சான்றிதழ் இன்மை | பிரதேச செயலாளர் / பதிவாளர் நாயகத் திணைக்களம் / பொது வைத்தியசாலை |
| எழுத்துக்களை அடையாளம் காண்பதில் சிரமம் | இலக்கிய வகுப்புகள்/ சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் / ஆதரவாளர்கள் |
| மீளிணைப்பு | அமைப்புக்களின் குழுக்களின் கூட்டிணைக்கும் அதிகாரிகள் / அமைப்புக்கள் |
| சுகாதார பிரச்சினைகள் | பொது வைத்தியசாலை / அரசு சாரா நிறுவனங்கள் |
| சிறுவர் கழகங்களில் பற்குபற்றல் | பிரதேச செயலாளர் / மாகாண நிருவாக திணைக்களம் |
| வீடற்ற நிலை / வரவு இல்லாமை / வருமான ஆதாரம் இன்மை | அரசு சாரா நிறுவனங்கள் / ஆதரவாளாளரர்கள் / நன்கொடையாளர்கள் |

### 4.1.10. சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில் சிறுவர்களின் பங்குபற்றலுக்கான உரிமைகளை எவ்வாறு உறுதி செய்வது

- சிறுவர்களுக்கான முடிவெடுத்தல் தொடர்பான விடயங்களில் சிறுவர்களை ஈடுபடுத்துதல்.
- நிலையங்களில் நடாத்தப்படும் நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்துதல். (உ-ம்: சமையல் குறிப்பு தயார்படுத்தல், தொண்டு நிகழ்வுகளில் பங்குபற்றுதல், வெளியில் செல்லுதல்).
- நிலையத்திற்குள்ளாக வயதிற்கு தகுந்த பொறுப்புகளை வழங்குதல் (தண்டனையை மையமாக அன்றி ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும்)
- சிறுவர் கழகங்கள், இளைஞர் கழகங்கள், மற்றும் இலக்கிய சங்ககங்கள் போன்ற சிறுவர்களுக்கான நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.
- வருகையாளர்களுடன் நல்லுறவினை விருத்திசெய்ய சிறுவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- விரும்பத்தகாத செயற்பாடுகளில் சிறுவர்களை பலவந்தமாக செயற்படுத்தல் கூடாது.
- சிறுவர்களின் கண்ணியத்தினை நிலைநிறுத்தும் வகையில் நடந்துகொள்ளல். (வெளியிடங்களில் சிறுவர்கள் உணவு பெறும் போது.'.தொண்டு அல்லது நன்றிக்கடன் தெரிவித்தல் போன்ற வார்த்தைப்பிரயோகங்களை சிறுவர்கள் மற்றும் சமூகங்கள் தவிர்ப்பதற்கு அனுமதியளிதல்.)
- பரந்து பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சிறுவர்களுடன் பழகுவதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- அமைப்பின் நிர்வாகமுறைமைக்குள் சிறுவர்களின் பிரதிநிதித்துவத்தினை உறுதிசெய்தல்.
- சாத்தியமான பொழுதுகளிலெல்லாம் மேற்பார்வையின் கீழாக குழுக்களில் இணைந்து செயற்படும் வாய்ப்புகளை வழங்குதல்.
- சிறுவர்களிற்கு தலைமைப் பதவிகளை வகிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள்**

சிறுவர் உரிமைகள் சமவாயம். https://www.ohchr.org/Documents/ProfessionalInterest/crc.pdf

மேலதிகப் பின்னேடுகள்.

https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/optional-protocol-convention-rights-child-sale-children-child

CRC உள்நாட்டு அறிக்கைகள் / இறுதி அவதானிப்புகள்.

https://www.mfa.gov.lk/wp-content/uploads/2018/03/CRC-4.pdf

சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் பற்றிய வழிகாட்டுதல் குறிப்புகள்.

https://resourcecentre.savethechildren.net/pdf/Guidance-Note-on-the-Identification-Protection-and-Referral-of-Child-Victims-of-Trafficking.pdf/

சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை நேர்காணல் செய்யும் சட்ட அமுலாக்கத்துறை அதிகாரிகளுக்கான வழிகாட்டுதல்கள்.

https://resourcecentre.savethechildren.net/pdf/Guidelines-for-Law-Enforcement-Officials-on-Interviewing-Child-Victims-of-Trafficking.pdf/

அனைத்து விதமான துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவ முகாமைத்துவம்.

https://bettercarenetwork.org/sites/default/files/2022-02/English_Report.pdf

## 4.2. சட்டக் கட்டமைப்பு

**பாடநெறி விளக்கம்:**

அரச அல்லது அரசுசாரா சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் முகாமைத்துவம் மற்றும் அதன் பகுதிகள் என்பன சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டு அடையாளங் காணப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு அளப்பரிய சேவையாற்றுபவர்கள். இத்தகைய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்களிற்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பினை வழங்குவதே அங்குள்ள ஊழியர்களின் குறிப்பாக சிறுவர் பராமரிப்பாளர்களின் தலையாய கடமையாகும். விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சேமநலன் தொடர்பிலாக நன்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய சட்டங்கள் உள்ளன. சிறுவர் பராமரிப்பாளர்கள் உட்பட அனைத்து குடிமக்களும் இத்தகைய சட்ட கட்டமைப்பினால் பிணிக்கப்பட்டவர்களாவர். இது சிறுவர்கள் அவர்களின் உரிமைகளை எவ்வித தங்கு தடையுமின்றி அனுபவிப்பதற்கு இயலச்செய்வதுடன், இத்தகைய உரிமைகள் மீறப்படும் போதோ அல்லது துஷ்பிரயோகப்படுத்தப்படும் போதோ அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் அதே நேரம் அவர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பபதற்கு இயலச்செய்கின்றது. அதேவேளை விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் பற்றிய தெளிவான புரிதலானது, சிறுவர் பராமரிப்பாளர்கள் அவர்களின் கடமைகளைப் புரியும்போது சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் பற்றிய சரியான அறிவு மற்றும் புரிதலினை மேம்படுத்தும்.

இப்பாடநெறியானது சிறுவர் உரிமைகள் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்கள், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள், சட்ட அமுலாக்க நடபடிமுறைமை, நிவாரணப் பொறிமுறைகள் மற்றும் சிறுவர்களுக்கான சேவைகள், ஆற்றுப்படுத்தல் செயல்முறைகள், மற்றும் சட்ட மீறல் தொடர்பாகவுள்ள தண்டனைகள்/தண்டப்பணம் என்பன பற்றி சிறுவர் பராமரிப்பாளர்களிற்கு அடிப்படையான அறிவு மற்றும் புரிதலை பெற்றுக்கொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடநெறியில் பங்குபற்றுபவர்கள் இலங்கையில் சிறுவர் விற்பனை மற்றும் அதன் நவீன போக்குகள் பற்றி அறிந்து கொள்ள மற்றும் வரையறுக்க முடியும். மேலும் பங்குபற்றுபவர்கள் சிறுவர் பாதுகாப்பு பற்றிய பல்வேறுபட்ட கோட்பாடுகள் மற்றும் அணுகுமுறைகள் பற்றி அடையாளங்கான மற்றும் பட்டியலிட முடிவதுடன், சம்பவ முன்விளக்கம், விளக்கம் மற்றும் சம்பவம் முடிவடைந்த காலப்பகுதி ஆகியவற்றின் போது விற்பனையால் பாதிப்புற்ற சிறார்களுக்கு சிறப்பான சேவையினை வழங்குவது எவ்வாறு என்பது பற்றியும் அறிவினைப் பெறுவர்.

**கற்றல் குறிக்கோள்கள்:**

- தொழிலில் ஈடுபடும் போது சிறுவர் விற்பனை மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அடையாளம் காணல் மற்றும் அங்கீகரித்தல்.
- இலங்கையில் சிறுவர் விற்பனை மற்றும் இவ்வொழுங்குபடுத்தப்பட்ட குற்றம் தொடர்பில் அடையாளங்காணலும் அதனை வகைப்படுத்தலும்.
- சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட சிறுவர்களுக்கு உதவுதல் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளை அடையாளங்காணல் மற்றும் பட்டியலிடல்.

**பிரதான தலைப்புகள்**

### 4.2.1. தனிநபர் மனித விற்பனை மற்றும் சிறுவர் விற்பனைக் குற்றம் பற்றிய அடிப்படை புரிதல்

மனித வியாபாரமானது (TIP) புரிந்துகொள்வதற்கு சற்று கடினமானது. இது நவீனகால அடிமைத்தனமாகும். இது பாதிக்கப்பட்டவர்கள் மீது மற்றும் சமூகத்தின் மீது நாட்பட்ட பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான குற்றமென்பதுடன், இது வேறு சில தீவிரமான குற்றங்களிற்கும் வழிவகுக்கும்.

பாதிக்கப்படும் சிறுவர்கள் அவர்களின் வயது, முதிர்ச்சியின்மை மற்றும் அனுபவக் குறைவு என்பனவற்றினால் இலகுவில் பாதிக்கப்படுபவர்களாக இருப்பதுடன் துஷ்பிரயோகமான நடத்தைகளினால் பாரதுரமான விளைவுகளையும் எதிர்கொள்ளக்கூடும். நாட்பட்ட உடல், உள மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் போசணைக்குறைபாடு என்பன நீண்டகாலமான உளவியல் பாதிப்பினை உண்டாக்குவதுடன், உள மற்றும் உளவியல் வளர்ச்சிக்கு தடையாக அமைகின்றது.

இத்தகைய காரணிகளை அடையாளங் காண்பதற்கு முதலில் சிறுவர் விற்பனை என்றால் என்ன என்பதனையும், அதன் வெவ்வேறு வகையான சுரண்டல்கள் பற்றிய புரிதல் அவசியம். கடத்தலை மேற்கொள்பவர்கள் தங்களிடம் சிக்கியுள்ளவர்களை கட்டுப்படுத்த பிரயோகிக்கும் வேறுபட்ட வழிமுறைகளை புரிதல் அவசியமாகும். கடத்தலின் விளைவுகள் வெவ்வேறு வகைப்படும் என்பதுடன், பால்நிலை, சுரண்டல்களின் வகைகள், அனுபவத்தின் காலப்பகுதி மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீது உபயோகிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைகள் போன்ற காரணிகளின் மீதும் தங்கியுள்ளது என்பதுடன் அபாயங்கள் மற்றும் விளைவுகள் அதற்கேற்ப வேறுபடும்.

**கற்பிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்:**

- மனித வியாபாரம் மற்றும் சிறுவர் விற்பனை என்றால் என்ன?
- மனித வியாபாரத்தில் சுரண்டல்களின் வகைப்பாடுகள் மற்றும் முறைமைகள்
- பாதிக்கப்பட்டவர்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் வழிமுறைகள்
- மனித வியாபாரம் அபாயம் மற்றும் விளைவுகள்
- மனித வியாபாரம் பற்றிய மூட நம்பிக்கைகள் மற்றும் பிறழ் கருத்துக்கள்

### 4.2.2. சிறுவர் விற்பனை தொடர்பில் ஏற்புடையதாகும் சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய சட்டங்கள்

மனித வியாபாரம் என்பது பெரும்பாலும் நவீன கால அடிமைத்தனம் என்றே அழைக்கப்படுகின்றது. பிற்காலத்தில் காணப்பட்ட அடிமை வியாபாரமானது ஏனைய மனிதர்களை சுரண்டுவதனால், இது பெரும்பாலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், ஒழுக்கமற்ற செயலாகவும் கருதப்பட்டது. அடிமைத்தனம் மற்றும் அடிமை வர்த்தகத்தினை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடிமை வர்த்தகம் தொடர்பாக சர்வதேச சட்டம் மற்றும் கொள்கை விருத்திக்கு வழிவகுத்தது. இத்தகைய அடிமைத்தனத்திற்கு எதிரான சர்வதேச பொருத்தனைகள், மனித வியாபாரத்திற்கு எதிரான சர்வதேச சட்ட கட்டமைப்பின் அபிவிருத்திக்கு வழிவகுத்தன.

**கற்பிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்:**

- சிறுவர் உரிமைகளில் ஐ.நா பொருத்தனையின் வகிபாகம்.
- தனிநபர், விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர் விற்பனையை தடுத்தல், குறைத்தல் மற்றும் தண்டித்தலுக்கான ஐ.நா வின் பின்னேடு

- பெண்கள் மற்றும் சிறுவர்களை விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்த மனித வியாபாரத்தில் ஈடுபடுத்துவதற்கெதிராக செயற்படல் மற்றும் தடுத்தல் தொடர்பான சார்க் பொருத்தணை.
- 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கையின் தண்டனை (திருத்தச்) சட்டக்கோவை என்பனவற்றின் பொருத்தப்பாடு.

### 4.2.3. சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் விற்பனை தொடர்பான சட்டம் மற்றும் கொள்கைக் கட்டமைப்புக்குள் சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்குனர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை விளங்கிக்கொள்ளல்

சிறுவர் உரிமைகளானவை ஐ.நா பின்னேடுகள் சர்வதேச பொருத்தணைகள் மற்றும் இலங்கையின் சட்டங்களின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளன சர்வதேச மற்றும் இலங்கை சட்டங்கள் என்பனவற்றுக்கமைவாக தொடர்புபபட்ட அதிகாரிகள்.்.அமைச்சுகள் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் விற்பனை பற்றிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை விருத்திசெய்துள்ளனர். இச்சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்குனர்களின் அவசியப்பாட்டினை அடையாளங்கண்டுள்ளதுடன், அதற்கமைவாக அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை பிரித்துள்ளது. இத்துறையில் பணிபுரிபவர்கள் சிறந்த சேவையினை வழங்குவதற்காக சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் விற்பனை பற்றிய அடிப்படைப் புரிதலைக் கொண்டிருப்பதுடன், உணர்திறன் மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். சிறுவர்களிற்கு உதவி மற்றும் சேவையினை வழங்குபவர்கள் பிள்ளையின் சிறந்த நலனை பாதுகாப்பதற்கு சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் விற்பனை என்பன தொடர்பான முக்கிய காரணிகள் பற்றி சரியான புரிதல் மற்றும் உணர்திறன் கொண்டவர்களாக சிறுவர்களிற்கு உதவி மற்றும் சேவையினைப் பெற்றுக் கொடுப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

**கற்பிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்:**

- சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்குனர்களின் வேறுபட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்களை விளங்குதல்.
- புரிந்துரை செயன்முறை மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பரிந்துரைத்தல் தொடர்பான பிரதான காரணிகள்.

### 4.2.4. உலகளாவிய ரீதியில் மற்றும் உள்நாட்டில் சிறுவர் விற்பனை பற்றிய பிரச்சினையின் அளவு

மனித வியாபாரத்தின் பரப்பு மற்றும் அளவினை மதிப்பிடுவது மிகவும் கடினமான விடயம். பாதிக்கப்பட்டவர்களினை அடையாளம் காணும் செயற்பாட்டின் போது, பெரும்பாலானவர்கள் அடையாளங் காணப்படாமல் போதல், அடையாளங் காணப்பட விருப்பமற்றவர்களாக இருத்தல், அல்லது அத்தகைய சூழ்நிலையில் தொடரந்து வாழ்வதற்கு முடிவு செய்தவர்களாக இருத்தல் போன்ற சவால்கள் காணப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டு கணிப்பின் போது உலகளாவிய ரீதியில் சுமார் 53 மில்லியன் மக்கள் இத்தகைய நவீன கால அடிமைத்தனத்தின் கீழ் வாழ்ந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் 28 மில்லியன் மக்கள் பலவந்தமாக தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 22 மில்லியன் மக்கள் பலவந்த திருமணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெண்கள், சிறுவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாகக் கருதப்படுகின்றனர்.[1] நவீன அடிமைத்தனத்தில் ஈடுபடுத்தப்படடுவரும் 12 மில்லியனிற்கும்

[1] வோக் ஃப்ரீ பவுன்டேசனால் வெளியிடப்பட்ட உலகளாவிய அடிமை அட்டவணை https://www.walkfree.org/resources/

அதிகமானோர் சிறுவர்கள் மற்றும் பெண்கள் என்பதுடன், இதன் மொத்த எண்ணிக்கையில் அரைவாசிப் பேர் சிறுமிகளாவர்.

2020 இல் சர்வதேச தொழிலாளர் அமைப்பானது 160 மில்லியன் சிறுவர்கள் குழந்தைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், கொவிட் 19 இன் விளைவாக மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிப்புற்றிருந்ததாக மதிப்பீடு செய்துள்ளது.[2]

போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் சம்பவம் குறித்த சாராம்சங்களின் பகுத்தாய்வின் படி, மனித வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் பெண்கள் மற்றும் குறிப்பாக பெண் பிள்ளைகளின் மீதே அதிகமான வன்முறையினை கையாள்வதனை அடையாளம் காண முடிகின்றது. இந்த சம்பவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள், அவர்கள் எவ்வயதினராகவிருந்தாலும் சரி அவர்கள் ஆண்களை விடவும் மூன்று மடங்கு அதிகமாக உடல் ரீதியாக துன்புறுத்தப்படுவது அல்லது பாரதூரமான வன்முறையினால் (பாலியல் வன்முறை உட்பட) பாதிக்கப்படுவதனைக் கண்டறிய முடிகின்றது. இத்தரவுகளின் படி வளர்ந்தோரை விடவும் (பெண் மற்றும் ஆண்) சிறுவர்கள் (பெண் மற்றும் ஆண் பிள்ளைகள்) 1.7 மடங்கு அதிகமாக உடலியல் மற்றும் பாரதூரமான துன்புறுத்தலுக்கு உள்ளாவதாக தரவுகள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் பெண்கள், ஆண்களை விடவும் 1.5 மடங்குக்கும் அதிகமாக துன்புறுத்தப்படுகின்றனர். இது எவ்வகையான குற்றத்துடன் தொடர்புபட்டது அல்லது எவ்வகையான சுரண்டல் என்பதனைத் தாண்டி அனைத்து பிராந்தியங்களிற்கும் மற்றும் பிரதேசங்களிற்கும் பொருந்துகின்றது.[3]

இலங்கையில் அறிக்கைகள் மற்றும் ஆய்வுகளின் படி உடற் குறைபாடுகள் உள்ள அல்லது பின்தங்கிய சமூகங்களைச் சார்ந்த சிறுவர்கள் மற்றும் தனிநபர்கள் எவ்விதம் இலங்கையின் பாரிய நகரங்களில் எவ்விதம் யாசகம் கேட்க அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் (போதை பொருள் கடத்தல் உட்பட) பலவந்தமாக ஈடுபடுத்தப்படுவது பற்றி அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. வீட்டுப் பணியாளர்களாகப் கொழும்பில் பணிபுரியும் சிறுவர்கள், பெரும்பாலும் மலையகப்பிரதேசத்திலிருந்து வருபவர்கள் உடல், உள மற்றும் பாலியல் நீதியான துஷ்பிரயோகங்களிற்கு உள்ளாதல், சம்பளப் பணம் வழங்கப்படாமை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழான சிறுவர் விற்பனை தொடர்பான குறிகாட்டிகளாகக் கொள்ளலாம். அறிக்கைகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் சிறிய கடைகள், சிறிய மற்றும் முறைசாரா தொழிற்துறைகள் மற்றும் தொழிற் சந்தைகளில் ஆட்கடத்தல் காரர்களினால் சிறுவர்கள் தொழில் நிமித்தம் எவ்விதம் சுரண்டப்படுகின்றனர் என்பதனைக் காண முடிகின்றது,

சிறுவர் பாலியல் சுற்றுலாத்துறை தொடர்பில் சேவ் த சில்ரன் அமைப்பினால் 2020 இல் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் அடிப்படையில்[4] பெரும்பாலான சிறுவர்கள் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல் அல்லது போதைப்பொருள் பாவனை மீதான தூண்டுதல் போன்ற காரணிகளினாலேயே சிறுவர் விற்பனை செயன்முறைக்கு ஆளாகின்றனர். பின்னர் சிறுவர்கள் அவர்களுக்கு பழக்கமான நபர்களால் நயவஞ்சகமாக ஏமாற்றப்பட்டு, அச் சிறுவர்கள் வாழும் பிரதேசத்திற்குள்ளேயே அவர்கள் பாலியல் தொழிலுக்கு அமர்த்தப்பட்டு பின் சர்வதேச சுற்றுலாத்துறைக்குள் பாலியல் தொழிலுக்காக விற்கப்படுகின்றனர். மேலும் பணியுரிபவர்களை தமது கடன்களுடன் இணைத்து அவர்களையும் அல்லது சிலவேளைகளில் அவர்களின்

---

2 குழந்தைத் தொழிலாளர்: உலகளாவிய மதிப்பீடுகள் 2020: போக்குகள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் பாதை - UNICEF/ILO ஆகியவற்றின் கூட்டு வெளியீடு.

3 ஆட்கடத்தல் பற்றிய உலகளாவிய அறிக்கை 2022 -UNODC - https://www.unodc.org/unodc/en/data-and-analysis/glotip.html

4 இலங்கையில் சுற்றுலாத் துறையில் சிறுவர்களை பாலியல் தொழிலுக்காக கடத்தல் - பீரிஸ். பி. 2021 சேவ் த சில்ரன் மற்றும் IOM, கொழும்பு.

குடும்பங்களையும் கூட மற்றுமொரு தொழில்தருனரிற்கு அடமானம் வைப்பதுடன், இதுவும் ஒரு வகை பலவந்தமாக தொழிலில் அமர்த்தும் காரணியாக அமைகின்றது.

**கற்பிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்:**

- சிறுவர் விற்பனை தொடர்பான சர்வதேச நிலைமை
- இலங்கையில் சிறுவர் விற்பனை பற்றிய தற்போதைய நிலைமையினை புரிதல்

### 4.2.5. சிறுவர் விற்பனையில் தாக்கம் செலுத்தும் வெளித்தள்ளும் மற்றும் உள்ளீர்க்கும் காரணிகள் மற்றும் சிறுவர் விற்பனையின் புதிய போக்குகள்

மனித வியபாரக் குற்றம் மற்றும் பாதிக்கப்படுபவர்கள் எவ்வாறு தொடர்ச்சியாக அமர்த்தப்படுகின்றனர் மற்றும் சுரண்டல்களுக்கு உள்ளாகின்றனர் என்பதனை சரியாகப் புரிந்து கொள்ளவதற்கு, நபரொருவர் மனித வியபாரத்தின் கேள்வி மற்றும் அதனை வழங்கும் முறைமை பற்றி புரிந்துகொள்ளல் வேண்டும். மனித வியாபாரத்தினால் பெறப்படும் பாரியளவிலான இலாபமானது, மலிவான மற்றும் சுரண்டல்களுடன் கூடிய தொழிலினை மனித வியபாரத்தில் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய மக்களைத் தள்ளி தொடர்ந்து நடாத்துவதால் பெறப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக மனித வியாபாரமானது யுத்தம், இயற்கை அனர்த்தம் மற்றும் பொருளாதார வீழ்ச்சி போன்ற காரணிகளினால் அதிகரித்துவந்துள்ளது. பொதுவாக ஆட்கடத்தல்காரர்கள் பாதிக்கப்படுபவர்களின் வறுமை, குடும்ப வன்முறை, கல்விக்கான மற்றும் குடும்பத்தில் ஆதரவின்மை, வீடற்ற நிலை, உடல் அல்லது உளக் குறைபாடு, புலம் பெயர்வு மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகவிருத்தல் போன்ற காரணிகளை தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்வர். கைவிடப்பட்ட அல்லது துஂபிரயோகம் செய்யக்கூடிய குடும்பங்களிலிருந்து வந்த சிறுவர்களும் இதற்கு மேலாக இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருப்பர்.

**கற்பிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்:**

- சிறுவர் விற்பனை தொடர்பான வெளித்தள்ளுகின்ற மற்றும் உள்ளீர்க்கின்ற காரணிகள்
- சிறுவர் விற்பனை தொடர்பான புதிய போக்குளை இனங்காணல்
- சிறுவர் விற்பனைக்கான சமூக விரயம்

### 4.2.6. சிறுவர் விற்பனைக் குற்றத்தின் அங்கங்கள்

தனி நபர் ஒருவர் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவரா என்பதனை இனங்காண்பதற்கு சிறுவர் விற்பனை என்றால் என்ன என்பதற்கான சட்ட வரைவிலக்கணத்தை விளங்குதல் அவசியமாகும். அடையாளங்காணும் முறைமையை புரிவதற்கு சிறுவர் விற்பனை பற்றிய சர்வதேச மற்றும் உள்நாட்டு வரைவிலக்கணம் பற்றி பங்குபற்றுபவர்கள் தெளிவான புரிதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தனிநபர், விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர் விற்பனையினை தடுத்தல், குறைத்தல் மற்றும் தண்டித்தலுக்கான 2000 இன் ஐ.நா வின் பின்னேட்டின் உறுப்புரை 3இ ஆனது சிறுவர் விற்பனையை வரையறுக்கும் உட்பிரிவுகளை வழங்குகிறது.

தேசிய அளவில் 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனை சட்டக் கோவையின் பிரிவு 360 C (1) (c) ஆனது ஐ.நா வின் மனித வியாபாரத்தில் தொடர்பான பின்னேட்டிலுள்ள வரைவிலக்கணத்துடன் இணங்கும் வகையிலாக மனித வியாபாரக் குற்றத்தினை வரையறுத்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட வரைவலக்கணத்தின்படி, சிறுவர் விற்பனையை தீர்மானிக்க ‘செயல்’ மற்றும் சுரண்டலுக்கான காரணி என்பன மட்டுமே எண்பிக்கப்படல் வேண்டும். வயது வந்தோர்களுடனான விடயத்தில் சம்மதம் பெறுவதற்கு பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் நிறுவப்பட வேண்டிய அவசியமில்லை.

**கற்பிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்:**

- தனி நபர், விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் விற்பனையை தடுத்தல், குறைத்தல் மற்றும் தண்டித்தலுக்கான ஐ.நா வின் பின்னேட்டின் உறுப்புரை 3இ.
- 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கையின் தண்டனை (திருத்தச்) சட்டக்கோவை.
- சிறுவர் விற்பனையின் கூறுகள்

## 4.2.7. சிறுவர் பாதுகாப்பு மற்றும் விற்பனையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆதரவு தொடர்பான புறநிலைக் கொள்கைகள் மற்றும் நோக்குகள்

மனித விற்பனைக் குற்றத்தின் அடையாளங்காணல் மற்றும் திரையிடல் செயன்முறையின் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வகிபாகம் முக்கியமானது. பிரதானமாக பதிலளிப்பவர்களிற்கு பாதிக்கப்பட ஒருவர் முக்கியமான தகவல்களை வழங்க முடியுமென்பதுடன், அது அவர்களின் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படவும் முடியும். பாதிக்கப்பட்ட சிறுவரை சரிவர ஒத்துழைக்கச் செய்ய உதவிசெய்வதற்கு அவர்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்தல் அவசியமாகும். பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் வேலைசெய்யும் போது குறிப்பிட்ட அதிகாரிகள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் பிள்ளையின் சிறந்த நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டுமென்பதுடன், தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் சிறுவர்களின் பங்குபற்றல் மற்றும் அவர்களின் நோக்கு என்பனவற்றின் அத்தியாவசியத்தினையும் அவதானத்திலெடுத்தல் வேண்டும்.

பிள்ளையின் சிறந்த நலன் பற்றி ஏற்பாடு செய்யும் புறநிலைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிக் கோட்பாடுகள் என்பன சிறுவர் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**கற்பிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- புறநிலைக் கொள்கைகள்
- உரிமைகளை அடிப்படையாக கொண்ட நோக்கு
- பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட நோக்கு
- பல்துறை நோக்கு
- சமூகத்தினை அடிப்படையாக கொண்ட நோக்கு

**பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள்:**

நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மாநாட்டிற்கு துணைபுரியக்கூடிய (UNTOC) மனித வியாபாரம், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர் விற்பனையைத் தடுப்பதற்கும், ஒடுக்குவதற்கும், தண்டிப்பதற்குமான நெறிமுறை (the Palermo Protocol) https://www.unhcr.org/media/protocol-prevent-suppress-and-punish-trafficking-persons-especially-women-and-children-1

சிறுவர் உரிமைகள் மீதான ஐ.நா நெறிமுறை – 1989 https://www.ohchr.org/sites/default/files/crc.pdf

சிறுவர் விற்பனை, சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர் ஆபாசப் படங்கள் மீதான தேர்வு நெறிமுறை (OPSC) 2000 https://www.ohchr.org/sites/default/files/Documents/ProfessionalInterest/crc-sale.pdf

குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்கள் தொடர்பான 1999 ஆம் ஆண்டின் ILO மாநாடு (C 182) https://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_norm/---declaration/documents/publication/wcms_decl_fs_46_en.pdf

குறைந்தபட்ச வயது தொடர்பான 1973 ஆஷ் ஆண்டின் ILO மாநாடு (C138) https://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_norm/---ipec/documents/publication/wcms_ipec_pub_30215.pdf

விபச்சாரத்திற்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை விற்பனை செய்வதைத் தடுப்பது மற்றும் எதிர்த்துப் போராடுவது தொடர்பான SAARC மாநாடு (2002) https://childprotection.gov.lk/images/pdfs/child-laws/saarc-convention-on-preventing-and-combating-trafficking-in-women-and-children-for-prostitution-1.pdf

2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தப்பட்டது). chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.vertic.org/media/National%20Legislation/Sri%20Lanka/LK_Penal_Code_Amend_Act_No_16_2006.pdf

CYPO – 1939 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்கச்சட்டம். chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.socialproba.cp.gov.lk/download/ord_1939_48_en.pdf

இலங்கையில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் போன்றவற்றுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP)

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான வழிகாட்டுதல் குறிப்புகள், இலங்கை. https://resourcecentre.savethechildren.net/pdf/Guidance-Note-on-the-Identification-Protection-and-Referral-of-Child-Victims-of-Trafficking.pdf/

மனித உரிமைகள் மற்றும் மனித வியாபாரம் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள், மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/Traffickingen.pdf

## 4.3. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய விதமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல்

**பாடநெறிக்கான விளக்கம்**

சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் ஊழியர்கள் சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காணுவதிலும் இச்சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு தொடர்பான விடயங்களிலும் மிக முக்கியமான வகிபங்கினைக் கொண்டுள்ளனர். பல்வேறு காரணயங்களுக்காக சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள இச்சிறுவர்களில், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இப்பராமரிப்பாளர்களால் இனங்காணக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதுடன், அவர்களுக்கு அவசியமான உதவிகள் சரியான நேரத்தில் கிடைக்கப்பெறுகின்றன என்பதனையும் இவர்கள் உறுதிசெய்ய வேண்டும். பெரும்பாலும் சிறுவர்கள் தண்டனை சட்டக்கோவையில் உள்ள வேறுபட்ட குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களாக அல்லது குற்றவாளிகளாக இனங்காணப்படுகின்றனர்.

எனவே இத்தகைய சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பொறுப்பாக உள்ள ஊழியர்கள், பாதிக்கப்பட்ட சிறுவர்களை துல்லியமாக அடையாளங்காணுவதற்கு மட்டுமன்றி, அவர்களை எவ்விதம் அணுகுவது மற்றும் பராமரிப்பது என்பது பற்றியும் போதிய அறிவு மற்றும் திறன்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இவ்வலகானது சிறுவர் விற்பனை, மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குறிகாட்டிகள், அடிப்படை திரையிடல் கருவிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை செவ்வி காணல் போன்ற விடங்களில் பராமரிப்பாளர்களின் சரியான புரிதல், அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றின் திறன் உருவாக்கத்திற்கு ஆதரவளிப்பதாக அமையும். இதனால் பாதிக்கப்பட சிறுவர்களை அடையாளங்காணுவதானது பராமரிப்பு ஊழியர்கள் அச்சிறுவர்களை உடல், உள மற்றும் அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான அதிகாரிகளிற்கு சரியான நேரத்தில் ஆற்றுப்படுத்த முடிவதுடன், இது மேலும் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள் மற்றும் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கு வழிவகுக்கும். மேலும் ஊழியர்கள் சிறுவர்களின் தேவைகள் மற்றும் அவற்றுக்கான ஆதரவு மற்றும் உதவிகளை எவ்விதம் சிறப்பாக வழங்குவது என்பன பற்றி உணர்திறன் மிக்கவர்களாக மாற்றப்படுவர். இந்த நோக்கத்துக்காக ஊழியர்கள், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர் யார், அவர் பராமரிப்பு நிறுவனங்களில் சேர்க்கப்பட்டதன் நோக்கம், பாதிக்கப்பட்டவர் என்ற அடிப்படையில் அவர்களின் தேவைகள் மற்றும் மன உளைச்சலில் இருந்து அவர்களை எவ்விதம் மீட்டெடுப்பது தொடர்பான அறிவு மற்றும் புரிதலுடையவர்களாக அங்குள்ள ஊழியர்கள் மாற்றப்பட வேண்டும்.

இவ் அலகின் குறிக்கோளானது சிறுவர் விற்பனை குறிகாட்டிகள் மற்றும் திரையிடல் கருவிகள் என்பனவற்றை உபயோகப்படுத்தி பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளங்காணல், அடையாளங்காணும் செயன்முறையில் தனிநபர் மற்றும் நிறுவனங்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் பற்றி அறிந்து கொள்ளல் மற்றும் பிள்ளையுடன் உணர்திறனான தொடர்பாடலை மேற்கொள்ளல் மற்றும் நேர்காணல் வழிமுறைகள் என்பவற்றை வெளிப்படுத்தல். அத்துடன் பங்குபற்றுபவர்கள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரிப்பதில் சிறந்த நடைமுறைகளிற்கு உணர்திறன் மிக்கவர்களாக மாறுவதுடன் அதன் மீதான நேர்மறையான நடத்தைகளையும் விருத்திசெய்துகொள்வர். இவ்வலகின் ஒட்டுமொத்த இலக்கானது பங்குபற்றுபவர்களின் சிந்தனை செய்யும் கோணத்தினை மாற்றியமைப்பதன் மூலம் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சேமநலனையும் உறுதிசெய்வதாகும்.

**கற்றல் குறிக்கோள்கள்**

- அடிப்படை திரையிடல் மற்றும் ஆட்கடத்தல் குறிகாட்டிகளினூடாக சிறுவர் விற்பனை தொடர்பான சம்பவங்கள் பற்றி அடையாளம் காணல்

- பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் செயன்முறைக்குள்ளாக தமது வகிபாகம் மற்றும் பொறுப்புக்களை விளக்குதல்.
- சிறுவர்களுடன் சுமுகமான முறையில் உரையாடல் மற்றும் செவ்வி காணும் முறை மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் எவ்வாறு உணர்திறன் மிக்க முறையில் நடந்து கொள்வது போன்ற திறன்களை வெளிக்காட்டுதல்.

**பிரதான தலைப்புக்கள்**

## 4.3.1. இலங்கையில் சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய சிறுவர் துஷ்பிரயோகங்களிற்கும் இடையேயான இடைத்தொடர்பு

சிறுவர்கள் அவர்களின் பராமரிப்பாளர்களின் செயல் அல்லது செய்யாமையினால் அடிக்கடி அவர்கள் புறக்கணிக்கப்படுவதுடன், உடல் மற்றும் உளவியல் ரீதியிலான துஷ்பிரயோகத்தினையும் எதிர்கொள்கின்றனர். அனைத்துலக சுகாதார அமைப்பின் வரைவிலக்கணத்திற்கிணங்க துஷ்பிரயோகம் என்பது பிள்ளையொன்றின் சுகாதாரம், உயிர்வாழ்தல், விருத்தி அல்லது கண்ணியம் என்பனவற்றுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது விளைவிக்கக் கூடிய, உறவு முறை என்ற பெயரிலான பொறுப்புணர்வு, நம்பிக்கை அல்லது பலம் என்பவற்றின் பேரில் செய்யப்படும் உடல் அல்லது உள ரீதியான துர்நடத்தை. பாலியல் துஷ்பிரயோகம், உதாசீனப்படுத்தல் அல்லது கவனயீனமாக நடத்துதல் அல்லது வணிகரீதயான அல்லது ஏனைய சுரண்டல்களை குறிக்கும். (WHO, 2002).

சிறுவர் விற்பனை என்பது பெரும்பாலும் தடுப்புக்காவலின்போது, கடுமையான சூழலின்போது தன் நண்பர்கள் மற்றும் குடும்பத்தின் அன்பு கிடைக்காமல் போதல், துன்புறுத்தப்படல் போன்ற சூழல்களில் சிறுவர்கள் சுரண்டப்படுவதாகும். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பாதுகாப்பான முறையில் மீண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாதவிடத்து இதனால் இவர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புக்களானவை அவர்களின் வாழ்நாள் முழுவதுமாக நிலைத்திருக்கக் கூடியன.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் விற்பனையின் போது பெரும்பாலும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதனால் இவ்விரண்டினையும் வேறு பிரித்தறிவது கடினமானவொன்றாகும். எவ்வாறாயினும் சிறுவர் விற்பனை என்பது ஏனைய சிறுவர் துஷ்பிரயோகங்களிலிலுருந்து வேறுபட்டதென்பதனை அவ்வலகினூடாக கற்றுக்கொள்ள மற்றும் அடையாளங்காண்பதற்கு இதில் பங்குபற்றுபவர்களினால் முடியுமாகவிருக்கும். பிள்ளையொன்று நீண்டகாலமாக துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் அவன்/அவள் இறுதியாக விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர் ஒருவராக மாறுவதற்கு வாய்ப்புக்களுள்ளன. சிறுவர் விற்பனையின் முதன்மையான குறிக்கோள் சுரண்டல் என்பதனை பாடநெறியின் பங்குபற்றுநர்கள் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். சிறுவர் சுரண்டல் என்பது அவர்களை வேண்டுமென்றே பாலியல் ரீதியிலான சேவைகளுக்கு அல்லது தொழில்களுக்கு பயன்படுதலாகும்.

### கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

- சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகள்
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் விற்பனைக்குமிடையிலான தொடர்பு
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் விற்பனைக்குமான குறிகாட்டிகள்
- விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விசேட தேவைகள்

### 4.3.2. விற்பனையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காணல்

ஏற்கனவே சிக்கலான இக்குற்றத்தில் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணல் மிகவும் கடினமான விடயமொன்றாகும். இச்சிறுவர் விற்பனையின் தன்மையின் அடிப்படையில் ஏனைய சிறுவர் துஷ்பிரயோக வகைகளில் இருந்து, சிறுவர் விற்பனையை வேறுபடுத்தியறிவதில் சவால்களுள்ளன.

விற்பனையால் மோசமாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தங்களின் மீது மட்டுமன்றி அவர்களின் குடும்பத்தவர்களின் மீதும் பாதுகாப்பு தொடர்பான அச்சப்பாடுகளைக் கொண்டிருப்பதனால் அவர்களை அடையாளம் காணுவது அவசியமாகின்றது.

மேலும், தமது உரிமைகள் மீறப்பட்ட இச்சிறுவர்களை அடையாளம் காண்பதும் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் அவர்கள் உரித்துடைய விசேட பாதுகாப்பு முறைகளை அவர்கள் அணுகுவதற்கான பொருத்தமான சேவைவழங்குனர்களிடம் அவர்கள் நெறிப்படுத்தப்படுவதும் அத்தியாவசியமான விடயமாகும். சரியான நேரத்தில் மற்றும் துல்லியமான முறையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காண்பதென்பது, அவர்களின் உடல் மற்றும் உள சுகாதார தேவைகள் மற்றும் ஏனைய உதவிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதனை உறுதிசெய்வதற்கு அத்தியாவசியமானதொன்றாக அமைகின்றது.

#### கற்பிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

- விற்பனையால் பாதிகக்கப்பட்ட சிறுவர்கள் யார்?
- பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய பொதுவான கற்பனை
- பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு இனங்காண்பது?
- பாதிக்கப்பட்டவர்களை இனங்காண்பதில் உள்ள சிக்கல்கள்

### 4.3.3. பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் முறைமை

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை சரியான நேரத்தில் மற்றும் துல்லியமான முறையில் இனங்காண்பதென்பது அபபாதிக்கப்பட்ட சிறுவர்கள் அவர்களுக்கான உதவி மற்றும் ஆதரவினை பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதனை உறுதிசெய்வதற்கு அவசியமானதாகின்றது. அத்துடன் இது குறித்த குற்றத்தினை வினைத்திறனான முறையில் விசாரணை செய்ய மற்றும் வழக் தொடுக்க அவசியமானது. பாதிக்கப்படக் கூடியவர்களை விரைவாக அடையாளம் காணலானது மனித வியாபாரச் செயன்முறைக்கு அது ஆரம்பிப்பதற்கு முன்னரே இடையூறு விளைவிப்பதுடன், அது இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்கள் மீதான சுரண்டல்களை தடுக்கின்றது.

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிய அனைத்து நடவடிக்கைகளும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் மற்றும் மனித வியாபாரம் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் விற்பனையை தடுத்தல், ஒடுக்குதல் மற்றும் தண்டித்தல் தொடர்பான ஐ.நா வின் பின்னேடு என்பனவற்றில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். சிறுவர்களின் சிறந்த நலன் எப்போதும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு சிறுவர்களை பாதிக்கும் அனைத்து விடயங்களிலும் அப் பிள்ளையின் சிறந்த நலன் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

#### கற்பிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

- முதல் தொடர்பு
- ஆரம்ப நேர்காணல்
- மேலதிக காரணிகள் பற்றிய கணிப்பீடு
- இறுதி முடிவு

### 4.3.4. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய ஆய்ந்தறியும் சுட்டிகள் மற்றும் ஆரம்ப ஆய்ந்தறியும் கருவிகள்

ஆட்கடத்தல்காரர்கள் அப்பிள்ளையினை, அவர்களின் குடும்பத்திடமோ அல்லது அவர்களின் சமூகத்திலுள்ளவர்களிடமோ நம்பிக்கையினை ஏற்படுத்திக் கொள்வதற்காக நயவஞ்சகமாக நடந்துகொள்ளலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குறித்த குற்றம் அல்லது துன்புறுத்தலின் தீவிரத்தன்மையினை உணர்வதில்லை என்பதுடன், நடந்தவற்றை வெளிப்படுத்தவும் பயப்படுகின்றனர். ஆய்ந்தறியும் சுட்டிகளானவை சிறுவர் விற்பனையின் அடிப்படையான அடையாளங்காணும் செயன்முறையினை நடத்துவதற்கு அவசியமான மற்றும் அடிப்படையானதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் விருத்திசெய்யப்பட்டுள்ளன.

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களினூடாக அடையாளங்காண முடியும். உண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை கற்றறிதல் மற்றும் நாடகங்கள் என்பன மூலமாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் செயன்முறை பற்றி பங்குபற்றுபவர்கள் அறிவினையும் மற்றும் திறனையும் பெற்றுக்கொள்கின்றனர்.

#### கற்பிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

- சிறுவர் விற்பனை தொடர்பான குறிகாட்டிகள்
- ஆய்ந்தறியும் கருவிகள்

### 4.3.5. சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களினை நேர்காணல் செய்வதிலுள்ள அடிப்படை கோட்பாடுகள்

இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர்களை நேர்காணல் செய்யும் போது பயன்படுத்தப்படும் பல அடிப்படை கோட்பாடுகள் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கும் பயன்படுத்தக்கூடியதாகவுள்ளது. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேர்காணல் செய்யும் போது மனித வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட வளர்ந்தோரினை நேர்காணல் செய்வதை விட அதிக விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் என்பன அவசியமாகின்றது.

#### கற்பிக்கப்பட்ட வேண்டிய பிரதான விடயங்கள்:

- மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களில், சிறுவர்கள் இலகுவில் பாதிக்கப்பக்கூடியவர்களாக இருப்பதன் காரணங்கள் எவை?
- சிறுவர்களை நேர்காணல் செய்ய வேண்டியவர்கள் யாவர்?
- பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேர்காணல் செய்வதற்கான நோக்கம் மற்றும் அவர்களை நேர்காணல் செய்யும்போது பரிந்துரைக்கப்பட்ட வழிக்காட்டிக் கோட்பாடுகள்.
- PEACE முன்மாதிரியினை அறிமுகப்படுத்தல்.
- எப்போது பாதிக்கப்பட சிறுவர்களை நேர்காணல் செய்யாமலிருக்க வேண்டும்.

### 4.3.6. சிறுவர் உணர்திறன் மிக்க தொடர்பாடல்

வளர்ந்தோரிடம் சிறுவர்கள் அவர்களின் வயது, பக்குவநிலை, பால்நிலை, இயலாமை மற்றும் ஏனைய குணவியல்புகள் என்பனவற்றை பிரதிபலிக்கும் விதமாக, சிந்திக்க, பேச மற்றும் அனுபவிக்க மற்றும் நடந்துகொள்கிறார்கள். வயதுவந்தோர் மற்றும் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் இச்சிறுவர்களுடன் தொடர்பாடும்போது பொதுவாக அவர்களின் மொழி, பழக்கவழக்கங்கள், மற்றும் நடத்தை என்பனவற்றை பழகிக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், பாதிக்கப்பட்ட சிறுவர்களிடம் விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில் இவர்களை சரியான முறையில் வழிநடத்தல் மற்றும் அவர்களை மேலும் துன்புறுத்தலுக்கு உள்ளாதலிலிருந்து பாதுகாப்பதற்குமாகும்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் தொடர்புகொள்ளும் அனைவரும் சிறுவர்களிற்கு உணர்திறன் மிக்கவகையில் செயற்பட வேண்டும். தன்னிடம் என்ன தொடர்பாடல் செய்யப்படுகின்றது என்பதனை சரிவர புரியும் போதே அப்பிள்ளை பல்வேறுபட்ட அடையாளங்காணும் செயன்முறை மற்றும் உதவி செய்யும் செயன்முறையில் முழுமையாகப் பங்குபற்ற முடியும்.

ஒவ்வொரு சிறுவர்களும் அவர்களிள் சமூகச் சூழல், கல்வி, கலாசாரம் மற்றும் பிற காரணிகளினால் தனித்துவமானவர்கள். பிள்ளை விருத்தியின் கட்டங்களானவை குறித்த ஒரு வயதில் அப்பிள்ளையானது எத்தகைய அறிவாற்றலைக் கொண்டிருக்கும் என்பதனைக் குறிக்கின்றன. எவ்வாறாயினும் எதிர்மனுதாரர்கள் புதிய சூழலொன்றிலுள்ள மற்றும்.்.அல்லது பிரச்சினையிலுள்ள பிள்ளை உதாரணமாக, குற்றங்களை அனுபவத்தில் பார்த்திருத்தல் போன்ற காரணிகள் முன் பிள்ளை அபிவிருத்திக் கட்டத்தில் பின்னடைவினை ஏற்படுத்தலாம். இதன்படி, குறைந்தளவான அச்சுறுத்தலுடன் கூடிய ஒரு சூழலின் அப்பிள்ளையானது புரிந்துகொள்ளவோ, பதிலளிக்கவோ முடியுமான தகவல் அல்லது வினாவினை தற்போது அப்பிள்ளை புரிந்துகொள்ளவோ அல்லது சரியாக பதிலளிக்கவோ முடியாது இருக்கும்.

### கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்

- தொடர்பாடல் செயன்முறையின் முக்கிய கூறுகள்
- வாய்மொழி மற்றும் சைகைகள் மூலமான தொடர்பாடல் திறன்கள்
- பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் உரையாடலினை தொடங்குவதற்கு முக்கியமான செயற்பாடுகள்.
- இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு

## பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள்

மனித உரிமைகள் மற்றும் மனித விற்பனை தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள், மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR)
https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/Traffickingen.pdf

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா நெறிமுறை – 1989
https://www.ohchr.org/sites/default/files/crc.pdf

மனித விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் பாதிப்பிற்கான தீர்வையினை பரிந்துரைப்பதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (Standard Operating procedures (SOP).
https://srilanka.iom.int/sites/g/files/tmzbdl1601/files/documents/Standard%2520Operation%2520Procedures%2520%2528SOP%2529%2520for%2520the%2520Identification%252C%2520Protection%252C%2520and%2520Referral%2520of%2520Trafficking%2520Victims.pdf

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் தீர்வினை பரிந்துரைத்தல் தொடர்பான வழிகாட்டல் குறிப்பு, இலங்கை.
https://resourcecentre.savethechildren.net/pdf/Guidance-Note-on-the-Identification-Protection-and-Referral-of-Child-Victims-of-Trafficking.pdf/

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பிற்கான வழிகாட்டுதல்கள், (UNICEF)
https://www.unhcr.org/sites/default/files/legacy-pdf/4d9484e39.pdf

குழந்தை நட்பு பாராட்டல் சட்ட உதவிக்கான வழிகாட்டுதல்கள், UNICEF, 2018
https://www.unicef.org/turkiye/media/7066/file/Guidelines%20on%20Child-Friendly%20Legal%20Aid%20-%202018.pdf

சிறுவர் பராமரிப்பு குறித்த தொழில்வான்மைக்கான பொது சிறவர் பராமரிப்பு கற்கைநெறி, NCPA இலங்கை, 2019.
https://childprotection.gov.lk/images/pdfs/acts-guidelines/2019%20-%20Trainers%20Guide%20(%20General%20Child%20Care%20Course%20_%20NVQ%20Level%204)%20-%20English.pdf

சிறுவர் பாதுகாப்பு கையேடு, NCPA இலங்கை, 2019

## 4.4. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய விதமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பராமரிப்புத் தேவைகள்

**பாடநெறிக்கான விளக்கம்:**

சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகம் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு பராமரிப்பினை வழங்கும் போது அவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, மற்றும் சேமநலன் மற்றம் தீங்குவிளைவிக்காமை என்ற அடிப்படை விதி என்பனவற்றினை கூர்ந்து கவனித்தல் அவசியமானது.

பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள சிறுவர்களிற்கு அவசியமான பராமரிப்பினை வழங்கம் பொறுப்பானது இந் நிறுவனங்களின் பராமரிப்பாளர்களின் மீதே தங்கியுள்ளது. சிறுவர்கள் அவர்களின் விருத்தி, உயிர்வாழ்தல், மற்றும் மன உளைச்சலில் மீண்டுவருவதற்கு அவர்களுக்கு கிடைக்கப்பெறும் பராமரிப்பின் தரம் அவசியமானது. மனித விற்பனை என்பது பல்வேறு கோணங்களுடன் கூடிய சிக்கலான நிகழ்வொன்று என்பதனால் சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய வகை துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு உளவியல் ரீதியான நோக்குடன் கூடிய முழுமையான பராமரிப்பினை வழங்குவது அவசிமாகின்றது (IOM, 2010). உளவியல் ரீதியான அணுகுமுறையிற்கிணங்க சிறுவர் விற்பனை மற்றம் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மேலும் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவதனை தடுப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் எல்லாவகையான ஆதரவும் சமூக, உளவியல், மற்றம் கலாசார களம் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதுடன், பராமரிப்பாளர்கள் அச் சிறுவர்களின் உளவியல் நிலை மற்றம் கடந்தகால அனுபவங்கள் மற்றும் அவர்களின் கலாசாரப் பின்னணி என்பனவற்றை கருத்திற்கொள்ள வேண்டும். இதனால் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பராமரிப்புத் தேவைகளானவை பராமரிப்பு நிறுவனங்களின் கீழுள்ள சிறுவர்களின் தேவைகளில் இருந்து வித்தியாசமானவை என்பதனை பராமரிப்பாளர்கள் அறிந்திருத்தல் அவசியமாகும்.

உடலியல் தேவைகள், உள நலம், உணர்வு மற்றும் உளவியல் தேவைகள், கல்வி மற்றும் தொழிற்பயிற்சி தேவைகள், சமூக தேவைகள், சட்ட உதவி மற்றும் பிரதிநிதித்துவம், மற்றும் மீள் ஒருங்கிணைத்தல் தேவைகள் போன்ற அவசியமான தேவைப்பாடுகள், அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து அவர்களை மீண்டுவருவதற்கு ஒழுங்குசெய்வதற்கு, பராமரிப்பாளர்கள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள சமூகத்தில் இணைப்பதற்காக அது தொடர்பான அறிவு மற்றும் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.

**கற்றல் குறிக்கோள்கள்**

**இவ்வலகின் பொதுவான குறிக்கோள்:**

இவ்வலகின் பிரதான குறிக்கோளானது இலங்கையிலுள்ள சிறுவர் பராமரிப்பாளர்களிற்கிடையில் சிறுவர்களுக்கான விருத்தி தேவைகள், சுகாதாரத் தேவைகள் (உடல் மற்றும் உளவியல்), உணர்ச்சி மற்றம் உளவியல் ரீதியிலான தேவைகள், கல்வி மற்றும தொழில் ரீதியான பயிற்சித் தேவைகள். சமூகத் தேவைகள், சட்ட உதவி மற்றும் பிரதிநிதித்துவம். மற்றும் மீள் ஒன்றிணைதலுக்கான தேவை, அத்துடன் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவருக்கு அவசியமான பராமரிப்பினை வழங்குவதற்கான திறன்கள் போன்று சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கான வெவ்வேறு தேவைப்பாடுகள் பற்றிய புரிதல் மற்றும் அறிவினை விருத்திசெய்தல். மேலும் இலங்கையிலும் சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ள மேலதிக பராமரிப்பு சேவைகள் பற்றிய விழிப்புணரவு ஏற்படுத்தல்.

**இவ் அலகினைப் பூர்த்தி செய்தவுடன் பங்குபற்றுபவர்கள்:**

(1) சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய வகை துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவசியமான பராமரிப்பின் முக்கியத்துவத்தினை புரிதல்.

(2) சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய வகை துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவசியமாகின்ற பல்வேறு வகைப்பட்ட பராமரிப்பினை இனங்காணல்.

(3) விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு உளவியல் ரீதியான அணுகுமுறையினைப் பயன்படுத்தல்.

(4) தேவைகளுள்ள சிறுவர்களிற்கு பாராமரிப்பு உதவியினை வழங்குவதற்கான அவசியமான திறன்களை வெளிப்படுத்தல்.

(5) தேவைகளுள்ள சிறுவர்களிற்கு இடையில் பொதுவாகவுள்ள உள ரீதியான பிரச்சினைகளின் அறிகுறிகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணல்.

(6) உள ரீதியான பிரச்சினைகளை இழிவுபடுத்துவது பற்றிய வழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

(7) இலங்கையில் காணப்படும் மேலதிக உதவிச் சேவைகள் மற்றும் பரிந்துரைத்தல் பின்னேடுகள் பற்றிய அறிவினை ஒருங்கிணைத்தல

**பிரதான தலைப்புகள்**

## 4.4.1. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவர்களின் தேவைகளை பூர்த்திசெய்வதன் அவசியம் தொடர்பான அறிமுகம்

### 4.4.1.1. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய வகை துஷ்பிரயோகங்களை வரையறுத்தல்

I. சிறுவர் விற்பனை மற்றும் உடல், உணர்வு ரீதியான மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கண்டுகொள்ளாமை ஆகியன உடனடினயான மற்றும் போதியளவான கவனம் கொடுக்கப்படவேண்டிய மனிதாபிமாக சிக்கல்களாகும். விசேடமான பராமரிப்பானது நலன், அபிவிருத்தி, மற்றும் இரக்கம், நீதி மற்றும் சமூக அபிவிருத்தி என்பனவற்றுக்கு அவசியமாகும்.

II. இத்தகைய சிறுவர்களின் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய தன்மை, அறியாமை மற்றும் உதவியற்ற நிலை என்பனற்றினை ஆட்கடத்தல்காரர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வர். ஆகவே பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பறிக்கப்பட்ட சிறு வயதுப் பருவம், பலவந்தமாக தொழிலில் ஈடுபடுத்தல், சிறைவாசம் மற்றம் துஷ்பிரயோகம் போன்றவற்றிக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. இது பாதுகாப்பு, சட்ட ரீதியான, மற்றம் சுகாதார சிக்கல்கள், அத்துடன் மீள் மன உளைச்சலுக்கு உள்ளாதல் என்பனவற்றுக்கு வழிவகுக்கின்றது.

III. இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சுழற்சியினை இல்லாமற்செய்வதற்கு சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பராமரிப்புத் தேவைகளினைப் பூர்த்தி செய்வது அவசியமாகும்.

### 4.4.1.2. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவசியப்படும் பராமரிப்பின் தேவைப்பாடு ஏனைய நிறுவன பராமரிப்பில் இருக்கும் சிறுவர்களின் தேவைப்பாடுகளில் இருந்து வேறுபடும் விதத்தினை இனங்காணல்

I. சிறுவர் விற்பனையானது ஒரு குற்றவியல் குற்றமாக, மனித உரிமைகள் மீறலாக மற்றம் சுரண்டல்களின் ஒரு வகையாக மற்றும் வன்முறை வகைகளிலொன்றாக இனங்காணப்படுகின்றது.

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அவர்கள் அனுபவித்த விசேடமான மன உளைச்சல் மற்றும் அனுபவங்களின் காரணமாக ஏனைய நிறுவனப் பராமரிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களை விட இவர்களுக்கு உயரிய பராமரிப்பானது அவசியப்படுத்தப்படுகின்றது.

பிரதானமான வேறுபாடுகள் சிலவற்றை இனங்காண்போம்:

அ. அதீத மன உளைச்சல்

ஆ. சட்ட சிக்கல்கள்

இ. பாதுகாப்பு பற்றிய சிக்கல்கள்

ஈ. சுரண்டல்களில் இருந்து மீண்டுவரல்

உ. மீளிணைப்பு பற்றிய சவால்கள்

ஊ. கல்வி இடைவெளிகள் மற்றும் திறன் விருத்தி

எ. கலாசார மற்றும் மொழி உணர்திறன்

ஏ. உளவியல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பின் அவசியத்தன்மை

II. விற்பனையால் பாதிக்கப்படாத நிறுவனப் பராமரிப்பின் கீழுள்ள சிறுவர்கள் பெரும்பாலும் (உ-ம்: போதுமான போசணை, உறையுள் மற்றும் உடை), போசாக்கு, சகாதாரப் பாதுகாப்பு, நிலையான உறவு மற்றும் உணர்வு ரீதியான ஆதரவு போன்ற பொதுவான தேவைகளையே கொண்டிருப்பர். இச்சிறுவர்கள் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், சமூகமயமாக்கலினை ஊக்கப்படுத்தல், தொடர்ச்சியான சுகாதாரப் பரமாரிப்பினை பெறல் மற்றும் நடத்தை மற்றும் உணர்வு ரீதியான சவால்களை இனங்காணல், என்பனவற்றினையும் பெற வேணடும் என்பதுடன், இதன் தன்மை மற்றும் தாக்கமானது வேறுபடலாம்.

III. சிறுவர் பராமரிப்பின் ஒருசில விடயங்கள் ஒன்றுபோல இருப்பினும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு விசேடமான தேவைப்பாடுகள் உள்ளன.

### 4.4.1.3. சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவசியமான வேறுபட்ட வகையான பராமரிப்பினை இனங்காணல்

அ) அபிவிருத்திக்கான தேவைகள் (மாற்றுத்திறனாளிகளுக்கான தேவைகள் மற்றும் பால்நிலை பன்மைத்துவத்துக்கான தேவைகள்)

ஆ) உளவளம், உணர்வு மற்றும் உளவியல் தேவைகள்

இ) கல்வி மற்றும் தொழிற்பயிற்சி தேவைகள்

ஈ) சமூகத் தேவைகள்

உ) சட்ட உதவி / பிரதிநிதித்துவம்

ஊ) மீளிணைப்பிற்கான தேவைகள்

#### 4.4.1.4. சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகத்தினால் பாதிக்ககப்பட்ட சிறுவர்களுக்கு பராமரிப்பினை வழங்குவதிலுள்ள உளவியல் ரீதியான அணுகுமுறை

I. உளவியல் அணுகுமுறையானது சமூக, உளவியல் மற்றும் கலாச்சாரம் என்பனவற்றின் இடைத்தொடர்பினை சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்களுக்குள்ளான சிறுவர்களிற்கு உதவிகளை வழங்கும்போது கருத்திற்கொள்ளப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு பராமரிப்பிரனை வழங்கும் போது அவர்களை உணர்வு ரீதியாக மேலும் பாதிக்கச் செய்யாமல் இருப்பதற்காக பராமரிப்பாளர்கள் அப்பிள்ளைகளின் கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் மனநிலையினை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். சிறுவர்களிற்கு பராமரிப்பினை வழங்கும் போது பராமரிப்பாளர்கள் சமூக உதவி முறைமைகளை கருத்திற்கொள்ள வேண்டும் என்பதுடன், அப்பிள்ளைகளுக்கு பொருந்தக் கூடிய கலாசார ரீதியாக பொருத்தமான மற்றம் உணர்திறன் மிக்க உதவி வழங்கல் முறைமையினை கருத்திற்கொள்ள வேண்டும்.

II. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமானது IASC வழிகாட்டிகளை (2007) பாராட்டியுள்ளதுடன் மற்றும் சிறுவர்களுக்கான உளவியல் சமூக ரீதியான ஆதரவினை மேம்படுத்தும் போது நான்கு கட்டங்களிள் தலையீடுகள் காணப்படுகளின்றன என்பதனை பரிந்துரைத்துள்ளது. (IOM, 2020).

IASC உளவியம் மற்றும் மன நல உதவி பிரமிட் (MHPSS) (உலக சுகாதார அமைப்பு . யுத்த மன உளைச்சல் நிதியம். வேர்ல்ட் விசன் இன்டர்நெசனல் 2011).

### 4.4.2. பராமரிப்பு தேவைகளுக்கு உதவி புரிவதற்கு அவசியமான திறன்களை இனங்காணுதலும் அதனை நடைமுறைப்படுத்தலும்

#### 4.4.2.1. தொடர்பாடல் திறன்கள்: பேச்சு மற்றும் வாய்மொழி மூலமற்ற தொடர்பாடல் திறன்கள், சரியாக செவிமடுத்தல், இரக்கம், பரிவு

I. வாய்மொழி மூல தொடர்பாடலுக்கான நாடகப் பயிற்சி:

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகோள்ளக் கூடிய வகையிலாக செவிமடுத்தல், பொதுவாக முடியக் கூடிய வினாக்கள், மன உளைச்சலை புரிந்துகொண்ட உடல் மொழி (மன உணர்வுகளைத் தூண்டக்கூடிய சொற்பிரயோகங்களைத் தவிர்த்து ஊக்குவிக்கக் கூடிய சூழலினை உறுதிசெய்தல்), கலாசார உணர்திறன் (சிறுவரின் கலாசாரப் பின்னணியினை இனங்காணல் மற்றும் மதிப்பளித்தல், அவர்களின் தனித்துவமாக அனுபவங்கள் மற்றம் நம்பிக்கைகளுக்கு குறித்த தொடர்பாடல் உணர்திறன் மிக்கதாயிருப்பதனை உறுதிசெய்தல்.

II. வாய் மொழி மூலமற்ற தொடர்பாடலுக்கான நாடகப் பயிற்சி

அ. உடல் மொழி: திறந்த மனநிலை, இதமான மற்றும் அச்சம் ஏற்படுத்தாத வகையில் உங்கள் உடல் மொழி அமைந்திருப்பதனை நீங்கள் உறுதி செய்தல். சிறுவர்களின் சௌகரியத்தினை உறுதிசெய்யும் வகையில் அவர்களின் உடல் மொழியினையும் கண்காணித்தல் வேண்டும்.

ஆ. முகபாவனை: புரிந்துணர்வு, ஆதரவு மற்றும் இரக்கத்தினை வெளிப்படுத்துவதற்கான உகந்த முக பாவனையினைப பயன்படுத்தல்.

இ. பார்வைத் தொடர்பு: நம்பிக்கையினை மேம்படச் செய்யும் வகையில் சரியான பார்வைத் தொடர்பினை மேம்படுத்தல் அதேவேளை பார்வைத் தொடர்பு விதிகளைப் பாதிக்கும் அவர்களின் கலாசார வேறுபாடுகளையும் அறிந்து கொள்ளல்.

**4.4.2.2. உணர்வுகளைப் புரிந்து கொள்வதில் இருந்து, பரிவினை வேறுபடுத்தியறிதல்**

I. உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அனுதாபத்தினை வரையறுத்தல் மற்றம் துஷ்பிரயோகம் மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மீது பரிவு காட்டுவதனைத் தவிரத்து, அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் அவசியப்பாட்டினைப் புரிந்துகொள்ளல்.

II. பங்குபற்றுபவர்கள் அவர்கள் தொழிலினை ஆற்றும் போது இவ் விடயங்களை பயன்படுத்துதல்.

**4.4.2.3. சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும் அவர்களின் உணர்வுகளை சரிவரப் பேணும் முகமாகவும் பராமரிப்பாளர்கள் தமது உணர்வுகளை ஒழுங்குபடுத்தும் திறன்களை மேம்படுத்திக் கொள்ளல்**

I. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு ஆதரவான சூழலை உருவாக்க குழந்தை பராமரிப்பாளர்கள் வரையறைகளை பராமரிப்பது ஏன் முக்கியம் என்பதற்கான காரணங்களை விளக்கவும்.

II. எல்லைகளை தொடர்வதற்கு ஏற்புடையதான தந்திரோபாயங்கள்

அ. நினைவாற்றலுக்கான பயிற்சிகள்

ஆ. பயிற்சி மற்றும் கல்வி

இ. சுய விழிப்புணர்வு விருத்தி செயற்பாடுகள்

ஈ. பராமரிப்பாளர்கள் முன்மாதிரியாக செயற்படல்

உ. உணர்வு ரீதியான பயிற்சி

**4.4.2.4. உணர்திறன் மிக்க முறையில் எல்லைகள் மற்றும் நாளாந்த நடவடிக்கைகளை தொடர்வதற்கான இயலுமையினை உயர்வடையச் செய்தல்**

I. பராமரிப்பாளர்கள், உணர்திறன் மிக்க உபாயமுறைகளைப் பயன்படுத்தி சிறுவர் விற்பனையால் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆரோக்கியமான எல்லைகளை மற்றும் நாளாந்த நடவடிக்கைகளை சிறுவர்களின் நலன் கருதி அமைப்பாக்கம் செய்ய வேண்டும்.

அ) தொடர்ச்சியான மற்றும் ஊகிக்கக் கூடிய நாளாந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்: மன உளைச்சல்களை அடிக்கடி அனுபவித்த சிறுவர்கள் திட்டமிடப்பட்ட நாளாந்த நடவடிக்கைகள் நிலையான மற்றும் ஊகிக்கக் கூடிய தன்மையினை வழங்குவதனால் அவர்கள் அவற்றில் இன்பமான உணர்வினைக் கொண்டிருப்பர்.

ஆ) மன உளைச்சல் குறித்து நன்கறியப்பட்ட பராமரிப்புக் கொள்கைகளை பயன்படுத்துதல்: வரையறைகளை அமைப்பாக்கம் செய்யும் போது மன உளைச்சல்கள் தெரியப்படுத்தப்பட்ட பராமரிப்பு கொள்கைகளைப் பயன்படுத்தல்.

மன உளைச்சலினால் சிறுவர்கள் உறவுகளை நம்புதல் மற்றும் உருவாக்குவதல் என்பன தொடர்பான அவர்களின் இயலுமை மீதான தாக்கத்தினை புரிந்த கொண்வதுடன், உணர்திறன் மிக்கவகையில் வரையறைகளை நிர்ணயித்தல். சிறுவர்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய மற்றும் அப்பிள்ளையினை மீளவும் மன உளைச்சலிற்கு உள்ளாகக்கூடிய தலைப்புகள் மற்றும் மொழிப் பயன்பாடுகளைத் தவிர்த்தல். பிள்ளையின் உணர்வுகள் மற்றும் அனுபவங்களை தொடர்பாடல் செய்ய மற்றம் நியாயப்படுத்தக் கூடியதற்கான வாய்ப்பினை வழங்குதலும், அவர்களின் உணர்வுகள் மதிப்பளிக்கப்படுவதனை உறுதிசெய்தலும்.

இ) பாதுகாப்பிற்கு முன்னுரிமையளித்தல்

ஈ) தனிநபர் இடைவெளியை மதித்தல்

உ) பொருத்தமான நேரங்களில் சிறுவர்களை முடிவெடுக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்திக் கொள்ளல்.

ஊ) வெளிப்படையான தொடர்பாடல் ஊடகங்களை முகாமைத்துவம் செய்தல்.

எ) மட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட முறையில் தெரிவுகளை வழங்குதல்: சிறுவர்களுக்கு நியாயமான மட்டுப்பாடுகளுடன் கூடிய தெரிவுகளை வழங்குதல். இது அவர்களின் சூழலின் மீது ஓரளவு கட்டுப்பாட்டினை செயற்படுத்த உதவுவதுடன், அவர்களுக்கு ஓரளவு சுதந்திரத்தினையும் வழங்கும்.

## 4.4.3. சிறுவர் விற்பனையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிடத்தில் பரவலாக காணப்படும் உளவியல் ரீதியான பிரச்சினைகளின் அறிகுறிகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அவர்களை முத்திரைகுத்துவது அல்லது களங்கப்படுத்துவது என்பனவற்றினை விடுத்திருப்பதன் அவசியப்பாடு

### 4.4.3.1. உளவியல் ரீதியான பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து சிறுவர்களை முத்திரை குத்துவது மற்றும் களங்கப்படுத்ததுவது என்பனவற்றை நீக்குவது

அ. இத்தகைய சிறுவர்கள் தற்போது அனுவித்துவரும் துன்பநிலைகளானவை இத்தகைய களங்கப்படுத்தும் செயற்பாடுகளினால் மேலும் மோசமாக்கப்படுவதுடன், அவர்களுக்கு அவசியமான அவர்களின் உளவள பராமரிப்பினைப் பெறுதல் மற்றும் அவர்கள் அவற்றிலிருந்து மீண்டுவருதல் என்பனவற்றுக்கு தடையாக அமைகின்றது.

ஆ. சிறுவர்கள் அவர்களுக்குள்ளேயே புதைத்துக்கொள்ளும் அவமானம் மற்றும் தனிமையான உணர்வு என்பன அவர்களின் சுயகௌரவம் மற்றும் பொதுநலன் என்பனவற்றில் வெகுவாக பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

ஈ. மன நலக் குறைபாடுகளைக் கொண்டிருப்பது அவர்களின் பிழையல்ல என்பதனை தெளிவுபடுத்தல்.

### 4.4.3.2. சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகம் என்பனவற்றின் போதான மன நல பிரச்சினைகளின் அறிகுறிகள் மற்றும் அவற்றை தடுப்பதற்கான குறிகாட்டிகளினை அடையாளம் காணல்

கீழ்க்கண்ட நலைகளை பங்குபற்றுபவர்களுடன் சுருக்கமாக கலந்தரையாடுக. இத்தகைய நிலைமைகளுக்கு பொதுவான அறிகுறிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், நோய்களின் சர்வதேச வகைப்பாடு அல்லது மன நலக் குறைபாடுகளைக் கண்டறிதல் மற்றும் மன நலக் குறைபாடுகளுக்கான புள்ளிவிபரவியல் (DSM) கண்டறியும் அளவுகோள்களை பயன்படுத்த வேண்டாம். பயிற்றுவிப்பாளர்கள்,

பராமரிப்பாளர்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்களை கண்டறிய முடியாது என்பதுடன் அவர்கள் அச்சிறுவர்களை அதற்கான சுகாதார வைத்தியர்களிடம் வழிப்படுத்த வேண்டும் என்பதனை குறிப்பிடல் வேண்டும். இது அத்தகைய நிலைமையினைக் கண்டறிவதற்கான வழிகாட்டி மட்டுமேயாகும்:

அ) மன உளைச்சல்

ஆ) மன அழுத்தம் மற்றும் குறைவான மனநிலை

இ) கவனிப்பு தொடர்பான பிரச்சினைகள்

ஈ) அதி வேகத்தன்மை

உ) ஆக்கிரமிப்பு மற்றும் எதிர்மறையான நடத்தைகள்

ஊ) கோபம் மற்றும் உணர்வு ரீதியான ஒழுங்கீனம்

எ) கற்றல் தொடர்பான பிரச்சினைகள்

ஏ) ஆட்டிஸம்

ஐ) சுய தீங்கு

## 4.4.4. பாதிகக்கப்பட்ட சிறுவர்களை ஆற்றுப்படுத்துவதற்கான வழிகாட்டிகள் மற்றும் நடபடிமுறைகள் - பாதுகாப்பான ஆற்றுப்படுத்தல்

### 4.4.4.1. பரிந்துரைத்தலின் முக்கியத்துவத்தினை இனங்காணல்

விற்பனையால் பாதிக்கப்பட்ட மற்றும் ஏனைய பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு அனைத்து பங்குதாரர்களையும் இணைத்துக்கொள்வதன் அவசியப்பாட்டினை கலந்துரையாடல்.

### 4.4.4.2. அடையாளம் காணல், பாதுகாப்பு மற்றும் பரிந்துரைத்தலுக்கான வழிகாட்டிக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்ட ஆற்றுப்படுத்தல் பொறிமுறையினை பின்பற்றல்

**கட்டம் 1**

முதற் படி: முதற் தகவல் அறிக்கையிடல், புகார் பதிவு செய்தல், மற்றும் அவசர தேவைகளை இனங்காணல்

சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகம் பற்றிய தகவல் அல்லது முறைப்பாடுகள் என்பன பல்வேறுபட்ட முகவர்கள் மற்றும் கீழ்க்கண்ட நபர்களால் செய்யப்பட, பெறப்பட, அல்லது பதிவுசெய்யப்பட முடியும்.

1. இலங்கை காவல் துறை (காவல் துறை தலைமையலுவலகம் 119 அல்லது காவல் நிலையம், சுற்றுலாத்துறை பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்களுக்கான பணியகம்)
2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (தலைமையகம் 1929. NCPA பொலிஸ் அல்லது NCPA இன் மாவட்ட மற்றும் பிராந்திய அலுவலர்கள்)
3. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் (சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு அலுவலர்கள்) மற்றும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் (சிறுவர் பராமரிப்பு அலுவலர்கள்).

4. பெண்கள் மற்றும் சிறுவர்கள் அமைச்சுக்கான தேசிய பேரவை, 1938
5. தேசிய/உள்நாட்டு தொழில் திணைக்களம் (தொழில் அலுவலர்களினூடாக)
6. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்.
7. சிவில் சமூக அமைப்புக்கள் / உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள்.
8. இலங்கைத் தூதரகங்கள் / இணைத்தூதரகங்கள்
9. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான இலங்கைப் பணியகம்

**கட்டம் 2**

இடைநிலை மற்றும் நீண்டகால தேவைகளுக்குப் பதிலளித்தல் - மருத்துவ பராமரிப்பு

மருத்துவமனையில் அனுமதித்தல் - தேவையான எத்தகைய மருத்துவ சிகிச்சைகளுக்கும் அண்மையிலுள்ள அரச வைத்தியசாலை அல்லது சட்ட மருத்துவ அதிகாரி (JMO).

1. சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்படும் மருத்துவ சம்பவ மாநாடு மற்றும் நிறுவன சம்பவ மாநாடு சட்ட அமுலாக்கல் அலுவலர்கள், மருத்துவ நிபுணர்கள், NCPA மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள்.
2. நிறுவன சம்பவ மாநாடானது குறித்த சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு அதிகாரியினால் அவரது நீதவானுக்கான சமூக விசாரணை அறிக்கையுடன் தொடர்புடைய நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கட்டம் 3**

காவல்துறையினரின் விசாரணை (முன்விளக்கம்) மற்றம் நீதிமன்றத்திற்கு நிகழ்வுகளை முறைப்பாடு செய்தல்

**கட்டம் 4**

விளக்கம் மற்றும் பின் விளக்கம்

**கட்டம் 5**

விற்பனையால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு சிறுவர்களை மீள அனுப்புதல். காணப்படும் மேலதிக உதவி சேவைகள் பற்றி விழிப்புணர்வினை மேம்படுத்தல்.

**4.1.2** அரச துறை சேவை

**4.1.3.** அரசு சாரா அமைப்புக்களினால் வழங்கப்படும் சேவைகள்

"விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளங்காணல், பாதுகாப்பு மற்றும் ஆற்றுப்படுத்தல் தொடர்பான வழிகாட்டிக்க குறிப்பு, சிறுவர் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை" பின்பற்றுக.

## பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள்

Greenbaum, J., & Albright, K. (2018). கடத்தப்பட்ட நபர்ககளுக்கான சுகாதார சேவைகளை மேம்படுத்துதல். காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட குழந்தைகளுக்கான சர்வதேச மையம். https://publications.iom.int/books/caring-trafficked-persons-guidance-health-providers

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு. (2020). மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களை பராமரித்தல்: சுகாதார வழங்குநர்களுக்கான வழிகாட்டுதல்கள். பயிற்சி, வசதிப்படுத்துநர் வழிகாட்டி. https://publications.iom.int/books/caring-trafficked-persons-guidance-health-providers-facilitators-guide

IASC. (2007). அவசரகால அமைப்புகளில் மனநலம் மற்றும் உளவியல் ஆதரவு பற்றிய IASC வழிகாட்டுதல்கள். ஜெனீவா: நிறுவனங்களுக்கு இடையேயான நிலைக்குழு. https://interagencystandingcommittee.org/sites/default/files/migrated/2020-11/IASC%20Guidelines%20on%20Mental%20Health%20and%20Psychosocial%20Support%20in%20Emergency%20Settings%20%28English%29.pdf

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் (n.d). சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான வழிகாட்டுதல் குறிப்பு. https://srilanka.savethechildren.net/sites/srilanka.savethechildren.net/files/library/SOP%20Book%20Final%20Artwork-compressed.pdf

## 4.5. சிறுவர்களின் சவாலான நடத்தைகள் மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சிக்கல்களை முகாமைத்துவம் செய்தல்

**பாடநெறிக்கான விளக்கம்**

இவ் அலகானது சிறுவர் விற்பனை, துஷ்பிரயோகம் மற்றும் ஏனைய இழப்புக்களினால் பாதிப்புற்ற சிறுவர்களுடன் விசேடமாகத் தொடர்புடைய சிக்கலான நடத்தைகள் பற்றிய அறிமுகத்தினை வழங்குகின்றது. இது குறித்த சிறுவர்கள் ஒரு சில தப்பிப் பிழைத்து வாழ்தற்கான பதிலளிப்புக்களை அவர்கள் வளர்த்துக்கொள்வதற்கு அவர்களை ஆளாக்கிய அப் பிள்ளையின் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் ஏனைய முன்னோடிக் காரணிகள் என்பனவற்றின் அமைப்பினுள் சவாலான நடத்தையினை வைப்பதற்கு மாணவர்களை இயலச்செய்கின்றது.

ஆதரவான மற்றும் நிலையான குடும்பத்தில் வளர்ந்த ஏனைய சிறுவர்களைப் போலல்லாது, விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பொருளாதார அல்லது சமூக பாதுகாப்பற்ற தன்மை: பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் இன்மை அல்லது, அவர்கள் குறைந்தளவான பயிற்சியினைக் கொண்டிருத்தல், இல்லாதிருத்தல், சுகயீனமாக அல்லது நிலையற்று இருத்தல் என்பதுடன், அவர்கள் அப்பிள்ளைக்கு அவசியமான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பினைப் பெற்றுத்தர இயலாதவர்களாகவிருத்தல், அப்பிள்ளைகள் அல்லது அவர்களின் குடும்பத்தினை தன் சுயநலத்திற்காக பயன்படுத்துபவர்களாக இருக்கும் வயதுவந்தோர் மற்றும் ஆதரவாக இருக்கும் அதேவேளை, ஆபத்தானவர்களாகவும் இருக்கும் வயதுவந்தோர் போன்ற காரணிகளினால் அடிக்கடி வாழ்க்கை தொடர்பான அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் வயதுவந்தோரிடத்தில் எச்சரிக்கையாக மற்றும் நம்பிக்கையற்றவர்களாக இருப்பதுடன், அதிகாரத்திலுள்ள அனுபவம் மிக்க வயதுவந்தோர்களும் கூட அவர்களிற்கு உதவ முடியாதவர்களாக அல்லது அப்பிள்ளைகளின் யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருப்பதான அனுபவங்களையும் பெற்றிருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக, நிலையற்ற குடும்பங்கள் மற்றும் பாதுகாப்பற்ற பொருளாதாரப் பின்னணி என்பனவற்றால் அப்பிள்ளைகள் அவர்களின் சமூகம் மற்றும் பாடசாலை சூழலில் தவறாக தாழ்வாக மதிக்கப்படல் மற்றும் நிராகரிப்புக்களை எதிர்கொண்டிருக்கக் கூடும். பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களினால் கைவிடப்பட்ட அல்லது துஸ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள் தாங்கள் அன்பு, பாதுகாப்பு மற்றும் அபிலாசைகளுக்கு தகுதியற்றவர்கள் என நம்பக்கூடும். இதுவே சில சிறுவர்கள் தங்கள் பராமரிப்பாளர்களை நம்பாமல் இருத்தல் அல்லது அவர்களின் நடவடிக்கைகளை இடையூறு செய்தல், அல்லது இவர்களின் அதிகாரத்திற்கு கீழ்ப்படியாதிருத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வழிவகுக்கின்றது. இதுபோன்றதொரு சூழ்நிலையில் பராமரிப்பாளர்கள் குறித்த சிறுவர்களின் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள முயற்சிக்காதபோது அவர்கள் அப்பிள்ளைகள் தங்களை பாதுகாத்துக்கொள்ள அல்லது அவமரியாதையாக நடந்துகொள்ளும் நடத்தைகளிற்கு தண்டனை வழங்க முற்படுவதுடன், அவர்களின் அத்தகைய செயற்பாடானது பராமரிப்பாளர்களைப் பற்றி அப்பிள்ளை ஆரம்பத்தில் எண்ணியிருந்ததைப் போன்று இருப்பதனால் அவர்களின் மீதான நம்பிக்கையினை அப்பிள்ளைகள் இழப்பதுடன், தங்களைக் கெட்டவர்களாகவும் தண்டனை பெறுவதற்கு தகுதியானவர்களாகவும் எண்ணிக்கொள்ள சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி விடுகின்றது. இது இப்பிள்ளையானது அதன் பராமரிப்பாளரை முழுமையாக நம்பி அவர்களிடமிருந்து புதிய பழக்கங்களைக் கற்றுக்கொள்ள தயாராக இருக்கும் வாய்ப்பானது இல்லாமற்செய்யப்படுகின்றது. இவ்விடயமானது குறித்த பராமரிப்பாளர்கள் அப்பிள்ளையின் பார்வையிலிருந்து அதன் சவாலான நடத்தைகளினை அவற்றினை மாற்ற அல்லது அகற்ற அவர்கள் முயற்சிக்க முன்னர், அவற்றின் உருவாக்கக் காரணிகள் மற்றும் செயற்பாட்டு நோக்கம் என்பனவற்றினை புரிந்துகொள்வதற்கான மனநிலையினை விருத்தி செய்துகொள்வதன் அவசியப்பாட்டினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இவ் அலகானது இத்தகைய சிறுவர்களிற்கு பராமரிப்பாளர்களாக செயற்படும் நபர்களிற்கு சவாலான நடத்தைகளுக்கு ஆக்கபூர்வமான மற்றும் பயனுள்ள பதில்களை அறிமுகம் செய்வதுடன், அது மன அழுத்ததிலுள்ள சிறுவர்களிற்கு அபாயத்தினை தடுத்து, பாதுகாப்பினை அதிகரிப்பதுடன், புதிய கற்றல் மற்றும் இலகுவில் பழகக்கூடிய சூழலினை ஏற்படுத்தல், தேவையேற்படும் போது மேலதிக ஆதரவு தேவைப்படும் சிறுவர்களை இனங்கண்டு அவர்களை வழிப்படுத்தல். இத்தகைய நடத்தைளுக்கு வழிவகுக்கும் அவர்களின் சொந்த அணுகுமுறைகள், மதிப்புக்கள் மற்றும் பொறுமையின்மை என்பன பற்றி அறிந்து வைத்துக்கொண்டு, நடத்தை முகாமைத்துவத்தின் போதான பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளை இல்லாமற் செய்தல் என்பனவற்றுக்கான அறிவு மற்றும் திறன்களை அறிமுகம் செய்கின்றது.

**பாடநெறியின் குறிக்கோள்கள்**

மாணவர்கள் :

1. அவர்களின் செயற்பாடுகள் மற்றும் செயன்முறைகளை புரிந்துகொள்வதற்காக, சிக்கலான நடத்தைகளுடன் தொடர்புபட்ட கட்டமைப்புக் காரணிகளினை பரிசீலனை செய்வது பற்றிய அறிவு மற்றும் செயற்பாட்டினை அறிந்துகொள்வார்கள்..

2. சிக்கலான மற்றும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய நடத்தைகளுடன் தொடர்புபட்ட கட்டமைப்பு ரீதியான காரணிகளை இனங்காண்பதற்கான அடிப்படை மதிப்பீட்டுத் திறன்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

3. விற்பனையால் பாதிப்புற்ற சிறுவர்களிடையே புதிய கற்றல் மற்றும் இயைபாக்கமடையக்கூடிய வகையில் சிக்கலான நடத்தைகளுக்கு முகங்கொடுப்பதற்கான உத்திகளை கற்றுக்கொள்வார்கள்.

4. மேலதிக அல்லது விசேடமான ஆதரவிற்கு வழிப்படுத்தவேண்டிய மன உளைச்சலில் உள்ள சிறுவர்களை இனங்காண்பார்கள்.

5. நடத்தை முகாமைசெய்தலுக்கான இடையீட்டில் ஏற்படும் ஆபத்துக்களை குறைத்தல் மற்றும் பாதிப்பினைக் குறைத்தல் என்பனவற்றுக்கான உத்திகளை கற்றுக்கொள்வார்கள்.

## 4.5.1. சவாலான நடத்தைகளை உணரச்செய்தல்

ஊகிக்கமுடியாததும் மற்றும் பாதுகாப்பற்ற சூழலில் வளர்ந்த சிறுவர்கள் இயல்பாகவே வாழ்வதற்கான திறன்களை வளர்த்துக்கொள்வார்கள் என்பதுடன், அவர்கள் தன் வாழ்வில் அன்பு அரவணைப்பு மற்றும் பாதுகாப்பினை வழங்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் நிலையான உறவினைக் கொண்ட பிள்ளைகளில் இருந்து வேறுபடுவர்.

விற்பனையால் பாதிப்புற்ற சிறுவர்களின் சவாலான நடத்தைகளிற்கு பங்களிக்ககக் கூடிய, தூண்டக்கூடிய மற்றும் பேணக்கூடிய காரணிகளை மாணவர்கள் இனங்காணக் கற்றுக்கொள்வர். சிறுவர் துஷ்பிரயோகம், கைவிடல் மற்றும் விற்பனையால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கு இத்தகைய அனுபவங்கள் அவர்களின் விருத்தி, அவர்களின் பராமரிப்பாளர்களுடனான உறவு (நம்பிக்கை/பிணைப்பின் மீதான செல்வாக்கு) மற்றும் இவர்களின் எதிர்கால பராமரிப்பாளர்கள் அல்லது அதிகாரத்திலுள்ள நபர்களின் என்பனவற்றின் மீது எவ்விதம் தாக்கம் செலுத்துகின்றன என்தனையும் கற்றுக்கொள்வர். (உ-ம்): ஆக்கிரமிப்பு, தனக்கு அல்லது பிறருக்கு தீங்கு விளைவித்தல், கீழ்ப்படியாமை, ஈடுபாடற்ற தன்மை, பாலியல் ரீதியான நடத்தைகள் மற்றும் பல.

### 4.5.2. சவாலான நடத்தையின் செயற்பாட்டு நோக்கம்

அனைத்து விதமான நடத்தைகளுக்கும் அர்த்தம் உள்ளது என்பதோடு பல்வேறுபட்ட தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கிளைக் கொண்டது (உயிர் வாழ்தல், பாதுகாப்பு. அன்பு மற்றும் உடைமைகள், கௌரவம் மற்றும் தனிப்பட்ட இலக்குகள்). நடத்தையானது இத்தகைய தேவைகளை அடைவதற்கான ஓர் வழிமுறையாக அறியப்படுகின்றது.

இத்தகைய கட்டமைப்புக் காரணிகளை புரிந்துகொள்வதன் மூலம் மாணவர்கள், இத்தகைய நடத்தைகளானவை எத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்த முனைகின்றன அல்லது எந்த தேவைகளை பூர்த்திசெய்ய முயல்கின்றன என்பதனை இனங்காண்பதற்கு மாணவர்கள் கற்றுக்கொள்வர். மாணவர்கள் சிறுவர்களின் சவாலான நடத்தைகளை சவாலுக்குட்படுத்த, மாற்ற அல்லது அகற்ற முனைவதற்கு முன்னர், அச் சிறுவர்களின் பார்வையிலிருந்து அவற்றுக்கான காரணத்தினை அறிந்துகொள்ளக் கற்றுக்கொள்வர்.

சவாலான நடத்தைகளுக்கு, அப்பிள்ளைகள் அவர்கள் தப்பிப் பிழைத்து வாழ்வதற்கான திறன்களை விருத்தி செய்துகொள்ள அவர்களைத் தூண்டிய அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் ஏனைய முன்னோடிக் காரணிகளின் சூழலின் மீது சவாலான நடத்தைகளை வைக்க மாணவர்கள் மாதிரியொன்றை அல்லது கட்டமைப்பொன்றினை பயன்படுத்துவர். அதேவேளை பரந்தளவிலான சமூகபொருளாதார அமைப்பினுள் குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தினை பாதித்த காரணிகளை கருத்திற்கொண்டு, வீரசேகர அவர்களின் கருத்துப்படி 5P மாதிரி, (1996) அல்லது வெளித்தள்ளும் மற்றும் உள்ளீர்க்கின்ற காரணிகள் போன்ற கட்டமைப்பு அல்லது மாதிரியானது சவாலான நடத்தைகளின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு உதவியாக அமைகின்றது.

மாணவர்கள் இத்தகைய நடத்தைகளின் வரலாற்றினை ஆராய்ந்து பின் அது தற்காலத்தில் எவ்விதம் செயன்முறைப்படுத்தப்படுகின்றது என்பதனை அறியத் தொடங்கும்போது தன் பாதுகாப்பின் கீழுள்ள சிறுவர்கள் இதற்கு முன்னர் தம்மை ஆபத்திலிருந்து தப்பிச்செல்வதற்கு அல்லது பாதுகாப்பு பெறுவதற்கு அல்லது நம்பிக்கையற்ற வளர்ந்தோர்களிடம் தமது தேவைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கு இச்சிறுவர்கள் தேவைக்கு அதிகமாக அல்லது பயத்தினாலேயே அவ்விதம் செயற்படுகின்றார்களே தவிர, குறித்த பராமரிப்பாளர்களுடனான தனிப்பட்ட உணர்வுகளின் அடிப்படையில் அவர்கள் வேண்டுமெனறே அவ்விதம் செயற்படவில்லை எனப் புரிந்துகொள்ளத் தொடங்குவார்கள்.

### 4.5.3. சவாலான நடத்தைகளின் செயற்பாட்டு நோக்கினை பரீட்சிப்பதற்கான அடிப்படை மதிப்பீட்டு திறன்கள்

பிள்ளையின் நடத்தையின் பின்னுள்ள நோக்கத்தினை பராமரிப்பாளர்கள் அறிந்துகொள்வதற்கு கீழ்க்கண்ட வினாத்தொகுதிகள் நடத்தையினை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்படலாம். இது குறித்த நடத்தயைின் தன்மை மற்றும் தீவிரம். குறித்த நடத்தை எப்போது மற்றும் எங்கு இடம்பெற்றது, குறித்த நடத்தைக்கு முன்னர், நடத்தையின் போது மற்றும் அதன் பின்னர் (விளைவுகள்) குறித்த பிள்ளை மற்றும் அதனைச் சுற்றியிருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பன பற்றிய அவதானித்து இதன் மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த பிள்ளை என்ன கூறுவதற்கு முயல்கின்றது மற்றும் எதனை அடைய (தேவைகள்) முயல்கின்றது, அல்லது இத்கயை நடத்தையில் ஈடுபடுவதன் மூலம் எத்தகைய பயத்திலிருந்து தப்பிச்செல்ல முயல்கின்றது என்பனவற்றை மாணவர்கள் இனங்காண முயல்தல்.

ஆதாரங்கள்:

https://iris.peabody.vanderbilt.edu/module/fba/cresource/q2/p04/#content

### 4.5.4. சவாலான நடத்தை மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் விதமான சவாலான நடத்தை மற்றும் பிரதிபளிப்பு செயற்பாடுகளுக்கான விரிவாக்க உபாயமுறைகள்

சவாலான நடத்தைகள் பற்றிய வலியுறுத்தலானது. கர்னல் பல்கலைக்கழகத்தின் குடியிருப்பு சிறுவர் பராமரிப்புத் திட்டத்தின் சிகிச்சை பற்றாக்குறையின் இடையீட்டு உத்திகளினை அடிப்படையாகக் கொண்டது. பராமரிப்பாளர்கள் குறித்த பிள்ளையின் மன உளைச்சல் வரலாறு, அப்பிள்ளையின் அன்றாட வாழ்க்கையில் மற்றும் இயலுமான சந்தர்ப்பங்களில் அந்த மன உளைச்சலினை தூண்டக்கூடிய செயற்பாடுகள் என்பனவற்றை அறிந்து, அபாயங்களை குறைக்கும் விதமாக நடந்துகொள்ளும் அதேவேளை, அப் பிள்ளைகள் மற்றும் பராமரிப்பாளர்கள் இருவருக்குமே பாதுகாப்பான சூழலொன்றை உருவாக்க வலியுறுத்தல். சிகிச்சை பற்றாக்குறையின் இடையீட்டின் முக்கிய கூறுகளில் ஒன்று, அச்சுறுத்தல், மன அழுத்தம் மற்றும் விசேடமாக வளர்ந்தோர் கோபத்தின் போது தலையிடல் என்பனவற்றின் கீழ் நடத்தையானது எவ்விதம் அதிகரிக்கின்றது என்பது பற்றி அறிந்துகொள்வதாகும் அத்துடன் அக் கலந்துரையாடலானது நடத்தை மாறுபடல் மற்றும் குறித்த பிள்ளையின் பாதுகாப்பு உணர்வானது உறுதிசெய்யப்படும் போதே புதிய கற்றலானது வினைத்திறனானதாக இருக்கும்.

### 4.5.5. மேலதிக அல்லது விசேட ஆதரவு தேவைப்படும், மன உளைச்சலில் உள்ள சிறுவர்களை இனங்காணல்

சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்களினால் பாதிப்புற்ற சிறுவர்களின் பராமரிப்புத் தேவைகள் என்ற 4 ஆம் அலகானது, மாணவர்களிற்கு வழிப்படுத்தல் செயன்முறை மற்றும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துகின்றது. இந்த விரிவுரையில், மன உளைச்சல் மற்றும் கவலையான (பயம்) பதிலளிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான அறிகுறிகளின்மை என்பனவற்றை நடத்தை மற்றும் உணர்வு ரீதியான எதிர்வினைகள் என்பன எப்போது வெளிக்காட்டிநிற்கின்றன என்பதனை மாணவர்கள் இனங்காண்பர். இத்தகைய சூழ்நிலைகளில் குறித்த பிள்ளையினை மனநல மருத்துவர் அல்லது மன நல சேவை நிலையம் என்பனவற்றில் எதற்கு ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதனை இனங்காணல் அவசியம் என்பதுடன், அப்பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் நலன் என்பனவற்றை விருத்திசெய்வதில் அவர்களுடன் இணைந்து செயற்படல்.

### 4.5.6. நடத்தை முகாமைத்துவ இடையீடுகளில் சவால்கள் மற்றும் பாதிப்புக் குறைபாடுகள் என்பனவற்றுக்கான உபாயமுறைகளை அறிமுகப்படுத்தல்

பாதிப்பினை அளிக்கக்கூடிய நடத்தை முகாமை நடைமுறைகள் மற்றும் அவர்களின் ஆதரவற்ற வெளியீடுகள் பற்றி மாணவர்கள் இனங்காண கற்றுக்கொள்வர்.

மாணவர்கள் சவாலான நடத்தைகளுக்கு பதிலளிப்பதற்கான மாதிரியொன்றை பயன்படுத்த கற்றுக்கொள்வர், தங்களின் சொந்த மனப்பான்மைகள் மற்றும் மதிப்புக்கள் ஆகியன பற்றி அறிந்து கொள்வதானால் அதிகரிக்கும் மற்றும் பிள்ளைகளின் நடத்தைகளை தனிப்பயனாக்கும் மற்றும் நடத்தை முகாமைத்துவத்தில் பாதகமான நடைமுறைகளிற்கு வழிவகுக்கும் அவர்களின் சொந்த நடத்தைகள் பற்றி அறிந்துகொள்வர்.

| பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள் |
| --- |
| சிகிச்சை முரண்பாட்டு தலையீட்டுக் கூறுகளை ஒன்றிணைத்தல் https://rccp.cornell.edu/TCI_LevelOne.html<br>TCI இன் உள்ளடக்கம் இந்த இணைப்பில் சுரக்கமான வடிவத்தில் கிடைக்கின்றது: https://www.greenchimneys.org/wp-content/uploads/2020/05/TCI-Pocket-Guide.pdf<br>பாடத்திட்டம் குறித்த வரையறை https://synergy-fostering.co.uk/therapeutic-crisis-intervention-families/ |

## 4.6. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சம்பவ முகாமைத்துவமும் பதிவுகளை பேணுதலும்

**பாடநெறிக்கான விளக்கம்:**

சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவத்துக்காக பின்பற்றப்படும் செயன்முறை மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொள்ள பராமரிப்பு நிறுவனங்களில் சிறுவர்களைப் பராமரிப்பவர்களுக்கு இப்பாடநெறி வழிகாட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பராமரிப்பாளர்களுக்கு சம்பவ முகாமைத்துவத்தை முன்னெடுப்பதில் நேரடிப்பொறுப்பு இல்லை என்றாலும் பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக எடுக்கப்பட்ட முடிவுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதை உறுதிசெய்வதில் அதிராரிகளுக்கு ஆதரவளிப்பதில் அவர்களுக்கு முக்கிய பங்குண்டு.

சம்பவ முகாமைத்துவம் மூலம் உருவாக்கப்பட்ட தனிநபர் பராமரிப்புத் திட்டத்தினை செயற்படுத்துவதில் பராமரிப்பாளர்களுக்கு நேரடி பங்கு உண்டு. சிறுவர்களின் உளவியல் சமூக நல்வாழ்வினைக் கட்டியெழுப்புவதற்கு பாதுகாப்புத் திட்டங்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நோக்கங்கள் குறித்த பராமரிப்பாளர் உணர்திறனானது சம்பவ முகாமைத்துவம் வெற்றிகரமாக இருப்பதற்கு இன்றியமையாதது. சிறுவர்கள் தொடர்பான சம்பவங்களைத் திட்டமிடுவதற்கும், நிர்வகிப்பதற்கும், பிள்ளைகளின் எதிர்கொள்ளும் திறன்களை ஒரு அனுதாப அணுகுமுறையின் மூலம் வளர்ப்பதற்கும் பின்பற்றப்படும் செயன்முறையை பராமரிப்பாளர் புரிந்துகொள்வதற்கும் இறுதியில் பிள்ளைகளை மீளிணைப்பதற்கான முக்கிய பொறுப்பினை ஏற்கவும் சம்பவ முகாமைத்துவம் பயன்படுகின்றது.

பிள்ளை எதிர்கொள்ளும் வன்முறையின் வகையைப் பொறுத்து சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவ செயன்முறை வேறுபடுவதில்லை. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்குமான செயன்முறை ஒன்றாகும். இருப்பினும் செயன்முறையின் பல்வேறு கூறுகளை செயற்படுத்துவது சிறுவர்கள் மீதான குறிப்பிட்ட வகையான குற்றங்களின் தாக்கத்தைச் சார்ந்தே இருக்கும். எனவே விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் கூடிய சமூகப்பணி மற்றும் சம்பவ முகாமைத்துவ செயன்முறையானது அதன் சொந்த தாக்கங்களையும் சவால்களையும் கொண்டிருக்கலாம்.

**பாடநெறிக் குறிக்கோள்கள்**

மாணவர்கள்:

1. பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவம் தொடர்பான அறிமுக புரிதலைப் பெற்றுக்கொள்ளல்.
2. சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் அவர்களின் தனித்துவமான வகிபங்கினை இனங்காணல்.
3. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுடன் குறிப்பாக சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதனை ஊக்குவித்தல்
4. பாராமரிப்பாளர்களால் வழங்கப்படக்கூடிய நிபுணத்துவமற்ற வழிமுறைகள் பற்றிய புரிதலை வளர்த்துக்கொள்ளல்.
5. இன்னலால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் பணிபுரியும் போது ஏற்படும் சவால்களை புரிந்துகொள்ளல்.

### 4.6.1. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவம் என்றால் என்ன?

துன்பத்தை அனுபவிக்கக்கூடிய சிக்கலிலுள்ள அல்லது துன்பத்துக்குள்ளான பிள்ளையொன்றின் தேவைகளை இனங்காண்பதற்கான அணுகுமுறையே சம்பவ முகாமைத்துவமாகும். குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தவர்கள் நேரடி ஆதரவு மற்றும் ஆற்றுப்படுத்தல் ஊடாக குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பமானது முறையான மற்றும் சரியான நேரத்தில் சம்பவம் குறித்து பணியாற்றுபவரால் ஆதரவளிக்கப்படுகின்றனர். சிக்கலான மற்றும் அடிக்கடி சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு சம்பவ முகாமைத்துவமானது தனித்துவமாக்கப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட, முழுமையான மற்றும் பல்துறை ஆதரவினை வழங்குகின்றது[5].

சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவம்:

- ***பிள்ளை*** மற்றும் அதன் குடும்பத்தின் தேவைகளில் கவனம் செலுத்தி, அவர்களின் தேவைகள் பிள்ளையின் சிறந்த நலனை உறுதிசெய்யும் வகையில் எய்தப்படுவதனை உறுதிசெய்வதுடன், கொடுக்கப்பட்ட சூழிலில் பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தின் மீண்டு வரும் தன்மையினையும் கட்டியெழுப்புகின்றது. பெரும்பாலான சூழலில் சம்பவப் பணியாளர்கள் குழந்தைத் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளடங்களாக, பல பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள். சம்பவ முகாமைத்துவத்தை முன்னெடுக்கும் போது சம்பவப் பணியாளர்கள் ஒவ்வொரு பிள்ளைக்கும் மேலதிகமாக அப்பிள்ளையின் குடும்பம் அல்லது குடும்பத்தினர்களை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.
- இது சம்பவப் பணியாளர் எனக் குறிப்பிடப்படும் ***ஒரு முக்கிய பணியாளரால்*** முன்னெடுக்கப்படுகின்றது. அவர் பிள்ளையின் சிறந்த நலனுக்காக முடிவுகள் எடுக்கப்படுவதையும் நிறுவப்பட்ட செயன்முறைக்கு ஏற்ப சம்பவம் ஒன்று நிர்வகிக்கப்படுவதையும் உறுதிசெய்வார், மேலும் அனைத்து வகிபங்காளர்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பானவர். நிறுவன பராமரிப்பிலுள்ள சிறுவர்களுக்கு நன்னடத்தை அதிகாரிகளே சம்பவப் பணியாளர்கள்.
- ***நிறுவப்பட்ட சம்பவ முகாமைத்துவ செயன்முறைக்கு*** ஏற்ப செயற்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு சம்பவமும் சிறுவர்களின் அர்த்தமுள்ள பங்கேற்பு மற்றும் குடும்ப அதிகாரம் முழுவதனையும் உள்ளடக்கிய தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் நகர்கின்றது.
- ***குடும்பம், சமூகம் மற்றும் அரச ஆதரவுகள் மற்றும் சேவைகளின்*** சிக்கலான தொகுப்பினை ஒரு பாதுகாப்பான மற்றும் நெறிமுறையான பரிந்துரை முறை மூலம் ***ஒருங்கிணைக்க***, அதே போல தொடர்ந்து பராமரிப்பினை உறுதிசெய்பவராக செயற்படவும் சம்பவப் பணியாளர்கள் அவசியம்.

இந்த முறை மூலம் சம்பவங்களை நிர்வகிப்பது சிறுவர்களுக்கு சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும். அவர்களுக்கு தேவையான சேவைகளை சர்யான நேரத்தில் பெறுவதனை உறுதிசெய்ய உதவுகின்றது.மேலும் அவர்களின் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை சிறப்பாக கவனித்துக்கொள்ள உதவுகின்றன. இலகுவில் அணுகக்கூடிய, பாரபட்சமற்ற, வயதுக்கு ஏற்ற, பாலின உணர்வு மற்றும் உள்ளடக்கிய சம்பவ முகாமைத்துவத்தை உறுதிசெய்வது, பிள்ளைகளுக்கு பொருத்தமான அணுகக்கூடிய சேவைகளை வழங்குவதற்கான முக்கிய காரணியாகும்.

---

5 மனிதாபிமான நடவடிக்கையில் குழந்தைப் பாதுகாப்பிற்கான கூட்டணி (2019). மனிதாபிமான நடவடிக்கையில் குழந்தைப் பாதுகாப்பிற்கான குறைந்தபட்ச தரநிலைகள்.

### 4.6.2. பராமரிப்பு நிலையங்களில் சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்

பராமரிப்பு நிலையங்களில் சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபடும் வெவ்வேறு பணியாளர்கள் விசேடமன வகிபங்கினைக் கொண்டுள்ளனர்.

- பிள்ளை மற்றும் அதன் (விரிவாக்கப்பட்ட) குடும்பம்
- சம்பவப் பணியாளவர்கள், அரச சிறுவர் பாதுகாப்பு சேவைகள், பராமரிப்பு நிலையங்களிலுள்ள பராமரிப்பாளர்கள் (இதன் பின்னர் பராமரிப்பாளர்கள் என விளிக்கப்படுவர்).
- சமூகத்தின் அங்கத்தவர்கள் மற்றம் சமூக அடிப்படையிலான கட்டமைப்பு உள்ளடங்கலான சமூகங்கள்.
- வைத்தியசாலைகள், பாடசாலைகள், முறைசாரா கல்வியாளர்கள், உளவள நிபுணர்கள் போன்ற சேவை வழங்குனர்கள் (அரச மற்றும் அரசுசாரா).

#### பிள்ளை

சம்பவ முகாமைத்துவ செயன்முறையில் பிள்ளையின் பங்கு முக்கியமானது. பிள்ளைகளின் வயது, பால்நிலை, புரிதலுக்கான இயலுமை மற்றும் விருத்தி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சம்பவப் பணியாளர் மற்றும் பராமரிப்பாளர்கள் ஒவ்வொரு பிள்ளையுடனும் பேசுவதற்கும், பணிபுரிவதற்கும் வசதியாக இருத்தல் வேண்டும். குறித்த பிள்ளையானது பின்வரும் காரணிகளுக்கு பராமரிப்பாளர்களினால் ஆதரவளிக்கப்படுதல் வேண்டும்:

- அவர்களின் சம்பவப் பணியாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் சௌகரியமாக உணர்வதற்கு.
- தகவலறிந்த சம்மதம்/ஒப்புதலினை வழங்குதற்கு
- சம்பவ முகாமைத்துவ செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையிலும் பரிந்துரைக்கப்பட்ட செயல் தொடர்பில் அவர்களின் கருத்துக்கள் மற்றும் விருப்பங்களைத் தெரிவித்தல், கேள்விகளை வினவுதல் மற்றும் மறுப்பு/உடன்பாட்டினை வெளிப்படுத்துவதற்கு
- குறித்த முடிவெடுக்கும் செயன்முறைக்கு பங்களிக்கும் வகையில் அல்லது அதற்கென உருவாக்கப்பட்ட முக்கிய முடிவுகளை புரிந்துகொள்வதற்கு
- சம்பவ முகாமைத்துவச் செயன்முறையின் விருத்திக்கு பங்களித்தல். பிள்ளையின் வயது மற்றும் முதிர்ச்சி என்பனவற்றுக்கு அமைவாக குறித்த செயன்முறை மற்றும் அதன் விளைவினால் திருப்தியடைகிறார்களா இல்லையா என்பது பற்றிய கருத்துக்களை தெரிவிப்பதற்கு.

**கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்**

→ குறித்த பிள்ளையினை ஆசுவாசப்படுத்தி, பாதுகாப்பாக உணரச்செய்வதுடன், அவர்கள் கூறவரும் விடயங்களை செவிமடுத்து, நடக்கும் விடயங்களை அவர்களின் வயதிற்கு ஏற்றவகையில், புரிந்துகொள்ளக்கூடியதாக, பாரபட்சமற்றவகையில் மற்றும் பால்நிலை உணர்திறன் மிக்க வகையில் விளக்குதல் சம்பவப் பணியாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களின் வகிபாகமாக அமைகின்றன. இப்பிள்ளைகள் தன் தாய்மொழி, சைகை மொழி, அல்லது வாய்மொழி மூலமற்ற தொடர்பாடல் முறை போன்றவற்றில் அவர்களிளுக்கு வசதியான விதத்தில் தொடர்பாடல் செய்யக்கூடிய பராமரிப்பாளருடன் தொடர்புகொள்ள அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

→ சில நேரங்களில் இச்செயன்முறையில் தன் பராமரிப்பாளர்களோ அல்லது குடும்பத்தவரோ பங்குபற்றுவதை அப்பிள்ளை விரும்புவதில்லை. முடியுமானபோதெல்லாம் சம்பவப் பணியாளர்கள்

அப்பிள்ளை என்ன எண்ணுகின்றது என புரிந்துகொண்டு அவர்களின் பரச்சினைகளை தீர்க்க முயலவேண்டும். பராமரிப்பாளர்கள் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் கட்டயாமாக பங்கெடுக்க வேண்டும் என்பது குறித்த நாட்டின் சட்ட தேவைப்பாடுகள் பற்றிய புரிதலையும் பராமரிப்பாளர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

## குடும்பங்கள்

**குடும்பங்களானவை** உறவுமுறை, திருமணம், தத்தெடுத்தல் அல்லது தெரிவு என்பனவற்றால் பிணைக்கப்பட்ட சமூகக் குழக்களாகும். குடும்ப அங்கத்தவர்கள் தெளிவாக வரையறுக்கப்பட்ட உறவுமுறைகள், நீண்ட கால பொறுப்புக்கள், பரஸ்பர கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் ஒற்றுமையின் உணர்வுகளைக் கொண்டுள்ளனர்.[6] இது பெரும்பாலும் ஒரு அல்லது இரண்டு பெற்றோர்களால் உருவாக்கப்பட்டிருப்பினும் மாற்றுப் பெற்றோர்கள், தாத்தா, பாட்டி, நீட்டிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள், முறைசார் அல்லது முறைசாரா வளர்ப்புப் பெற்றோர், பிள்ளை வீட்டிலுள்ள போது நேரடிப் பொறுப்பினைக் கொண்ட பாதுகாவலர்கள் போன்றவர்களை உள்ளடக்கியும் உருவாக்கப்படுகின்றன. பல தசாப்தங்களின் பின்னரான ஆய்வின் படி ஒரு பிள்ளையின் மிகவும் பாதுகாப்பான சூழலாகக் கருதப்படுவது அவர்களின் உடனடி மற்றும் விரிவாக்கப்பட்ட குடும்பமாகும்.

முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தாலே ஒழிய, பின்வருவன **பெற்றோர்கள், நீட்டிக்கப்பட குடும்பம் அல்லது பாதுகாவலர்களின்** வகிபாகமாக கருதப்படல் வேண்டும்:

- பிள்ளைக்கு முன்னரே தெரிவிக்கப்பபட்ட சம்மதத்தினை தெரிவிப்பதற்கு.
- சம்பவ முகாமைத்துவ செயன்முறையின் அனைத்து கட்டங்களிலும் தொடர்புபட்டிருப்பதற்கு.
- சம்பவம் குறித்த திட்டத்தில் ஒப்புக்கொண்டபடியான செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு.

குடும்பத்தின் **ஏனைய அங்கத்தவர்கன்** பின்வரும் வழிமுறைகளில் இணைந்துகொள்ளலாம்:

- பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத போது, பிள்ளையின் வேண்டுகோளின் பேரில் சம்பவ முகாமைத்துவ செயன்முறையில் ஒரு நம்பிக்கையான வயது வந்தவராக செயற்படுவதற்கு
- சம்பவம் குறித்த திட்டத்தில் ஒப்புக்கொண்ட செயல்களை அமுல்படுத்துவதற்கு. எடுத்துக்காட்டாக, பிள்ளையொன்றின் தாய் வெளிநாட்டிலுள்ளபோது அப்பிள்ளையுடன் தொடர்ச்சியாக தொடர்பிலிருக்கும் அதன் அத்தை/சித்தி: அல்லது விடுமுறை நாட்களில் அப்பிள்ளையினைக் கவனித்துக்கொள்ளும் அதன் பாட்டி.

## சம்பவப் பணியாளர்கள்

சம்பவ முகாமைத்துவத்தின் ஆரம்பகட்ட ஆய்ந்தறிதல் முதல் சம்பவத்தினை முடிக்கும் போதான பதிவு செய்தல் வரையில் குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தினரின் பராமரிப்பு பற்றிய பொறுப்பினை கொண்டுநடாத்தும் சம்பவப் பணியாளர்களின் வகிபாகமானது சம்பவ முகாமைத்துவத்தில் முக்கியமான ஒன்றாகும். பராமரிப்பு முறைமைக்குள் உள்நுழையும் ஒவ்வொரு பிள்ளையினதும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக நீதிமன்றத்தினால் சிறுவர் நன்னடத்தை அதிகாரி நியமிக்கப்படுகின்றார். ஆகவே சம்பவ முகாமைத்துவத்தின் போது தன் பராமரிப்பின் கீழுள்ள பிள்ளையின் பாதுகாப்புக்கு நன்னடத்தை அதிகாரிகளே பொறுப்பானவர்களாகின்றனர்.

[6] சேவ் த சில்ரன் (2014) நிலைப்பாட்டு அறிக்கை: குடும்பங்கள்.

சம்பவப் பணியாளர்கள் மூன்று அடிப்படை செயற்பாடுகளுடன் கூடிய கீழ்க்கண்ட பொறுப்புக்களையும் கொண்டுள்ளனர் [7]:

1. ஆதரவு செயல்பாடு:
   - விசேடத்துவமற்ற மனநல மற்றும் உளவியல் ஆதரவினை நோக்காகக் கொண்டு அடிப்படை உணர்வு ரீதியான ஆதரவினை வழங்குதல்.
   - பிள்ளை மற்றம் அதன் குடும்பத்திற்கு தகவல்களை வழங்குதல்.
   - பிள்ளையின் சார்பில் சட்ட பிரதிநிதித்துவம்
   - பிள்ளையின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையிலான சேவைகளுக்கான அணுகலை உறுதிசெய்தல்
   - பிள்ளையின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் ஆதரவினை வழங்குதல்
   - பாதுகாப்பான பராமரிப்பு ஏற்பாடுகளை பெறுவதற்கும், அத்தியாவசியமான காலத்தில் குடும்பம் பிரிந்து சென்றுவிடின் அவர்களை தேடுவதற்கும் அப்பிள்ளைக்கு உதவுதல்.

2. ஒருங்கிணைப்புச் செயற்பாடு:
   - சம்பவ முகாமைத்துவத்தின் போது தேவையேற்படின் பிள்ளைகள் மற்றும் குடும்பங்களை செயல்திறனான முறையில் அடையாளங் காண்பதற்கு முக்கியமான பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.
   - சேவைகளை நிறுவி, பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அச்சேவைகளை அணுக உதவுதல்.
   - மேம்படுத்தப்பட சேவை அணுகல் பற்றி ஆலோசனை வழங்கல்.
   - விடய மாநாடுகளை நடாத்துதல்.

3. தகவல் முகாமைத்துவ செயற்பாடு:
   - சம்பவங்களை ஆவணப்படுத்தல்
   - சம்பவ முகாமைத்துவ தகவல்கள் மற்றும் கோப்புகளை சேமித்துவைத்தல்.
   - சம்பவ முகாமைத்துவத் தரவுத்தளத்தினை புதுப்பித்தல்
   - ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுப் பாதுகாப்பு மற்றும் தகவல் பகிர்பு பின்னேடுகளைக் கடைப்பிடித்தல்.

## பல்துறை சேவை வழங்குனர்கள்

தற்போதுள்ள சேவைகள் பற்றி படமிடலானது சம்பவ முகாமைத்துவத்தில் முக்கிய கூறொன்றாகும். பாதுகாப்பு, சிறுவர்களுக்கு இலகுவான, பால்நிலை உணர்திறன் மிக்க மற்றும் பல்துறைசார் ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளைக் கொண்ட – சிறுவர் பாதுகாப்பு, பால்நிலை வன்முறை, மாற்றுத்திறனாளிகளை உட்சேர்த்தல், கல்வி, சுகாதாரம், போசாக்கு, நீர், சுத்தம் மற்றும் வாழ்வாதாரங்கள், சமூக பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு தொடர்பான சேவை வழங்குனர்களை ஈடுபடுத்துவதானது ஒவ்வொரு பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தவர்களுக்கு முழுமையான ஆதரவிற்கான அணுகலினை வழங்கும்.

---

[7] மனிதாபிமான நடவடிக்கையில் குழந்தைப் பாதுகாப்பிற்கான கூட்டணி (2021). திருத்தப்பட்ட ஊடாடல் குழந்தைப் பாதுகாப்பு சம்பவ முகாமை தொடர்பான பயிற்சி: பயிற்சி நிலை 01 தொகுதி 02. குழந்தைப் பாதுகாப்பு சம்பவ முகாமையின் அடிப்படைகளைப் பார்க்கவும்.

சம்பவ முகாமைத்துவத்தில் சேவை வழங்குனர்கள் பலவிதமான வகிபாகங்களைக் கொண்டுள்ளனர்:

- பிள்ளையின் சம்பவம் குறித்த திட்டத்தின்படி தமக்கு சம்பவப் பணியாளர்களினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு பொருத்தமான ஆதரவினை வழங்குதல்.
- ஆற்றுப்படுத்தல் வழிமுறையினூடாக இலகுவில் பாதிக்கப்படக் கூடிய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை பொருத்தமான சேவைகளுக்கு வழிப்படுத்தும் பொறுப்பினைக் கொண்டவர்கள்.

### 4.6.3. சம்பவ முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவமானது இடையீட்டு சம்பவ முகாமைத்துவத்துக்கான வழிகாட்டிகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு என்பனவற்றை உள்ளடக்கிய வழிகாட்டிக் கோட்பாடுகளை பின்பற்றுகின்றது. முக்கிய கோட்பாடுகள் பற்றிய முழுமையான விளக்கத்திற்கு கீழ்க்கண்ட வழிகாட்டிகளை பார்க்கவும்.

- **துன்புறுத்தக் கூடாது:** பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மேலும் துன்பத்திற்கு உள்ளாக்காதிருத்தலே சம்பவ முகாமைத்துவத்தின் மிகவும் அடிப்படையான கொள்கையாகும். செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையிலும் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் திரட்டப்படும் தகவல்களினால் குறித்த பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் எவ்வித துன்பங்களுக்கும் உள்ளாகவில்லை என்பதனை குறித்த சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்ற அனைவரும் உறுதிசெய்தல் வேண்டும்.

- **பிள்ளையின் சிறந்த நலனை முன்னுரிமைப்படுத்தல்:** சம்பவ முகாமைத்துவ செயன்முறையில் தொடர்புபட்டுள்ள அனைவரும் பிள்ளையின் சிறந்த நலனை உறுதிசெய்யும் வகையில் செயற்படுதல் வேண்டும். இது பிள்ளையின் உடல் மற்றும் உணர்வு ரீதியான பாதுகாப்பு மற்றும் நலனைக் குறிக்கின்றது. சம்பவப் பணியாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் பிள்ளையின் சவால்கள் மற்றும் வளங்கள் என்பனவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது இப்பிள்ளையின் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள், அல்லது சமூகத்தின் அல்லது சம்பவத்துடன் தொடர்புபட்ட ஏனையவர்களின் விருப்பு மற்றும் அல்லது கலாசார விழுமியங்கள் என்பனவற்றுக்கு மேலாக பிள்ளையின் அக்கறையினை முன்னுரிமைப்படுத்தலைக் குறிக்கின்றது.

- **பாரபட்சமின்மை:** சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் குறித்த பிள்ளைகளை அவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நடாத்துதல் வேண்டும். பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அவர்களின் பால்நிலை, வயது, மதம், இயலாமை, இனம், பால்நிலை வேறுபாடு அல்லது பொருளாதார நிலைமை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வேறுபாடாக நடாத்தக் கூடாது. பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சம்பவப் பணியாளர்களுடன் தமது சொந்த மொழியில், சைகை மொழி மற்றும் விதிவிலக்கான வாய் மொழி மூலமற்ற வழி மூலமாக தொடர்பாடல் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். சம்பவ முகாமைத்துவ செயன்முறையில் ஈடுபடுபவர்கள் அனைவரும் மதிப்பிடுதல், மட்டந்தட்டுதல் அல்லது எதிர்மறையான வார்த்தைப்பிரயோகம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் முற்தீர்ப்பு மற்றும் பாரபட்சமாக இருத்தல் போன்றனவற்றை குறிப்பாக தவிர்க்க வேண்டும்.

- **ஒழுக்க நியமங்கள், குறிப்பாக சிறுவர் பாதுகாப்புக் கொள்கைளுக்கு இனங்கியொழுகுதல்:** சிறுவர்களுடன் பணிபுரியும் முகவர்கள் மற்றும் பணியாளர்கள் ஒழுக்க தராதரங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடபடிமுறைகளை கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும். பராமரிப்புப் பணியாளர்கள் தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை கண்டிப்பாக அறிந்திருத்தல் வேண்டும்.

- **தகவலறிந்த ஒப்புதல் மற்றும் அல்லது சம்மதத்தினை தேடுதல்:** மட்டுப்பாடுகளற்ற மற்றும் தகவலறிந்த தெரிவினை செயற்படுத்துபவர்களுக்கு தகவலறிந்த சம்மதமே தன்னார்வ உடன்படிக்கையாகும். தகவலறிந்த சம்மதத்தினை வழங்குவதற்கு பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் கண்டிப்பாக அவர்களுக்கு கிடைக்கக் கூடிய சேவைகள் மற்றும் தெரிவுகள், சேவைகளைப் பெற்றுக்கொள்வதனால் கிடைக்கப்பெறக் கூடிய சவால்கள் மற்றும் பலன்கள் மற்றும் தகவல்கள் எவ்விதம் திரட்டப்பட்டு எவ்வாறாக பயன்படுத்தப்படுகின்றன என்பன பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும். சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் இரகசியத் தன்மையானது எப்போது வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் சரியாக அறிந்திருத்தல் வேண்டும். தகவலறிந்த சம்மதமே சேவைகளில் பங்குபற்றுவதற்கான விருப்பமாக எடுத்துக் கொள்ளப்படும். இது பிள்ளைகள் தகவலறிந்த சம்மதத்தினை வழங்குவதற்கு சட்ட ரீதியாக அல்லது உடல் ரீதியாக மிகவும் இளவயதாக உள்ளபோது ஆனால் பங்குபற்றுதலுக்கான சம்மதம் வழங்குவதற்கு சரியான வயதில் உள்ளபோது பயன்படுத்தப்படும்.

- **இரகசிய தன்மைக்கு மதிப்பளித்தல்:** சம்பவ முகாமைத்துவ செயன்முறையில் ஈடுபட்டிருப்பவர்கள் குறித்த பிள்ளைகளின் மற்றும் குடும்பத்தவர்களின் இரகசிய தன்மைக்கான உரிமையினை உறுதிப்படுத்தல் வேண்டும். இது குறித்த தகவலானது எவ்வாறு சேமிக்கப்படுகின்றது, பகிரப்படுகின்றது மற்றும் ஏனையவர்களுக்கு வெளியிடப்படுகின்றது என்பதனை உள்ளடக்குகின்றது. **'தெரிந்து கொள்ள வேண்டும்'** என்ற பதமானது தகவலை மட்டுப்படுத்தல், விசேடமாக பிள்ளையினைப் பாதுகாப்பதற்கு உணர்திறனான தகவல் என்பனவற்றை தெரிந்து கொள்ள அவசியமானவர்களுடன் மட்டுமே பகிர வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. இரகசியத்தன்மையை மதிக்க சேவை வழங்குனர்கள் சிறுவர்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதுடன், ஒப்புக்கொண்ட தரவுப்பாதுகாப்பு கொள்கைகளுக்கிணங்க தகவல்களை பாதுகாப்பாக சேமித்து வைக்க வேண்டும். சம்பவ முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் எவரும் சிறுவர்களின் அல்லது அவர்களின் ஏனைய தகவல்களையே சம்பவத்துடன் தொடர்புடைய ஊழியர்கள் உட்பட சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புபடாத எவருடனும் பகிரக்கூடாது. ஒரு பிள்ளையின் பாதுகாப்பு தொடர்பான உடனடி அச்சுறுத்தல்களை அடையாளம் காணும்போதோ அல்லது குற்றமொன்றினைப் புகாரளிக்க சட்டத்தின்படி தேவைப்படுத்தப்படும் போதோ இரகசியத்தன்மைக்கான எல்லைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இரகசியத்தன்மைக்கான எல்லைகள் குறித்த மதிப்பீட்டின் ஆரம்பத்திலேயே அச்சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விளக்கப்பட வேண்டும்.

- **பொறுப்புணர்வை உறுதிப்படுத்தல்**: சம்பவ முகாமைத்துவ செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் அப்பிள்ளை, அதன் குடும்பம் மற்றும் சமூகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள். அவர்களின் செயல்கள் மற்றும் அவற்றின் விளைவுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்றல் வேண்டும்.

- **சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு தங்கள் பலத்தை வளர்த்துக்கொள்ள ஊக்கப்படுத்துதல்:** சம்பவ முகாமையாளர்கள் பலம் சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்த வேண்டும். சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பெரும்பாலும் இலகுவில் பாதிக்கப்படக்கூடியவரகள், ஆனால் அவர்கள் தங்களுக்கு தாங்களே உதவிக்கொள்வதற்கான வளங்கள் மற்றும் திறன்களைக் கொண்டுள்ளதுடன், அவர்களின் சொந்தப் பிணக்குகளுக்கு தீர்வுகாண்பதில் பங்களிக்கின்றனர். சம்பவ முகாமைத்துவ செயற்பாட்டின் அனைத்து அம்சங்களிலும் சிறுவர்கள் மற்றும் பாதிப்புகளில் மட்டும் கவனம் செலுத்தாமல் சிறுவர்கள் மற்றம் அவர்களின் குடும்பங்கள் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சவால்களை நிவர்த்தி செய்து தங்கள்

பலம் மற்றும் வளங்களை வளர்த்துக்கொள்ள உதவ வேண்டும். இது அச்சிறுவர்களுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மற்றும் நிலையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள உதவும்.

- **அனைத்து செயல்களையும் சிறுவர் மேம்பாடு, சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சரியான அறிவினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்:** சிறுவர்கள் மற்றும் அவர்களின் அடிப்படை மற்றும் அடிக்கடி பேசப்படாத தேவைகளை பூர்த்தி செய்ய உதவும் பாதிப்புகள், ஆற்றல் இயக்கவியல் மற்றும் ஆபத்து காரணிகளைப் சம்பவ முகாமையாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளையைப் பற்றிய அவர்களின் சிறுவர்களின் வயது, பாலினம், திறன் மற்றும் வளரும் திறன் ஆகியவற்றின் வலுவான புரிதல் குறித்த பிள்ளையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதற்கு உதவும்.

- **சிறுவர்களின் அரத்தமுள்ள பங்களிப்பினை எளிதாக்குதல்:** சிறுவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளில் அர்த்தமுள்ள முறையில் பங்கெடுத்தலுக்கும் உரிமையுண்டு. இது சிறுவர்கள் தமக்கு சங்கடத்தினை உருவாக்கும் கேள்விக்கு பதிலளிக்காதிருப்பதனையும் இது உள்ளடக்கும். சம்பவ முகாமைத்துவத்தில் சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் செயலில் பங்கு வகிக்க சம்பவப் பணியாளர்கள் உதவ வேண்டும்.

- **கலாசார ரீதியாக பொருத்தமான செயல்முறைகள் மற்றும் சேவைகளை வழங்குதல்:** சம்பவ முகாமைத்துவ செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் தாங்கள் பணிபுரியும் வேறுபட்ட சமூக அமைப்பு மற்றும் தனிநபர், குடும்பம் மற்றும் சமூக வேறுபாடுகளை அறிந்திருக்க வேண்டும். சிறுவர்களின் சிறந்த நலன், கலாசார விழுமியங்கள், அல்லது நடைமுறைகளுக்கிடையில் முரண்பாடு ஏற்படும் போது அதனுடன் தொடர்புபட்ட அனைவரும் பிள்ளையின் சிறந்த நலனுக்கே முக்கியத்துவம் வழங்கி அப்பிள்ளையின் சிக்கலான சந்தரப்பத்தில் தள்ளாத வகையில் செயற்பட வேண்டும். சில சூழ்நிலைகளில் சிறுவர் பாதுகாப்பு பிரச்சினைகள் மற்றும் கலாசார நடைமுறைகளை எதிர்கொள்வது சிறுவர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சம்பவப் பணியாளர்கள் மத்தியில் மோதல்கள் அல்லது கூடுதல் ஆபத்துகளுக்கு வழிவகுக்கும். முடிவுகளானது எழக்கூடிய சவால்கள் மற்றும் தீங்கிழைக்கக் கூடாது மற்றும் பிள்ளையின் சிறந்த நலன் ஆகிய கொள்கைகளினை சரியாக பரிசீலனை செய்த பிறகே மேற்கொள்ளப்பட வேண்டும்.

- **ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு**: சம்பவ முகாமைத்துவத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று நன்கு ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குவதாகும். சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான ஆணையுடன் அனைத்து நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான செயன்முறையை சம்பவ முகாமைத்துவத்தால் வழங்க முடியும்.

- **தொழில்முறை எல்லைகளை பராமரித்தல் மற்றும் முரண்பாடுகளை கண்டறிதல்:** சம்பவ முகாமைத்துவ செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் சேவைகள் அல்லது ஆதரவிற்கு ஈடாக சலுகைகள், கொடுப்பனவுகள் அல்லது பரிசுகளை கேட்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ கூடாது.

- மேலதிகமாக பாதுகாப்புப் படிமுறைகள், **சிறுவர் நட்பு** மற்றும் **சிறுவர்களை மையமாகக்** கொண்டிருத்தல் ஆகிய இரண்டு அணுகுமுறைகளும் முக்கியமானவையாகும்.

- **சிறுவர்களுடன் நட்பாக** இருப்பதானது சிறுவர்களுக்குப் பொருத்தமான மற்றும் அணுகக்கூடிய வகையில் ஆதரவு வழங்குவதை உள்ளடக்குகிறது. எடுத்துக்காட்டாக திறன்கள் மற்றும் புரிந்துகொள்ளும் நிலைகளைக் கொண்ட வெவ்வேறு வயது சிறுவர்களால் எளிதில்

புரிந்துகொள்ளக்கூடிய வகையிலான தகவலைத் தொடர்புகொள்வதன் மூலம் அல்லது வழங்குவதன் மூலம்.

- **சிறுவர்களை மையமாகக்** கொண்டிருப்பது சிறுவரின் தேவைகள் மற்றும் அவர்களின் சிறந்த நலனை மையமாகக் கொண்ட விதத்தில் ஆதரவு சேவைகளை, வழங்குதல் மற்றும் முடிவுகளை எடுப்பதை உள்ளடக்குகின்றது.

- குறிப்பாக சிறுவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை என்பது:
  - சிறுவருடனான **தொடர்புகள் மற்றும் உறவுகளை வளர்த்துக்கொள்ள** நேரத்தினை செலவிடுவது, **பிள்ளை கூறவருவதனை செவிமடுப்பது** மற்றும் **பிள்ளைக்கு தனியுரிமையுடைய தனிநபராக பதிலளிப்பது.**
  - தனது சொந்த சம்பவத்தில், தொடர்புபட்ட அப்பிள்ளையின் **காத்திரமான பங்கேற்பினை உறுதிசெய்தல், பிள்ளையின் கருத்துக்களைக் கேட்டு அவர்களின் வயது** விருத்தி **மற்றும் புரிதலுக்கு ஏற்ப அவர்களைப் பாதிக்கக்கூடிய முடிவுகளில் அவர்களை ஈடுபடுத்துதல்.**

### 4.6.4. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவ செயன்முறை - ஓர் அறிமுகம்

சமூகச் செய்றபாடு மற்றும் சம்பவ முகாமைத்துவ செயன்முறை ஆரம்பம் முதல் இறுதி வரையில் ஆறு நிலைகளை உள்ளடக்கியுள்ளது. இது கீழ்க்கண்ட விளக்கப்படத்தில் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ முகாமைத்துவ செயற்பாடு ஆரம்பிக்க முன்னர் நன்னடத்தை அதிகாரி நியமிக்கப்பட்டு செயன்முறை ஆரம்பிக்கும் போது சம்பவப் பணியாளர்களுக்கான பொறுப்பினை அவர் ஏற்றுக்கொள்கின்றார். இலங்கையில் நீதிமன்றங்களால் தீர்மானிக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பெரும்பாலான சிறுவர்கள் மருத்துவமனைகளை அடிப்படையாகக் கொண்டு மருத்துவ அதிகாரிகளின் தலைமையின் கீழ் சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவ செயன்முறையை கையாளுகின்ற மருத்துவமனைகளுக்கு ஆற்றுபடுத்தப்படுகின்றனர். இச்செயற்பாட்டில் சம்பவப் பணியாளராக நன்னடத்தை உத்தியோகத்தர் செயற்படுவார்.

சம்பவப் பணியாளர், மருத்துவ அதிகாரிகளுடன் சேர்ந்து மதிப்பீடு மற்றும் சம்பவம் குறித்த திட்டமிடலைத் தொடர்ந்து, அடையாளம் காணுதல் மற்றும் ஆய்தறிதல் ஆகிய செயன்முறையைத் தொடங்குகின்றார். இச்செயன்முறை மூலம் நிறுவன பராமரிப்புக்கு பரிந்துரைக்கப்பட்டு பராமரிப்பு நிலையத்திற்கு வருகின்ற சிறுவர்கள் வழக்கமாக சம்பவத் திட்டமொன்றினை கொண்டிருப்பர். எனவே பராமரிப்பாளர்களின் பங்கு அத்திட்டத்தினை **செயற்படுத்தும்** கட்டத்தில் இருந்து தொடங்குகின்றது. இருப்பினும் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பிள்ளையின் சூழ்நிலைக்கேற்ப தேவைப்படின் திட்டமிடலானது மீண்டும் நிகழலாம்.

| இனங்காணல் மற்றும் ஆய்ந்தறிதல் | மதிப்பீடு | சம்பவத் திட்டமிடல் | அமுல்படுத்துதல் | மீளாய்வு | சம்பவ முடிவு |
|---|---|---|---|---|---|
| அவசர ஆபத்துகள்/ தகவலறிந்த ஒப்புதல் /சம்மதமளிக்கப்பட்ட சம்பவங்களுக்கான ஆரம்ப பதிவுக்கான உடனடித் தலையீடு தேவைப்படுகின்ற பிள்ளையினை அடையாளம் காணுதல் | சிறுவர்கள், அவர்களின் குடும்பம் மற்றும் சமூக மட்டத்தில் ஆபத்தான மற்றும் பாதுகாப்பான காரணிகளை மதிப்பிடுதல் அதிக ஆபத்துள்ள சம்பவங்களுக்கு முன்னுரிமையளித்து உடனடி தலையீட்டினை வழங்குதல் | வன்முறை அபாயத்தைக் குறைப்பதற்கும், பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதற்கும் ஒரு பிள்ளைக்கான தனிப்பயனாக்கப்பட்ட சம்பவத்திட்டத்தை உருவாக்குதல். ஏன்ன நடக்க வேண்டும், யார்செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என்பதனைக் கண்டறியவும் யதார்த்தமான நோக்கங்களை அமைக்கவும், சிறுவர்கள் மற்றும் அவர்களது பராமரிப்பாளர்களுடன் தகுந்தவாறு சுருக்கத்தைப் பகிந்து கொள்ளுதல். கேள்வி: சிறந்த ஆதரவை எவ்வாறு வழங்க முடியும்? | குடும்பம் மற்றும் சமூக ஆதரவை திரட்டுதல் உள்ளிட்ட நேரடி ஆதரவு மற்றும் பரிந்துரைகளை வழங்குதல். சும்பவத் திட்டத்தை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணித்தல். கேள்வி: சம்பவ திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டபடி செயற்படுத்தப்படுகின்றனவா? | சும்பவத் திட்டத்தை மதிப்பாய்வு செய்தல். சும்பவத் திட்டத்தினை தகுந்தவாறு சரிசெய்தல். கேள்வி: சம்பவத் திட்ட இலக்குகள் எட்டப்பட்டனவா? இலக்குகள் எட்டப்பட்டதாக குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பம் உணர்கின்றதா? | சம்பவத் திட்ட இலக்குகள் அடையப்பட்டன பாதிக்கப்பட்ட சிறுவர் 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளை இனிமேலும் ஆதரவு அவசியப்படாத பராமரிப்பாளர்கள் அல்லது பிள்ளை சம்பவ மாற்றம் |

மேலே காட்டப்பட்டுள்ள படிமுறைகள் **ஒன்றோடொன்று** இணைக்கப்பட்டுள்ளன, சில சமயங்களில் செயற்பாட்டில் முந்தைய நிலையை நோக்கி திரும்புவதற்கு வழிவகுக்கலாம். மதிப்பீடு, சம்பவத் திட்டமிடல், செயற்படுத்தல், மற்றும் சம்பவ மீளாய்வு என்பன சம்பவம் முடிவடைய முன்னர் பலமுறை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படலாம். சம்பவப் பணியாளர்கள், பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்களின் நிலைமையை மென்மேலும் கண்காணித்து அவர்களின் பணிகளை ஒழுங்கமைக்க சம்பவ முகாமைத்துவ படிமுறைகளை நெகிழ்வான கருவிகளாகப் பயன்படுத்த வேண்டும்.

## கட்டம் 1: இனங்காணல் மற்றும் ஆரம்பகட்ட ஆய்ந்தறிதல்

சிறுவர்கள் பின்வருவன உள்ளிட்ட பல வகையான வளங்களினூடாக இனங்காணப்படலாம்:

- பிள்ளை, அதன் பராமரிப்பாளர் அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்கள்.
- சமூக உறுப்பினர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சங்கங்கள் மற்றும் குழுக்கள்.
- சிறுவர் கழகங்கள் மற்றும் குழுக்கள்
- ஆசிரியர்கள், பாடசாலை பணியாளர்கள்
- சுகாதார அலுவலர்கள்
- பொலிஸ், குடிவரவு அதிகாரிகள்
- சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், PHMs, ECCD அதிகாரிகள்
- ஏனைய முகவர்கள், மற்றும்.்.அல்லது சிவில் சமூக அமைப்புகள்
- ஏனைய துறைகளில் தொழில் புரியும் பணியாளர்கள்

## கட்டம் 2: கணிப்பீடு

கணிப்பீடானது பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்:

- → உடனடியான பௌதிக பாதுகாப்பு, சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள்.
- → பிள்ளையின் உடலியல், சமூக மற்றும் உணர்வு ரீதியான தேவைகள். சேவைகளை விட தேவைகளில் கவனம் செலுத்துவது முக்கியமாகும், எடுத்துக்காட்டாக பிள்ளை பாடசாலை செல்வதை விட கல்வி கற்றல் அவசியம்., பிள்ளையின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பாடசாலையை விட மேலும் பல வழிமுறைகள் உள்ளன.
- → பல்வேறு பாதுகாப்பு தொடர்பான விடயங்களினைக் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும்: எடுத்துக்காட்டாக, ஒரு பிள்ளை ஆபத்திலிருந்தால் அல்லது குழந்தைத் தொழிலில் ஈடுபட்டிருந்தால், பல்வேறு தலையீடுகள் மூலம் கவனிக்கப்பட வேண்டிய பல விடயங்கள் இருக்கலாம். கல்வியை அணுகுவதற்கான ஆதரவு, பராமரிப்பாளர்களுடனான சமூக நெறிமுறைகள், மற்றும் குடும்பத்தின் வருமான இழப்பிற்கு குறுகிய கால உதவியை வழங்கக்கூடிய பணம் மற்றும் பற்றுச்சீட்டு மூலமான உதவி (நீண்ட கால வாழ்வாதாரம், சமூக பாதுகாப்பு வாய்ப்புகள் ஆராயப்படும்) போன்றன இதில் உள்ளடங்கும்.
- → சிறுவர், குடும்பம் மற்றும் சமூக மட்டத்திலான ஆபத்து மற்றும் பாதுகாப்புக் காரணிகள். இத்தகைய காரணிகளில் பிள்ளையின் வயது, பாலினம், மற்றும் திறன், குடும்பத்தின் கல்வி நிலை, பொருளாதார நிலைமை, உளவியல் சமூக நல்வாழ்வு மற்றும் (மன) ஆரோக்கியம் மற்றும்/அல்லது சமூகத்தில் உள்ள அபாயங்கள் அல்லது பாதுகாப்பு சார்ந்த கரிசணைகள் போன்றன உள்ளடங்கும்.
- →

## கட்டம் 3: சம்பவம் குறித்த திட்டமிடல்

சம்பவம் குறித்த திட்டமிடல் பிள்ளை மற்றும் அவரது குடும்பத்தை உள்ளடக்கியதோடு மதிப்பீட்டின் போது அடையாளம் காணப்பட்ட தேவைகள், சாத்தியமான அபாயங்கள் மற்றும் பலம் ஆகியவற்றின் அடிப்படையில் **மிகவும் பொருத்தமான எதிர்வினையை** தீர்மானிக்கும் செயன்முறையாகும். அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு தேவைகளையும் எவ்வாறு பூர்த்தி செய்வது, அந்த குறிப்பிட்ட தேவைகளை யார் நிவர்த்தி செய்யப் போகிறார்கள், அந்தச் செயல்கள் எப்போது நடைபெறும் என்பது பற்றிய தகவல்கள் இந்தத் திட்டத்தில் இருக்க வேண்டும். பிள்ளை மற்றும் குடும்பம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால **இலக்குகளை** அடையாளம் காண்பதற்கு சம்பவப் பணியாளர் உதவ முடியும். குறிப்பாக சில வகையான சேவைகள் மற்றும் ஆதரவுகள் கிடைக்கவில்லை எனில், அடையாளம் காணப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் உடனடியாக சரிசெய்வதோடு குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தின் எதிர்பார்ப்புகளை அதிகரிக்காமல் இருப்பது முக்கியமாகும்.

**பிள்ளையின் விருப்பங்கள் மற்றும் கருத்துக்கள்** கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். பிள்ளை விரும்புவதை வெறுமனே செய்வதாக இது அரத்தப்படுவதில்லை, ஏனெனில் பிள்ளை கருதாத அல்லது புரிந்து கொள்ளாத அபாயங்கள் இருக்கலாம், ஆனால் ஒரு குறிப்பிட்ட திட்டத்தை எப்படி, ஏன் ஒரு சம்பவப் பணியாளர் முடிவு செய்தார் என்பதை குறிப்பாக அம்முடிவு பிள்ளை விரும்பியதிலிருந்து வேறுபட்டதாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அதனைப் புரிந்து கொள்ள பிள்ளைக்கு உதவ வேண்டும்.

### சம்பவம் மாநாடு

கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பிள்ளைகளின் பெரும்பாலான சம்பவங்களுக்கு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு முகாமைத்துவத்துக்கான தேசிய வழிகாட்டுதல்களுக்கிணங்க

(இலங்கை சிறுவர் மருத்துவர்க் கல்லூரி, 2024) மருத்துவமனைகள் விடய மாநாட்டினை ஒழுங்குசெய்கின்றன. இது பின்வரும் இரு அணுகுமுறைகளின் ஊடாக நடைபெறுகின்றது.

1. மருத்துவ சம்பவ மாநாடு: பிள்ளையை மருத்துவமனையில் ஒப்படைத்த 24 மணிநேரத்திற்குள், பிள்ளை வெவ்வேறு நிபுணர்களால் பலமுறை நேர்காணல் செய்யப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.பிள்ளையைப் பற்றி வெவ்வேறு நிபுணர்களுக்கு தெரிவிக்கவும் மேலும் மருத்துவ முகாமைத்துவத்தை திட்டமிடவும்.
2. நிறுவன (பல்வேறு துறை சார்ந்த) சம்பவ மாநாடு: பிள்ளையின் பராமரிப்பு, பாதுகாப்பு, கல்வி, உளவியல் நலன் மற்றும் மீளிணைப்பு ஆகியவற்றுக்கான பராமரிப்புத் திட்டங்களை உருவாக்க மருத்துவ விடய மாநாட்டினால் முன்மொழியப்பட்ட ஒரு நாளில் நடத்தப்படும்.

நிறுவன சம்பவ மாநாட்டின் நோக்கமானது, பல ஒழுக்காற்று/ஊடாடுதல் சேவைகளை ஒருங்கிணைத்து பிள்ளையின் சிறந்த நலனுக்காக முறையான முடிவுகளை எடுப்பதாகும். குழுவானது பிள்ளையின் வாழ்க்கையில் தொடர்புடையவர்கள் மற்றும் பிள்ளையை நன்கு அறிந்தவர்கள் மற்றும் தொடர்புடைய பணியாளர்களை (சம்பவப் பணியாளர்கள், ஆசிரியர், சமூக சேகர், உள்ளூர் அரசாங்க அதிகாரி) உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

→ செயன்முறை முழுவதும் சிறுவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையினை தொடர்வது முக்கியமாகும்.

→ பிள்ளை மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சில சம்பவ மாநாடுகளில் பங்கேற்கிறார்கள், குடும்பம் பங்கேற்பது எவ்வளவு பொருத்தமானது என்பதனை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு பங்கேற்பையும் கவனமாக திட்டமிட்டு எளிதாக்குவது அவசியமாகும். எடுக்கப்படும் தீர்மானங்களில் பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தினரின் கருத்துக்கள் எப்போதும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

→ அறிக்கையிடல் வடிவம் மற்றும் ஒன்றுகூடல் அறிக்கையினைப் பயன்படுத்தி சம்பவ மாநாடுகள் முறையாக ஆவணப்படுத்தப்படுத்தல் வேண்டும்.

→ மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் சட்டத்தரணிகள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக, மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களுடன் பணிபுரிவதில் நிபுணத்துவம் பெற்ற சம்பவப் பணியாளர்கள் மற்றும் ஏனைய தொழில் வல்லுனர்களை சம்பவ மாநாடுகளில் உள்ளடக்குதல் வேண்டும்.


### கட்டம் 4: அமுல்படுத்தல்

சம்பவத் திட்டமானது விருத்தி செய்யப்பட்ட பின்னர் அமுல்படுத்தவானது ஆரம்பிக்கப்படலாம். இது குறித்த திட்டத்தில் செயற்பாட்டு விரிவாக்கத்தினை முன்னெடுப்பதற்காக, குறித்த பிள்ளையின் குடும்பத்துடன் இணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்குகின்றது. குறித்த சம்பவத் திட்டத்தின்படி பிள்ளையின் பாதுகாப்புத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றும் அப்பிள்ளையின் குடும்ப உறுப்பினர்களுக்கான உளவியல், சமூக ஆதரவு, தினசரி வருகைகள் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பு போன்ற சேவைகளை சம்பவப் பணியாளர்கள் அடிக்கடி மேற்கொள்வார்கள்.

பிள்ளை மற்றும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு உரித்தான சேவைகளை பெற்றுக்கொள்வதில் அவர்களுக்கு உதவுவது சம்பவப் பணியாளர்களின் முக்கிய வகிபங்குகளில் ஒன்றாகும். இது அடிப்படை சேவைகளுக்கு **பரிந்துரைத்தல்**, மற்றும் மேலும் **விசேட சேவைகளையும்** தேவைப்படும் போது சமூக ஆதரவினை வழங்குவதையும் உள்ளடக்கும்.

**ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளானவை** குறிப்பிட்டதாகவும் அடிக்கடி மேம்படுத்திக்கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். சம்பவப் பணியாளர்கள் சேவைகளின் வரைபடத்தை பராமரித்து புதுப்பித்தல் வேண்டும் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஆதரிக்க வேண்டும் அல்லது உதவ வேண்டும்.

**ஆற்றுப்படுத்தல் வகைகள்**




**சிறுவர்களுக்கு நேரடி சேவைகளை வழங்குவதில் பாராமரிப்பு உத்தியோகத்தர்களின் வகிபங்கு**

நன்னடத்தை அதிகாரிகள் நிறுவனங்களில் உள்ள சிறுவர்களுடன் அவர்களின் பராமரிப்பாளர்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அளவிலான தொடர்பு நேரத்தைக் கொண்டுள்ளனர். சிறுவர்கள் பராமரிப்பாளர்களுடன் தங்கள் பெரும்பாலான நேரத்தை பராமரிப்பு நிறுவனத்தில் செலவிடுகிறார்கள், மேலும் அவர்கள் சிறுவர்களுக்கான முதல் தொடர்பு புள்ளியாக மாறுகிறார்கள். எனவே, பராமரிப்பாளர்கள் சிறுவர்களிற்கு குறிப்பாக சிறப்பு அல்லாத உளவியல் ஆதரவு மற்றும் பரிந்துரைகளுக்கான பரிந்துரைகள் மூலம், அவர்களின் பராமரிப்பில் அத்தியாவசிய மற்றும் அடிப்படை ஆதரவை வழங்கத் தயாராக இருக்க வேண்டும்.

## நிலை 05: சம்பவ ஆய்வு

சம்பவ மதிப்பாய்வு **முறையான மற்றும் வழக்கமான பிரதிபலிப்பை** அனுமதிக்கிறது, இது சம்பவத் திட்டத்தில் உள்ள நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படுகிறதா என்பதைச் சரிபார்க்க, சம்பவப் பணியாளர், பிள்ளை மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களுக்கு உதவுகின்றது. திட்டம் இன்னும் பொருத்தமானதா மற்றும் ஏதேனும் மாற்றங்களைச் செய்ய வேண்டுமா என்பதைச் சரிபார்க்க வேண்டிய நேரம் இது. பிள்ளை மற்றும் அவரது குடும்பத்தினர் அவர்கள் எப்படி உணர்கிறார்கள் மற்றும் அவர்கள் கண்ட

முன்னேற்றத்தில் திருப்பதியடைந்துள்ளார்களா என்பதை சிந்திப்பதற்கு போதுமான நேரம் இருத்தல் வேண்டும்.

சம்பவ மீளாய்வு பின்வரும் மூன்று வெவ்வேறு வழிகளில் நடைபெறலாம்:

- **சம்பவ மீளாய்வுக் கூட்டம்** (பிள்ளை மற்றும் அவரது பராமரிப்பாளர்களுடன்): சம்பவத் திட்டத்தை மதிப்பாய்வு செய்வதற்காக சம்பவப் பணியாளர், பிள்ளை மற்றும் அவரது பராமரிப்பாளர்களுக்கு இடையேயான சந்திப்பினை ஒழுங்கு செய்தல். ஒப்புக்கொண்டால் மற்றும் பொருத்தமாக இருந்தால், மற்ற குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம். இந்த சந்திப்பு சம்பவ திட்டமிடல் கூட்டத்தைப் போன்றது.

- **சம்பவ மாநாடுகள்** (பல முகவர்கள் / சேவைகளுக்கு இடையே) சிக்கலான சம்பவங்கள் அல்லது தீவிர சிக்கல்களுக்கு வெவ்வேறு முகவர்கள் மற்றும் சேவைகளுக்கு இடையே முறையான சம்பவத் திட்டமிடல் அல்லது மீளாய்வு சந்திப்புகள்.

**கவனத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கிய விடயங்கள்**

→ பிள்ளையும் அவரைப் பராமரிப்பவர்களும் தாங்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதையும், தாங்கள் அடைந்த முன்னேற்றத்தில் அவர்கள் திருப்தி அடைகிறார்களா என்பதையும் சிந்திக்க நேரம் இருக்க வேண்டும்.

→ சம்பவத் திட்டத்தில் இலக்குகளை அடைவதற்குத் தொடர்ந்து ஆதரவளிக்கக்கூடியவர்கள் மதிப்புரைகளில் இருக்க வேண்டும்.

நிலை 06: சம்பவம் ஒன்றினை நிறைவுசெய்தல்

பிள்ளை மற்றும் குடும்பம் சம்பவத் திட்டத்தின் இலக்குகளை அடைகின்றபோது, பிள்ளை பாதிப்பிலிருந்து பாதுகாப்பாக உணருகின்ற போது மற்றும் அவரது நல்வாழ்வு ஆதரிக்கப்படும்போது சம்பவங்கள் பெரும்பாலும் நிறைவுசெய்யப்படும்.

ஒரு சம்பவத்தை முடிக்கக்கூடிய பிற காரணங்கள்:

→ ஒரு பிள்ளை அதிகாரபூர்வமாக மற்றொரு வசதிக்கு மாற்றப்பட்டால், குறிப்பாக அவர்கள் வேறொரு இடத்தில் இயங்கினால்.

→ பிள்ளையும் அவரைப் பராமரிப்பவர்களும் இனி ஆதரவை விரும்பாதபோதும், அவர்களின் விருப்பத்திற்கு எதிராகச் செயற்படுவதற்கு எந்த காரணமும் இல்லாத போதும், அப்பிள்ளைக்குப் இது பாதுகாப்பானது என உணருகின்ற போது. குழந்தை அவர்களின் குடும்பத்துடன் வெற்றிகரமாக மீளிணைவது இதில் உள்ளடங்கும்.

→ ஒரு பிள்ளைக்கு 18 வயதான பிறகு சில சம்பவங்கள் முடிவடையும். இந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு பிள்ளைக்கு 16 அல்லது 17 வயதாக இருக்கும் போது, அவர்கள் 18 வயதை அடைந்தவுடன், இளம் வயதினராக அவர்களுக்குத் தேவையான பொருத்தமான சேவைகளைப் பெற அவர்களுக்கு இடைக்கால ஆதரவு வழங்கப்பட வேண்டும், மேலும் இது சம்பவத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும். குறிப்பாக வதிவிட பராமரிப்பில் இருந்து வயது வந்த சிறுவர்களுக்கான மாற்றீட்டுப் பராமரிப்புத் திட்டங்களில் குறிப்பாக இதனைப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

### 4.6.5. ஆவணப்படுத்தல் மற்றும் பதிவினைப் பேணுதல்[8]

**ஆவணப்படுத்தல்** என்பது சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தேவையான தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்துச் சேமித்து வைக்கும் செயல்முறையாகும், இதில் பிள்ளை மற்றும் அவர்களது குடும்பத்தினர் நேரடியாக வழங்கும் தகவல் மற்றும் மறைமுகமாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் உட்பட, முறையான ஆவணப்படுத்தலானது பயனுள்ள மற்றும் பொறுப்பான சம்பவ முகாமைத்துவத்தை எளிதாக்குவதோடு பிள்ளை, அவரது பராமரிப்பாளர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பின் போது ஏற்படுகின்ற அபாயங்களைக் குறைக்கின்றது.

**பதிவுகளை பேணுதல்**

நீங்கள் இருக்கும் நாட்டின் சட்டபூர்வக் கடமைகளுக்கு ஏற்பவும், இரகசியக் கொள்கையின்படியும் பதிவுகள் பேணப்படுதல் வேண்டும். **துல்லியமான பதிவுகளைப் பேணுதல்** ஒரு தொழில்சார் மற்றும் நெறிமுறை சார் பொறுப்பாகும். மோசமான பதிவுப் பேணுதலானது, சிறுவர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய தரவுப் பாதுகாப்பின் மீறல்களுக்கு வழிவகுக்கும்.

**இரகசியத்தன்மை** என்பது சம்பவ முகாமைத்துவத்தின் முக்கியக் கொள்கையாகும், இது தரவுப் பாதுகாப்பு மற்றும் தகவல் பகிர்வு நெறிமுறைகள் மூலம் அனைத்து நிலைகளிலும் உறுதி செய்யப்பட வேண்டும். சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் சிறந்த நலன்களை நிலைநிறுத்துவதற்கும் இரகசியத்தன்மை அடிப்படையானது. ஏனைய தரப்பினருடன் தகவலைப் பகிர்வதற்கான சம்மதத்தை உறுதி செய்வதன் மூலம் இது பேணப்படுகின்றது, மேலும் பிள்ளையின் நலன்களுக்காகவும், தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படையிலும் தகவலைப் பகிர்வதன் மூலம் மட்டுமே இது பராமரிக்கப்படுகிறது.

பாதுகாப்பான, வரையறுக்கப்பட்ட அணுகலுடன் பாதுகாப்பான வழியில் தகவல்களைச் சேகரித்தல், பேணுதல், பகிர்தல் மற்றும் சேமித்தல் **தரவு பாதுகாப்பு** எனப்படும்.

தகவலறிந்த ஒப்புதல் மற்றும்/அல்லது தகவலறிந்த சம்மதம்

தகவலறிந்த ஒப்புதல் மற்றும் சம்மதம் ஆகியவை, அனைத்து சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களைப் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க வேண்டும் மற்றும் ஒரு பிள்ளை மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களின் ஒப்புதலுடன், வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர, அதை அணுகுவதை உறுதி செய்யும் வகையிலான **இரகசியத்தன்மையின் கொள்கையை** அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**தகவலறிந்த ஒப்புதல்** என்பது ஒப்புதலளிப்பதற்கு சட்டப்பூர்வ திறன் கொண்ட நபரொருவரின் தன்னார்வ ஒப்பந்தமாகும். "தகவலறிந்த ஒப்புதலை" வழங்க, தனிநபருக்கு வழங்கப்படும் சேவைகளைப் பற்றி அறிந்துகொள்ளும் திறன் மற்றும் முதிர்ச்சியும் இருக்க வேண்டும் மற்றும் சட்டப்பூர்வமாக அவர்களின் ஒப்புதலை வழங்க முடியும். பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் பொதுவாக தங்கள் பிள்ளைகள் சேவைகளைப் பெறுவதற்கு ஒப்புதல் வழங்குவதற்குப் பொறுப்பானவர்கள். சில அமைப்புகளில், வயதான இளம் பருவத்தினரும் தங்கள் பராமரிப்பாளர்களுக்குப் பதிலாகவோ அல்லது மேதிகமாகவோ சட்டப்பூர்வமாக ஒப்புதலளிக்க முடியும்.

---

[8] மனிதாபிமான நடவடிக்கையில் குழந்தைப் பாதுகாப்பிற்கான கூட்டணி (2014). சம்பவ முகாமை மற்றும் குழந்தைப் பாதுகாப்பிற்கான இடைநிலை வழிகாட்டுதல்கள்.

**தகவலறிந்த சம்மதம்** என்பது சேவைகளில் பங்கேற்க ஒரு நபரினால் வெளிப்படுத்தப்பட்ட விருப்பமாகும். வரையறையின்படி, 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், தகவலறிந்த சம்மதத்தை வழங்குவதற்கு மிகவும் சிறியவர்கள், ஆனால் புரிந்துகொண்டு சேவைகளில் பங்கேற்க ஒப்புக்கொள்ளும் அளவுக்கு வயதானவர்கள். எனவேதான், அவர்களின் 'தகவலறிந்த சம்மதம்' கோரப்படுகிறது.

சில சூழ்நிலைகளில், தகவலறிந்த ஒப்புதல் சாத்தியமற்றதாக இருக்கலாம் அல்லது மறுக்கப்படலாம், இருப்பினும் பிள்ளையைப் பாதுகாக்க தலையீடு இன்னும் தேவைப்படலாம். உதாரணமாக, ஒரு 12 வயது சிறுமி தன் தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானால், அவள் அவனுக்கும் அவளுடைய குடும்பத்துக்கும் விசுவாசமாக இருக்கலாம் மற்றும் எந்த நடவடிக்கையும் எடுக்க விருப்பமன்றி இருக்கலாம். சம்பவப் பணியாளர்கள் என்ன நடக்கின்றது என்பதைப் புறக்கணிக்க முடியும் என்று அர்த்தமல்ல. ஒப்புதல் அளிக்கப்படாத சந்தர்ப்பங்களில், மற்றும் சம்பந்தப்பட்ட சம்பவப் பணியாளர் ஒரு பிள்ளையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தால், அதற்கான காரணங்களை விளக்க வேண்டும் மற்றும் பிள்ளையை மற்றும் குற்றம் செய்யாத குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்பு தொடர்ந்து ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

### 4.6.6. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவத்தில் நிறுவன பராமரிப்பாளர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்

சிறுவர்கள் பாதுகாப்பு சம்பவ முகாமைத்துவம் ஒரு நீண்ட செயல்முறையாக இருக்கலாம், குறிப்பாக பல சிறுவர்கள் நிறுவன பராமரிப்பு வசதிகளில் பல ஆண்டுகளாக வாழ்கின்றனர். இந்த சிறுவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள் அல்லது கைவிடப்பட்ட, அநாதை அல்லது ஆதரவற்ற சிறுவர்கள். இத்தகைய பாதகமான சூழ்நிலைகளில் சிறுவர்களுக்கான சம்பவ முகாமைத்துவம் எப்பொழுதும் வழக்கமான உளவியல் ஆதரவுடன், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தக்கூடிய அனுதாபமான கவனிப்பு மற்றும் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். நன்னடத்தை அதிகாரிகள் வழக்கமாக மாதாந்த வருகைகளை நடத்தி, பராமரிப்பு நிறுவனங்களில் சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வைக் கண்காணிக்கின்றனர். இருப்பினும், ஏனைய கடமைகள் காரணமாக அவர்களால் சிறுவர்களுடன் வினைதிறனாக நேரத்தை செலவிட முடிவதில்லை. நிறுவனங்களில் உள்ள பராமரிப்பாளர்களுக்கு இக்குறித்த வகிபங்கினை மேற்கொள்வதற்கு நடைமுறையில் மிகவும் சாத்தியமாகின்றது, ஏனெனில் அவர்கள் இரவும் பகலும் சிறுவர்களுடன் இருப்பார்கள், மேலும் ஒரு பிள்ளை துன்பத்தில் இருந்தால் உடனடியாக தொடர்பு கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே, சமூகப்பணி மற்றும் சம்பவ முகாமைத்துவ செயல்பாட்டில் பராமரிப்பாளர்களின் முக்கியப் பொறுப்பு, சம்பவத் திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் உளவியல் விளைவுகளை அடைவதை உறுதி செய்வதாகும், மேலும் சிறுவர்கள் முகங்கொடுக்கும் ஆபத்துகள் மற்றும் ஆற்றுப்படுத்தல் தேவைகள் தொடர்பான தகவல்களுடன் சம்பவப் பணியாளர்கள் ஆதரிக்கப்படுகிறார்கள்.

#### *உளவியல் சமூக ஆதரவு என்றால் என்ன?*

மன ஆரோக்கியம் என்பது உணர்ச்சி, உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வுடன் தொடர்புடையதாகும். இது மக்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், உணர்கிறார்கள் மற்றும் செயல்படுகிறார்கள் என்பதைப் பாதிக்கின்றது. நாம் மன அழுத்தத்தை எவ்வாறு கையாளுகின்றோம், மற்றவர்களுடன் தொடர்பு கொள்கின்றோம், தெரிவுகளை மேற்கொள்கின்றோம் என்பதை இது தீர்மானிக்கின்றது. குழந்தைப் பருவம் முதல் இளமைப் பருவம் வரை, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மனநலம் மற்றும் உளவியல் முக்கியமாகின்றன. அவசரநிலைகள், துன்பகரமான நிகழ்வுகள் மற்றும் துயரக்காலங்கள் போன்றன சிறுவர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு உடனடி மற்றும் நீண்ட கால உளவியல் மற்றும் சமூகவியல் துயரங்கள் போன்றவற்றை ஏற்படுத்தலாம். குழந்தை வன்முறை, இழப்பு மற்றும் துன்பத்தை அனுபவிக்கின்ற போது மற்றும் அவற்றை பார்க்க நேரிட்டால், அவர்கள் தூங்குவதில் சிரமம், பசியின்மை, கவனம் செலுத்துவதில் சிரமம் போன்ற உளவியல் ரீதியான மன உளைச்சலுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தலாம். மன உளைச்சல் குறைக்கப்படாவிட்டால் அல்லது எதிர்மறையான சமாளிக்கும் உத்திகள் (பொருள் பயன்பாடு,

நடத்தை சிக்கல்கள் அல்லது சுய-தீங்கு போன்றன) மூலம் நிர்வகிக்கப்பட்டால், குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் விசேட ஆதரவு தேவைப்படும் மனநிலைமைக்கு ஆளாகலாம்.

துன்பத்தை வெற்றிகரமாகச் சமாளிக்கும் சிறுவர்களின் திறனில் (அவர்களின் “எதிர்ப்பு“) தாக்கம் செலுத்துகின்றன:

- அவர்களின் வயது, வளர்ச்சி நிலை மற்றும் இயலாமை நிலை
- உயிர்வாழ்வதற்கான அடிப்படை மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்கான அணுகல்
- தங்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் முன்பே இருக்கும் உடல் மற்றும் மன ஆரோக்கிய நிலை
- குடும்பங்களிலிருந்து அவர்கள் பெறும் உணர்ச்சி மற்றும் சமூக ஆதரவு
- அவர்களின் குடும்பங்கள் பெறும் உணர்ச்சி மற்றும் சமூக ஆதரவு மற்றும்
- அவர்களின் ஒட்டுமொத்த சமூகச் சூழ்நிலை (சமூக ஆதரவு மற்றும் பொருள் வளங்கள் போன்றவை).

பிள்ளையின் உடல், உள மற்றும் சமூக நல்வாழ்வை வலுப்படுத்த, தகுந்த உளவியல் ஆதரவு சேவைகளை வழங்குவதன் மூலம், துன்பகரமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் சிறுவர்களுடன் பணிபுரிவதில் சம்பவப் பணியாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒரு பராமரிப்பாளரின் உள ஆரோக்கியம் அல்லது உளவியல் ரீதியான துன்பம் பிள்ளையின் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வை பாதிக்கும் போது, தலையீடுகள் பராமரிப்பாளருக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

> சம்பவ முகாமைத்துவம் பின்வரும் வழியில் வழங்கப்பட வேண்டும்.
> மன நல தேவைகளுக்கு உணர்திறன் கொண்டது.
> குழந்தை மற்றும் பராமரிப்பாளரின் பாதுகாப்பு மற்றும் உளவியல் சமூக நல்வாழ்வை ஊக்குவிக்கிறது. ஒருநபரின் திறன்கள் மற்றும் பலம் மீது பிணை எடுக்கிறது. குடும்பம் மற்றும் சமூக ஆதரவை ஊக்குவிக்கிறது.

பராமரிப்பாளர் பின்வரும் மனநல மற்றும் உளவியல் ஆதரவின் கலவையை வழங்க முடியும்:

1. பிள்ளை மற்றும் அவர்களது குடும்பத்துடனான **ஒவ்வொரு தொடர்பிலும் அடிப்படை உளவியல் ஆதரவு திறன்களைப் பயன்படுத்துதல்,** அனைத்து தொடர்புகளும் மரியாதைக்குரியதாகவும், நம்பிக்கையை உருவாக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு கடினமான மற்றும் துன்பகரமான சூழ்நிலைகளை நேர்மறையாகச் சமாளிக்க பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தின் தனிப்பட்ட பலத்தை மேம்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
2. பிள்ளையின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த உதவும் நிறுவனத்திற்குள் **பிள்ளையின் பாதுகாப்பு சூழலை வலுப்படுத்துதல்.**
3. பிள்ளைக்கு **நேரடியாக கவனம் செலுத்தக்கூடிய நிபுணத்துவம் அல்லாத உளவியல் ஆதரவை வழங்குதல்**
4. பாதுகாப்பான, சிறுவர் நட்பு, பாலினம்-உணர்திறன் மற்றும் **பொருத்தமான மனநல மற்றும் உளவியல் ஆதரவு சேவைகளை** உள்ளடக்கிய பரிந்துரையின் மூலம் பிள்ளை மற்றும் அவர்களது குடும்பத்திற்கான ஆதரவைப் பெறுதல், சம்பவப் பணியாளருடன் இணைந்து பணியாற்றுதல்.

> **பராமரிப்பாளரின் பங்கு இல்லை.**
> ஒரு பிள்ளையை கண்டறிதல் சிகிச்சை அல்லது ஆலோசனை போன்ற சிறப்பு மனநல மற்றும் உளவியல் ஆதரவு தலையீடுகளை வழங்குதல்.

## *சம்பவப் பணியாளர்களால் கவனம் செலுத்தப்பட்ட நிபுணத்துவம் அல்லாத மனநல மற்றும் உளவியல் ஆதரவினை நேரடியாக வழங்குதல்*

பராமரிப்பாளர்கள் நேரடியாக கவனம் செலுத்திய நிபுணத்துவம் அல்லாத மனநல மற்றும் உளவியல் ஆதரவு தலையீடுகளை வழங்கலாம். எந்த மனநல மற்றும் உளவியல் ஆதரவு தலையீடும் வெவ்வேறு வயது குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்டு பாலின-உணர்திறன் மற்றும் உள்ளடக்கிய முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.

ஒரு பிள்ளை மற்றும் அவர்களது குடும்பத்துடன் கவனம் செலுத்தப்பட்ட நிபுணத்துவ அல்லாத மனநல மற்றும் உளவியல் ஆதரவு தலையீடுகள் பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருக்கலாம்:

- நம்பிக்கையை வலுப்படுத்தவும் பிள்ளையின் தேவைகளை மதிப்பிடவும்.
- கடுமையான துன்பகரமான அனுபவத்தைப் புரிந்துகொண்டு சமாளிக்க.
- பாதுகாப்பு உணர்வை அதிகரிக்க.
- சமாளிக்கும் திறன்களை வலுப்படுத்தவும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும்.
- சுயமரியாதையை வலுப்படுத்த.

இங்கே மூன்று வகையான கவனம் செலுத்தக்கூடிய நிபுணத்துவம் அல்லாத மனநல மற்றும் உளவியல் ஆதரவு தலையீடுகள், பராமரிப்பாளர்களால் வழங்கப்படலாம். ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய பல்வேறு தலையீடுகளில் பராமரிப்பாளர்கள் வெவ்வேறு செயல்பாடுகளின் கலவையை பயன்படுத்தலாம். சிறுவர்களுடன் இதை திறம்பட மற்றும் சரியான முறையில் செயல்படுத்துவதற்காக சம்பவப் பணியாளர்கள் பிள்ளையின் **வயது மற்றும் வளர்ச்சி நிலை** மற்றும் பிள்ளையின் ஏனைய குணாதிசயங்கள் மற்றும் அவர்களின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தலையீடுகளைத் தேர்ந்தெடுத்தல் (அதாவது மாற்றியமைக்க) வேண்டும்.

**விசேட எச்சரிக்கை:** சிறுவர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் அல்லது பிற குடும்ப உறுப்பினர்கள் **இருப்பதை மதிப்பீடு காட்டும் போது எடுக்கப்பட வேண்டும்:**
மனநல நிலைமைகள், கடுமையான தூக்க பிரச்சினைகள், கட்டுப்படுத்த முடியாத வலுவான உணர்ச்சிகள்
தற்கொலை எண்ணம் உட்பட சுய-தீங்கு விளைவிக்கும் நடத்தையை வெளிப்படுத்துதல்
நிலையான உடல் அறிகுறிகளைப் பற்றி வாழ்தல் மற்றும் புகார் செய்தல்
மது அல்லது போதைப்பொருள் சார்ந்திருப்பதைப் பற்றி பகிர்தல்
**இந்த சூழ்நிலைகளில், பராமரிப்பாளர் எந்தத் தீங்கும் செய்யாமல் இருக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நேரடி கவனம் செலுத்தப்படாத சிறப்புத் தலையீடுகள் மிகவும் பொருத்தமான ஆதரவாக இருக்காது. சிறுவர்களையும் அவர்களது குடும்பத்தையும் பாதுகாக்க, சம்பவ பணியாளர்களுக்குத் தெரிவிக்கவும், பல அடுக்கு பரிந்துரைகளை ஆராயவும் பரிந்துரைக்கப்படுகின்றது.**

### 1. உளவியல் கல்வி

உளவியல் கல்வி பொதுவாக சமூகப் பணிகளில் பயன்படுத்தப்படுகிறது. இது சிறுவர்களுக்குத் துன்பங்களைச் சமாளிப்பதற்கான ஆதரவை வழங்குகின்றது. இந்த தலையீடு சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மனம் எவ்வாறு செயல்படுகின்றது மற்றும் அவர்களின் நடத்தை எவ்வாறு அவர்களின் உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் அனுபவங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது, மேலும் இது நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களுக்கு எவ்வாறு பதிலளிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள சிறுவர்களுக்கு உதவுகின்றது.

உளவியல் கல்வி 3 நோக்கங்களைக் கொண்டுள்ளது:
உணர்ச்சி ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை நன்கு புரிந்து கொள்ள
அதிக நம்பிக்கையுடனும் கட்டுப்பாட்டுடனும் (அதிகாரமளிக்கும்)
சமாளிக்க ஆதரவளிக்க

மனநலக் கல்வி என்பது குடும்பத்தை வலுப்படுத்தும் தலையீடு ஆகும், ஏனெனில் இது பராமரிப்பாளரின் திறனை பலப்படுத்தும்:

- தங்கள் பிள்ளைகள் தங்களை வெளிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கவும்
- அவர்களின் உணர்வுகளை நன்றாக புரிந்து கொள்ளுங்கள்
- அவர்களின் உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துங்கள்
- மாற்றங்கள் அல்லது பாதகமான நிகழ்வுகளைச் சமாளிக்கவும்

மனநல மற்றும் உளவியல் ஆதரவில் நிபுணத்துவம் பெறாதவர்கள் மற்றும் சிறப்பு கவனம் செலுத்தும். மனநல மற்றும் உளவியல் ஆதரவு அவர்களின் பங்கின் ஒரு பகுதியாக இல்லாததால், ஒரு வழக்கறிஞர் அடிப்படை நிலைக்கு அப்பால் உளவியல் கல்வியை வழங்கக்கூடாது.

**ஒரு பராமரிப்பாளரால் தலையீடு எவ்வாறு மேற்கொள்ளப்படலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுகள்:**

- பிள்ளையின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு.
- வெவ்வேறு வயது சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான பாதுகாப்பின் அடித்தளத்தை உருவாக்குவதற்கு.
- வார்த்தைகளில் கூற கடினமாக இருக்கும் உணர்வுகள் மற்றும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், செயலாக்கவும் சிறுவர்களுக்கு உதவுவதற்கு.
- மன அழுத்தத்தை விடுவித்து, நேர்மறையான கவனச்சிதறல்களை அனுமதிப்பதற்கு.

## 2. வெளிப்படையான நடவடிக்கைகள்

வெளிப்படையான செயல்பாடுகளானவை, சிறுவர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு வார்த்தைகளில் கூற கடினமாக இருக்கும் கடினமான உணர்ச்சிகள் மற்றும் நினைவுகளை வெளிப்படுத்தவும், ஆராயவும் மற்றும் மாற்றவும் உதவுவதற்கு கலை, இசை, இயக்கம் மற்றும் நடனம் போன்ற ஆக்கப்பூர்வமான வெளிப்பாட்டின் வடிவங்களை ஆதரவான அமைப்பில் பயன்படுத்துகின்றன. வரைதல் அல்லது ஆக்கப்பூர்வமான வெளிப்பாடு இதன் நோக்கமல்ல, பிள்ளை, பராமரிப்பாளர் மற்றும்/அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதற்கு ஆதரவளிக்கக்கூடிய நம்பகமான பெரியவருடன் தொடர்புகொள்வதற்கு இது ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**ஒரு பராமரிப்பாளரால் தலையீடு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுகள்:**

- பிள்ளையின் நம்பிக்கையைப் பெற.
- வெவ்வேறு வயது சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான பாதுகாப்பின் அடித்தளத்தை உருவாக்குவதற்கு.
- வார்த்தைகளில் கூற கடினமாக இருக்கும் உணர்வுகள் மற்றும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், செயலாக்கவும் சிறுவர்களுக்கு உதவுவதற்கு.
- மன அழுத்தத்தை விடுவித்து, நேர்மறையான கவனச்சிதறல்களை அனுமதிப்பதற்கு.

## 3. உணர்ச்சி கட்டுப்பாடு நடவடிக்கைகள்

உணர்ச்சி கட்டுப்பாடு என்பது ஒரு அடிப்படை உளவியல் திறன் ஆகும், இது சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அவர்கள் எந்த உணர்ச்சிகளைக் கொண்டுள்ளனர், அவர்கள் எப்போது, அவர்கள் தங்கள் உணர்வுகளை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் மற்றும் வெளிப்படுத்துகிறார்கள் என்பதைக் குறிக்கின்றது. தங்கள் வாழ்க்கையில் மன அழுத்தம் நிறைந்த நிகழ்வுகளைச் சந்தித்த சிறுவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு அவர்களின் சொந்த உணர்ச்சி நிலையை எவ்வாறு அங்கீகரிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியம்.

இது பின்வரும் உளவியல் நன்மைகளைக் கொண்டுள்ளது:

- ஒரு நபர் வருத்தமாகவோ, சோகமாகவோ அல்லது கோபமாகவோ இருக்கும் போது அவர்கள் நன்றாக உணர்வதற்கு உதவும் நபரின் திறனை இது பலப்படுத்துகின்றது.
- இது ஒரு நபர் தனது உணர்வுகளை அங்கீகரிக்கவும், பெயரிடவும் உதவுகின்றது மற்றும் உணர்ச்சிகள் நல்லது அல்லது கெட்டது அல்ல என்பதை புரிந்து கொள்ள உதவுகின்றது.
- இது ஒரு நபருக்கு மற்றவர்களின் உணர்ச்சிகளை அடையாளம் காணவும், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வகையான உணர்வுகள் இருப்பதைப் புரிந்துகொள்ளவும் உதவுகின்றது.
- ஒவ்வொருவரும், அவர்களின் வயது மற்றும் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப, அவர்களின் உணர்வுகளுக்கு ஆரோக்கியமான மற்றும் மரியாதையான வழிகளில் பதிலளிப்பதைத் தேர்ந்தெடுக்க முடியும் என்பதை இது ஒரு நபருக்கு உணர்த்துகின்றது.

செயல்பாடுகளில் தளர்வு மற்றும் சுவாச நுட்பங்கள், நினைவாற்றல், மன அழுத்த மேலாண்மை நுட்பங்கள் போன்றவை அடங்கும்.

**ஒரு பராமரிப்பாளரால் தலையீடு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுகள்:**

- வெவ்வேறு வயது சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான பாதுகாப்பின் அடித்தளத்தை உருவாக்குவதற்கு.
- மற்ற ஆதரவுகளை பரிந்துரைத்தல் அறிமுகம் செய்வதற்கு முன், உணர்ச்சி நிலைத்தன்மையின் அளவை நிறுவுவதற்கு.
- சுய-கட்டுப்பாட்டு உத்திகள் மூலம் பிள்ளை நிம்மதியாக இருந்து நிவாரணம் பெற உதவுவதற்கு.
- சுயமரியாதை மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறன்களை உருவாக்க உதவுவதற்கு.

### துக்கத்தையும் இழப்பையும் கையாளுதல்

“துக்கம்“ என்பது வலிமிகுந்த உணர்ச்சி அதேபோல, மக்கள் தமது அன்புக்குரியவர்கள், நபர்கள் அல்லது அவர்கள் தமக்கு தொடர்பு இருப்பதாக உணரும் இடங்களை இழந்தமைக்கு பதிலளிக்கும் வகையில் அவர்கள் உணரும் எண்ணங்கள் மற்றும் நடத்தைகளுக்கு வழங்கப்படும் பெயராகும். துக்கம் பெரும்பாலும் **மரணத்துடன்** தொடர்புடையது என்றாலும், அதே வேதனையான உணர்வுகள் **குடும்பம், நண்பர்கள், அத்துடன் வீடு, பள்ளி அல்லது வழிபாட்டுத் தலம் போன்ற பழக்கமான இடங்களிலிருந்து** பிரிந்து செல்வதினாலும் ஏற்படுகின்றது.

குடும்பம் மற்றும் நண்பர்கள், உடமைகள், இடங்கள், நடைமுறைகள் மற்றும் பிற அடையாளம், பாதுகாப்பு, சொந்தம் மற்றும் பொருள் ஆகியவற்றை விட்டுச் செல்வதால், கட்டாய இடப்பெயர்வு இழப்பு மற்றும் துயரத்தின் குறிப்பிடத்தக்க ஆதாரமாக விளங்குகின்றது. பிரிவினை மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களால் கைவிடப்பட்ட போது ஏற்பட்ட உணர்வுகள் **தொற்று நோயின்** விளைவாகவும் ஏற்படலாம் (உ-ம். கோவிட்-19), எடுத்துக்காட்டாக, பிரிவினைக்கு சரியான விளக்கம் இல்லாமல் சிறுவர்கள் மாற்று சிகிச்சையில் வைக்கப்பட்டால். காயம் அல்லது நோயின் விளைவாக கைகால்கள் அல்லது உடல் உறுப்புகளை இழப்பதைக் கையாளும் சிறுவர்கள் அல்லது பராமரிப்பாளர்கள், துக்கம் மற்றும் **இழப்பின் தீவிர உணர்வுகள் மற்றும் மறுப்பு ஆகியவற்றை அனுபவிக்கலாம். எதிர்காலத்தில் பாதுகாப்பு அல்லது நம்பிக்கை மற்றும் நம்பிக்கை இழப்பு ஆகியவற்றுடன் சேர்ந்து துக்கமும் இணைந்து கொள்கின்றது.**

ஒரு பிள்ளை அல்லது பராமரிப்பாளர் வெளியக மற்றும் உள்ளக இழப்புகளால் இழப்பு அல்லது வருத்தத்தை அனுபவிக்கலாம், மேலும் அவற்றின் விளைவுகள் மிகப்பெரியதாக இருக்கலாம் (ஜோன்ஸ், 2014). துக்கம் மற்றும் இழப்பு முன்பிருக்கும் மனநல நிலைமைகளை மேலும் மோசமாக்கும் மற்றும்

நீண்டகால உளவியல் மன அழுத்தம் மற்றும் உணர்ச்சி மற்றும் உடல் வலியின் அபாயத்தை அதிகரிக்கும்.

இழப்பு மற்றும் துக்கத்திற்கான எதிர்வினைகள் மற்றும் தொடர்புடைய பொருத்தமான பதில்கள், குறிப்பிட்ட கலாச்சாரம் மற்றும் இழப்பின் தன்மைக்கு ஏற்ப வேறுபடலாம். எடுத்துக்காட்டாக, நேசிப்பவர் காணாமல் போன பிறகு ஏற்படும் நிச்சயமற்ற தன்மை, மூடப்படுவதை சாத்தியமற்றதாக்குகிறது, அதே சமயம் தற்கொலைக்குப் பிறகு அனுபவிக்கும் துக்கம் குறிப்பாக சிக்கலானதாக இருக்கலாம் மற்றும் குற்ற உணர்வு, நிராகரிப்பு, கோபம் அல்லது அவமானம், அத்துடன் களங்கம் போன்ற உணர்வுகளை உள்ளடக்கியது. சிறுவர் வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஆட்கடத்தல்காரர்களிடமிருந்து பிரிந்து, மீண்டும் ஆட்கடத்தல்காரர்களிடமே திரும்ப விரும்பலாம். எனவே சூழ்நிலை, கலாச்சார நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் தற்போதுள்ள சமாளிக்கும் வழிமுறைகளைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. இவை மதம், ஆன்மீகம் மற்றும் கலாசார நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை ஈர்க்கலாம் மற்றும் சிறுவர்கள் (குறிப்பாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் வீட்டை விட்டு வெகு தொலைவில் இருப்பவர்கள்) தங்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவரின் கலாசாரம் மற்றும் சமூகத்திற்கு சொந்தமான உணர்வை உணர மிகவும் முக்கியமானதாக இருக்கலாம்.

வாழ்க்கைச் சூழ்நிலைகள் சவாலானதாக இருக்கும்போது துக்கம் நீண்ட காலம் தொடரும். ஒரு பிள்ளை மறந்து அல்லது குணமடையத் தொடங்கிய சில மாதங்களுக்குப் பிறகு எவ்வித அறிவிப்புமின்ற மீண்டும் ஏற்படலாம். ஆண்டுவிழா, தொலைந்த நபருடன் பிள்ளை செய்த விருப்பமான செயல்பாடு அல்லது அவர்கள் இருவரும் வானொலியில் கேட்டு ரசித்த ஒரு குறிப்பிட்ட பாடல் போன்ற நினைவூட்டலால் இது தூண்டப்படலாம்.

இழப்பு மற்றும் துக்கத்தை எதிர்கொள்ளும் குழந்தைகளுக்கான மனநல மற்றும் உளவியல் ஆதரவு இழப்பை அனுபவிக்கும் சிறுவர்கள் மற்றும் குடும்பங்களைத் தகுந்த முறையில் ஆதரிப்பதற்கும் பரிந்துரைப்பதற்கும் - அவர்களின் எதிர்வினை துக்கத்தைத் தவிர வேறொன்றின் விளைவாக இருக்குமா என்பதை அறிந்துகொள்வதற்கும் - பராமரிப்பாளர் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்:

- தனிப்பட்ட பிள்ளை மற்றும் குடும்ப உறுப்பினர்களின் குறிப்பிட்ட மற்றும் தனித்துவமான தேவைகள், இழப்பு வகை, இறந்த அல்லது “இழந்த” ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகள் போன்றவை.
- பிள்ளை மற்றும் அவர்களது குடும்பத்தின் கலாசாரம் மற்றும் மதத்திற்குள்ளான துக்கம் மற்றும் இழப்பு தொடர்பான நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள்.

கவனம் செலுத்தப்பட்ட நிபுணத்துவமல்லாத மனநல மற்றும் உளவியல் ஆதரவு தலையீடுகள் (பிரிவு 3.3.4 ஐப் பார்க்கவும்) பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்:

- **காணாமல் போனவர் அல்லது பிற இழப்புகளைப் பற்றிப் பேசுவதற்கும்** இழப்பு மற்றும் துயரத்துடன் தொடர்புடைய உணர்வுகளை அடையாளம் கண்டு பெயரிடுவதற்கும் சிறுவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல்.
- **மன அழுத்தம், குழப்பம் மற்றும் நம்பிக்கையின்மை போன்ற உணர்வுகள்** (அசாதாரண சூழ்நிலைகளுக்கு இயல்பான பதில்) **உட்பட இழப்பு மற்றும் துக்கத்தின் அனுபவத்தைப் பற்றிய கூடுதல் புரிதல் மூலம்** பாதுகாப்பின் அடித்தளத்தை உருவாக்க சிறுவர்களுக்கு உதவுதல்.
- சிறுவர்கள் தங்கள் **துக்கத்தை நிர்வகிப்பதற்கான சுய-கட்டுப்பாட்டு உத்திகளை உருவாக்க உதவுதல்:** தூண்டுதல்களைக் கண்டறிதல் மற்றும் சுவாசப் பயிற்சிகள், பாடல்கள் பாடுதல், வரைதல் மற்றும் பிற செயல்பாடுகள் மூலம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல்.

பராமரிப்பாளர்கள் பொருத்தமான சேவைகளைப் பரிந்துரைப்பதற்கான தேவை மற்றும் வாய்ப்புகளை அடையாளம் கண்டு, சம்பவப் பணியாளர்களுக்கு தேவையான பரிந்துரைகளை வழங்க வேண்டும். இதில் பின்வருவன அடங்கும்:

- சிறப்பு மனநல சேவைகள் தேவைப்படும் சிறுவர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும்/அல்லது பிற குடும்ப உறுப்பினர்கள்.
- பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தைச் சுற்றியுள்ள ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள், குழு நடவடிக்கைகளில் சேர்வது போன்றவை, சகாக்களிடமிருந்து சகாக்களுக்கு ஆதரவை வலுப்படுத்துகின்றன.

## தற்கொலை மற்றும் சுய தீங்கினை கையாளுதல்

தற்கொலை எண்ணம், நடத்தை மற்றும் முயற்சிகள் தனிமையில் ஏற்படாது. அவை பெரும்பாலும், மனநல நிலை அல்லது போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் அறிகுறிகளுடன் தொடர்புடையவை. இளம் பருவத்தினரில், தற்கொலை நடத்தை பெரும்பாலும் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் தூண்டுதலுடன் தொடர்புடையதாக இருக்கலாம். ஒரு பிள்ளை நெருக்கடியான நிலையில் இருக்கும்போது தலையிடுவதன் மூலம் எச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டறிந்து தற்கொலை ஆபத்தைக் குறைப்பதில் முதன்மையானவர்களாக பராமரிப்பாளர்கள் இருக்க முடியும்.

தற்கொலை ஒரு சிக்கலான பிரச்சினை என்பதனால் துறைகள் மற்றும் பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது[9].

பராமரிப்பாளர்கள் தற்கொலை எண்ணம், நடத்தை மற்றும் முயற்சிகளை வெளிப்படுத்துவதில் முன்னணியில் உள்ளனர். உடனடி ஆபத்துக்களுக்கான எச்சரிக்கை அறிகுறிகளை எச்சரிக்கும் போது, குழந்தை, குடும்பம், சமூகம் மற்றும் சமூக மட்டத்தில் ஆபத்து காரணிகளை அடையாளம் காண பராமரிப்பாளர் சம்பவப் பணியாளர்களுக்கு ஆதரவளிக்க முடியும். சம்பவப் பணியாளர்கள் தங்களின் சம்பவத் திட்டத்தில், சுய-தீங்கு மற்றும் தற்கொலைக்கான உடனடி அல்லது குறுகிய கால அபாயங்களைக் குறைக்கக்கூடிய பாதுகாப்பு காரணிகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

| பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள் |
|---|
| மனிதாபிமான நடவடிக்கையில் குழந்தைப் பாதுகாப்பிற்கான கூட்டணி (2014) சம்பவ முகாமை மற்றும் குழந்தைப் பாதுகாப்பிற்கான இடைநிலை வழிகாட்டுதல்கள்.<br>https://alliancecpha.org/sites/default/files/technical/attachments/cm_guidelines_eng_.pdf<br>மனிதாபிமான நடவடிக்கையில் குழந்தைப் பாதுகாப்பிற்கான கூட்டணி (2021) திருத்தப்பட்ட ஊடாடல் குழந்தைப் பாதுகாப்பு சம்பவ முகாமை பயிற்சி: பயிற்சி நிலை 1 தொகுதி 2 குழந்தைப் பாதுகாப்பு சம்பவ நிர்வாகத்தின் அடிப்படைகளைப் பார்க்கவும்.<br>https://alliancecpha.org/sites/default/files/elearning/attachments/Facilitator%20Guide_English.pdf<br>நிறுவனங்களுக்கிடையிலான நிலைப்பாட்டுக் குழு (2022) IASC வழிகாட்டுதல், மனிதாபிமான அமைப்புகளில் தற்கொலையை அடையாளங் காணுதல்.<br>IASC Guidance, Addressing Suicide in Humanitarian Settings |

[9] நிறுவனங்களுக்கிடயிலான நிலைப்பாட்டுக் குழு (2022). IASC வழிகாட்டுதல், மனிதாபிமான அமைப்புகளில் தற்கொலையை நிவர்த்தி செய்தல்.

## 4.7. தனிநபர் பராமரிப்புத் திட்டம் மற்றும் மீளிணைப்பு

**பாடநெறிக்கான விளக்கம்:**

துஷ்பிரயோகங்களில் இருந்து மீண்டு வந்தவர்களை பராமரிப்பதற்குப் பொறுப்பான சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் உள்ள பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு உதவும் வகையிலும், துஷ்பிரயோகத்திலிருந்து தப்பிப் பிழைத்த குழந்தைகளுக்கான மறுசீரமைப்பு பராமரிப்பு மாதிரியின்படி சம்பவ முகாமைத்துவ கட்டங்கள் பற்றிய சிறந்த புரிதலினைப் பெறும் வகையிலும் இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியானது பராமரிப்பு ஊழியர்களை தனிநபர் பராமரிப்பு மற்றும் மீளிணைப்பு பற்றிய தற்போதைய நடைமுறைகளை மதிப்பிடல் மற்றும் மன அழுத்தத்தினை அறிந்த நடைமுறைகளை உருவாக்குதல் மூலமாக அவர்கள் குழந்தைகளின் நிலைமையைப் புரிந்து திறனான மற்றும் அறிந்த பராமரிப்பினை வழங்க முடியும். இப்பாடநெறியானது அவர்களின் சம்பவங்களின் கீழ் வரும் பிள்ளைகளின் குணமாதல் மற்றும் மீள் இணைப்பு பயணத்தில் சிறுவர் அபிவிருத்தி நிலைய (CDC) உத்தியோகத்தர்களின் முக்கிய வகிபாகம் பற்றி அவர்களிற்கு அறியப்படுத்தி இச்செயன்முறையில் உதவுவதற்கான முக்கிய முகவர்களாக அவர்களை மாற்றி அமைப்பதற்காகவுமே இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது

**பாடநெறியின் குறிக்கோள்கள்:**

- விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரித்தல் மற்றும் மீளிணைத்தல் ஆகிய செயன்முறையின் போதான சம்பவ முகாமை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சொற்கள் (ஆற்றுப்படுத்தல், இடையீடு செய்தல் மற்றும் பின்தொடர்தல்) ஆகிய விடயங்களை பங்குபற்றுபவர்களால் விவரணப்படுத்த முடிதல்.
- சம்பவ முகாமையில் தற்போதைய முறைமையில் அவர்களின் வகிபாகம் பற்றி அவர்களால் கலந்துரையாட முடிதல்.
- பங்கேற்பாளர்கள் சிறுவர் விற்பனை மற்றும் சிறுவர்களை கைவிடல் என்பனவற்றின் பல்வேறு விளைவுகள் பற்றி மற்றும் மன உளைச்சல் மற்றும் துஷ்பிரயோகத்தின் அறிகுறிகளை இனங்காண முடியுமாயிருத்தல்.
- பங்கேற்பாற்பளர்கள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் தொடர்புகொள்ளும்போது பயன்படுத்தப்படும் திறன்கள் மற்றும் பராமரிப்பு பற்றி விளங்கப்படுத்தக் கூடியதாக இருத்தல்.
- பங்கேற்பாற்பளர்கள் அவர்களின் திறன்களை மதிப்பீடு செய்ய மற்றும் அவர்களின் பலம் மற்றும் பலவீனத்தினை இனங்காண முடிதல்.
- தனிநபர் பராமரிப்பினை வழங்கும் போது மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு ஆதரவினை வழங்கும் போது பங்கேற்பாளர்கள் தற்போதுள்ள நடைமுறைகளை மதிப்பீடு செய்யவேண்டும் என்பதுடன், மீளிணைப்புச் செயன்முறையின் பல்வேறு கூறுகளை கண்டறியாததன் விளைவுகளிளை அறிந்து கொள்ளல்.
- சிறுவர் விற்பனையின் போது அப்பிள்ளையின் குடும்பதத்தவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சவால்கள் தொடர்பில் பங்குபற்றுபவர்கள் விளங்கிக்கொள்ள முடிதல்.
- மீளிணைப்புச் செயன்முறையின்போது எதிகொள்ளப்படும் சவால்களை குறைப்பதற்கான வழிமுறைகளை பங்கேற்பாளர்கள் கண்டறிய முடிதல்.

### 4.7.1. சம்பவ முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டங்கள் தொடர்பான அறிமுகம்

4.7.1. சம்பவ முகாமைத்துவமானது பிள்ளையொன்று ஆதரவு நிறுவனமொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது முதல் சமூகத்திற்கு மீளிணைப்பது வரையிலான முழு செயன்முறையினையும் உள்ளடக்கியுள்ளது. முழு செயன்முறையினை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.

அ) ஆற்றுப்படுத்தல் கட்டம்

ஆ) இடையீட்டு கட்டம்

இ) பின்தொடர்தல் கட்டம்

**அ. ஆற்றுப்படுத்தல் கட்டம்**

இக்கட்டமானது ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள் ஆகியவற்றுக்கான பல்வேறு மூலங்களினூடாக வழிப்படுத்தல்களை கையாளுதல் பற்றி உள்ளடக்கியுள்ளது. இவ் வழிப்படுத்தல் முறைமையானது நீதிமன்றக் கட்டளையொன்றினூடாக வழங்கப்பட முடியும்.

**ஆ. இடையீட்டுக் கட்டம்**

இடையீட்டுத் திட்டதினை விருத்தி செய்தல்

- பிள்ளைக்கான இடையீடு – இது ஆலோசனை, சிகிச்சை பராமரிப்பு, பெற்றோர் பராமரிப்பு, கல்விக்கான ஆதரவு, குடும்ப வலுவாக்கல் (சமூக ஆதரவு)
- குடும்பத்துக்கான இடையீடு: இது குடும்ப வலுவாக்கல் மற்றும் மீளிணைப்பு ஆதரவு, சட்ட உதவி, இடையீட்டு திட்டத்தினை அமுல்படுத்தல்

**இ. பின்தொடர்தல் கட்டம்**

இக்கட்டத்தில் சமூக பணியாளரானவர் அக்குடும்பத்தினை வலுப்படுத்தல் மற்றும் அப்பிள்ளையின், சட்டம், கல்வி அல்லது தொழில் ஆகியவற்றில் உதவிசெய்தல்.

### 4.7.2. சம்பவ முகாமை செயன்முறையில் சிறுவர் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்களின் வகிபாகம் தொடர்பிலான நெருங்கிய பார்வை

- சிறுவர்களிற்கு சரியான நேரத்தில் உளவள ஆலோசனை மற்றும் சிகிச்சை ஆதரவினைப் பெற்றுக்கொடுத்தல்.
- சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சூழலானது சிறுவர்களிற்கு சிகிச்சையளிக்கும் வகையில் காணப்படுவதனை உறுதி செய்தல்.
- மன அதிர்ச்சி மற்றும் கைவிடப்பட்ட பிள்ளைகளின் அறிகுறிகளை இணங்காணக் கூடியதாயிருத்தல்.
- விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைப்பு தொடர்பான முடிவெடுத்தலில் சரியான வகிபங்கினை எடுத்தல்.

4.7.2.1. சிறுவர் விற்பனை மற்றும் கவனிக்காது விடல் என்பனவற்றின் விளைவுகள்.

4.7.2.2. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பராமரிப்பு - திறன் பயிற்சி

## 4.7.3. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைத்தல்

இளம் வயதினர் மீண்டுவர உதவும் வகையில், அவர்களின் வாழ்வினை மீளக் கட்டியமைத்தல் மற்றும் சமூகத்தில் மீள சேர்தல் ஆகியவற்றினை இலக்கு வைத்து செயற்படக் கூடிய சிக்கலானதும் மற்றும் அவசியமானதுமான செயன்முறையே விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைத்தலாகும். சிறுவர் விற்பனையானது சிறுவர்களை பலவந்தமான தொழில், பாலியல் சுரண்டல்கள் அல்லது குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் போன்ற விடயங்களுக்காக சிறுவர்களை ஈடுபடுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

- இப்பிள்ளைகள் முக்கியமாக உடல், உளவியல் மற்றும் உணர்வு ரீதியான சிக்கல்கள் மற்றும் பொருளாதார வன்முறை என்பன மீளிணைப்பு செயன்முறையினை சவாலானதாக மாற்றுகின்றது.
- விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைப்பு என்பது தன் குடும்பத்திடமிருந்து பிரிந்த ஒரு பிள்ளை அனைத்து மட்டங்களிலுமான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பனவற்றை பெறவும் அதன் வாழ்வின் உடைமை மற்றும் நோக்கினை அனுபவிக்கவும், தன் உடனடி அல்லது குடும்பத்துடன், மற்றும் தன் சமூகத்துடன் நிரந்தரமாக ஒருங்கிணைவதற்காக செய்யப்பட வேண்டிய செயன்முறை என வரையறுக்கப்படுகின்றது. மீள் ஒருங்கிணைப்பு பற்றிய ஊடாடும் குழு, 2013.
- விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைத்தலானது அரச நிறுவரனங்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசுசாரா அமைப்புக்கள், சட்ட அமுலாக்கல், மற்றும் சமூகங்கள் போன்ற பல பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பை தேவைப்படுத்துகின்றது. இது இப்பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தினை மீள் உறுதிசெய்து, அவர்களை நிறைவான மற்றும் சுரண்டல்கள் அற்ற சுதந்திரமான வாழ்வினை கொண்டு நடத்த வழிவகை செய்து கொடுக்கும் வகையிலான ஓர் கூட்டுமுயற்சியே ஆகும்.
- விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைத்தலானது இப்பிள்ளைகளை சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகமான சூழலிலிருந்து இச்சமூதாயத்தினுள் பாதுகாப்பான மற்றும் நிலையான முறையில் மீளச் சேர்ப்பதற்கான முறையினைக் குறிக்கின்றது. இது அப்பிள்ளைகளை அவர்களின் வாழ்க்கை, உடல் மற்றும் அவர்களின் முழு இயலுமையினையும் மீளப்பெற்றுக்கொள்ள ஊக்கப்படுத்துவதுடன், அவர்களின் உடல், உள மற்றம் சமூக தேவைகளை கண்டறிவதனையும் உள்ளடக்குகின்றது. இவை மீளிணைப்பின் மூன்று பிரதான கோணங்களையும் கண்டறியும் போது கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

### 4.7.3.1. மீளிணைப்புக்கான முக்கிய பரிமாணங்கள்

மீளிணைப்புக்கான பிரதான 3 பரிணாமங்கள் உள்ளன.

1. சமூக மீளிணைப்பு - மருத்துவ பராமரிப்புக்கான அணுகல், கல்வி, தொழிற் பயிற்சி, நீதிக்கான அணுகல்
2. பொருளாதார மீளிணைப்பு - வாழ்வாதார நடவடிக்கைகள், மற்றும் குடும்ப அங்கத்தவர்களுக்கான பொருளாதார ஆதரவுச் சேவைகளினை வழங்குதல் மூலம் குறித்த பிள்ளை பயன் பெறலாம், மற்றும் அப்பிள்ளை ஒருங்கிணைக்கப்படும் அக்குடும்பத்தில் பாதுகாப்பாக / பராமரிக்கப்படுவதாக உணருதல்.
3. உளவியல் ரீதியான மீளிணைப்பு – உளவியல் ஆலோசனைக்கான அணுகல் சிகிச்சை, சக உதவி, குடும்ப உதவி, கல்வி (பிரதான/தொழில் முறை), மேலதிக செயற்பாடுகள், திறன் விருத்தி, பங்குபற்றல் மற்றும் பல.

#### 4.7.3.2. மீளிணைப்பின் மட்டங்கள்

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகள், நலன் மற்றும் கண்ணியத்தினை மீளக் கொணர்தலே மீளிணைப்பின் பிரதான நோக்கமாகும். பிள்ளைகளுக்கு அவர்களின் குடும்பம், சமுதாயம், மற்றும் சமூகம் போன்றனவற்றிற்கு அவர்களின் நிரந்தர குணமாக்கல், மற்றும் வெற்றிகரமான மீளிணைப்பு என்பவற்றில் இலக்குவைத்து அவர்களிற்கு உடனடி பராமரிப்பினை வழங்குவதனைக் காட்டிலும், வேறு வித பராமரிப்புகளை வழங்குதல், வெவ்வேறு மட்டங்களில் மீளிணைப்பு ஆதரவு நடைபெறுதல் அவசியமாகும்:

தனிநபர் மட்டம்: தனிநபர் மட்டத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளையினதும் தனிப்பட்ட தேவை மற்றும் அனுபவங்களை அடையாளப்படுத்தும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஆதரவானது அவசியமாகும். இது விசேடமாக அப்பிள்ளைகளை சுதந்திரமாக வாழ்வதற்கு அவசியமான உளவியல் சிகிச்சை, கல்வி மற்றும் தொழிற்பயிற்சி என்பனவற்றை வழங்குவதனை உள்ளடக்குகின்றது. திறன் விருத்தியுடன் உள்ளடங்கிய உள மற்றும் உணர்வு ரீதியான குணப்படுத்தல் என்பன பிள்ளையானது நம்பிக்கை மற்றும் மீண்டுவரல் என்பனவற்றுடன் வாழ்க்கையினை மீளக் கட்டியமைப்பதற்கு அவசியமான விடயங்களாகும்.

குடும்ப மட்டம்: மீளிணைப்பு முயற்சியானது குடும்ப அலகிற்கும் விரிவுபடுத்தப்பட்டு, ஆட்கடத்தல் அனுபவங்களில் குடும்பங்களின் முக்கிய வகிபங்கினை இனங்காணுகின்றது. ஆதரவு நிகழ்வுகளானவை குடும்பங்களை உளவள ஆலோசனை மற்றும் திறன் விருத்தி செயற்பாடுகள், பிள்ளை மீளத்திரும்பலுக்கான சாதகமான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல் ஆகியவற்றில் ஈடுபட வேண்டும். வறுமை அல்லது விழிப்புணர்வின்மை போன்ற அடிப்படை குடும்ப பிரச்சினைகளை அடையாளம் காணுதல் என்பது நிலையான மீளிணைப்பிற்கு மிகவும் முக்கியமாகும். ஆனால் குறித்த பிள்ளையின் குடும்பத்தினரே அச்சிறுவனின் கடத்தலுடன் தொடர்புபட்டிருப்பின், குறித்த குடும்பத்துடன் இணைந்து பணியாற்றுவதென்பது சிரமமான விடயமாகும்.

சமுதாய மட்டம்: பிள்ளைகளின் மீளிணைப்புக்கு சமுதாயத்தின் பங்களிப்பு இன்றியமையாததாகும். சிறுவர் விற்பனை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தல், பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடைய பிழையான புரிதல்களை அகற்றுதல், மற்றும் புனர்வாழ்வுக்கான சமுதாயத்தின் பங்களிப்பினை ஊக்குவித்தல் போன்றவற்றை பிரதான உபாயமுறைகள் கொண்டுள்ளன. சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வுகளானவை பிள்ளையின் பாதுகாப்பு வலயமாக செயற்படுவதுடன், அவர்கள் சமூகத்தினுள் மீள ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஆதரவு மற்றும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையினை உறுதிசெய்கின்றது.

கட்டமைப்பு மட்டம்: சிறுவர் விற்பனையின் அடிப்படை ஏதுக்களினை எதிர்கொள்வதற்கு பரந்தளவிலான கட்டமைப்பு மாற்றமானது அவசியமாகின்றது. இது சட்ட சீர்திருத்தங்கள், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடையாளம் காண்பதற்கான அமுலாக்கக் கொள்கை, மற்றும் சிறுவர் பாதுகாப்பு பொறிமுறைகள் என்பனவற்றை ஆதரவளித்தலையும் உள்ளடக்குகின்றது. மனித வியாபாரத்தினை தடுப்பது மற்றும் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்களின் ஒட்டுமொத்த நலனை மேம்படுத்துவது என்பனவற்றுக்கான, செய்முறை மாற்றத்தை அமுல்படுத்துவதற்காக அரச மற்றும் அரசு சாரா அமைப்புக்களுடனான கூட்டிணைப்பானது அவசியமாகும்.

கூட்டிணைப்பு மற்றும் பலதரப்பட்ட அணுகுமுறை:

கூட்டிணைப்பு மற்றும் பலதரப்பட்ட அணுகுமுறை என்பன அத்தியாவசியமாகும். பலதரப்பட்ட தொழில்கள் மற்றும் முகவர்களுக்கிடையேயான கூட்டிணைப்பானது, வினைத்திறனான ஆதரவிற்கு அவசியமாகின்றது. சிறுவர் பாதுகாப்பு சேவைகள், சட்ட அமுலாக்கல்கள், சுகாதார வழங்குனர்கள்.

கல்வியாளர்கள், மற்றும் இது தொடர்பான ஏனைய பங்குதாரர்களுடனான கூட்டிணைப்பு உறுதிசெய்யப்படுதலானது ஓர் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த பதிலுக்கு அவசியமாகின்றது.

மீளிணைப்புச் செயன்முறை:

மீளிணைப்பினை வழிகாட்டுவதற்கு அவசியமான சிந்திக்கும் செயன்முறையை அறிமுகப்படுத்தல். (பட விளக்கத்தினை வழங்குதல்).

**4.7.3.3. மீளிணைப்பின் கூறுகள்**

*ஒவ்வொரு கூறுகளிலும் வழங்கப்படும் ஆதரவானாது சிறுவர்களிற்கு சாதகமான வகையிலும் மற்றும் வயதிற்கு ஏற்ற விதத்திலும் செய்யப்படல் வேண்டும்.

பாதுகாப்பு: முதற்கட்டமாக ஆட்கடத்தல் செய்யப்பட்ட சிறுவர்களை அடையாளம் கண்டு மீட்டெடுத்தல், அப்பிள்ளைகளின் உடனடி பாதுகாப்பினை உறுதிசெய்து துஷ்பிரயோக சூழலில் இருந்து அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றல். அவர்கள் பாதுகாப்பான மற்றும் ஆதரவளிக்கக் கூடிய சூழலில் வைக்கப்படல் வேண்டும். பிள்ளையின் சிறந்த நலன் தொடர்பிலான இப்பராமரிப்பு ஊழியரின் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு பிள்ளையின் ஒருங்கிணைப்பு தொடர்பிலான சிறுவர் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்களின் அறிக்கையினை கருத்திலெடுப்பதற்கான குழுக் கூட்டமானது நடாத்தப்படல் வேண்டும். சிறுவர் மாகாண நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின் ஆணையாளர் அல்லது பொறுப்பாகவுள்ள நன்னடத்தை அதிகாரி ஆகியோரின் தலைமையில் நடைபெறும் அந்தக் குழுக் கூட்டத்தில், மீளிணைப்பு தொடர்பில் பிள்ளையின் சிறந்த நலன் தொடர்பில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பரிந்துரைகள் கட்டாயமாக கேட்கப்படல் வேண்டும்.

உடல் மற்றும் உள ரீதியான ஆதரவு: பாதிக்கப்பட்ட து்பிரயோகத்தின் விளைவாக விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அடிக்கடி உடல் காயங்கள், போசாக்கு குறைபாடுகள், பாலியல் ரீதியாக பரவியுள்ள நோய்கள், துஷ்பிரயோகம் தொடர்பான சிக்கல்கள், அனாவசியமான கர்ப்பம், மற்றும் பல்வேறுபட்ட சுகாதார சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றனர். அவர்களுக்கு மருத்துவ பராமரிப்பு மற்றும் பொருத்தமான சுகாதார சேவைகள் என்பன அவசியமாகின்றன. மேலதிகமாக அவர்கள் முகங்கொடுக்க நேரிட்ட உணர்வு மற்றும் உள ரீதியான உளைச்சள்களை அடையாளம் காண்பதற்கு உளவியல் ரீதியான ஆதரவும் அவசியமாகின்றது. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கருத்துக்களை உண்மையாக செவிமடுத்து அவற்றுக்கு உடனடி தீர்வு காணல்: குறித்த பிள்ளைக்கு உணர்வுரீதியான உத்தரவாதத்தினை உறுதி செய்து அதன் கருத்துவெளிப்படுத்தலுக்கு இடம் ஏற்படுத்திக்கொடுத்தல்: உதாரணமாக சரியான உடற்பயிற்சி, சித்திரக்கலை, நடனம் அல்லது இசையினை செவிமடுத்தல் அல்லது உருவாக்குதல் என்பனவற்றனைக்கொண்ட தேர்ச்சிபெற்ற மனநல மருத்துவர்களுடனான அமர்வுகள். சில சிறுவர்கள் சிலவேளைகளில் உடல நலக் குறைப்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான அல்லது இடைவிட்ட மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்பவர்களாக இருக்கக் கூடும், அவை சுகாதார வைத்திய அதிகாரிகளின் பரிந்துரையின் கீழ் தொடர்ந்து உட்கொள்ளப்பட வேண்டும். ஊழியர்கள் அவசியமான சுகாதார சேவைகளின் அறிவுரைகள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அப்பிள்ளைகளின் நாளாந்த மருத்துவ சிகிச்சைகளுக்கு இடையூறு ஏற்படாதிருக்க உறுதிசெய்தல் வேண்டும்.

கல்வி: பாரம்பரிய கல்வி, தொழிற்பயிற்சி, திறன் விருத்தி, மேலதிகக் கற்றல் செயற்பாடுகள் என எவ்வடிவில் இருப்பினும் கல்விக்கான அணுகலானது விற்பனையால் பாதிப்புற்ற சிறுவர்களின் நீண்டகால மீளிணைப்புக்கு அவசியமாகும். அனைத்து சிறுவர் விற்பனையாலும் பாதிக்கப்பட்டவர்களும் பாரம்பரிய கல்வி முறையை பெற விரும்புவதில்லை, மாறாக பெரும்பாலானோர் திறன் விருத்தி பயிற்சி அல்லது

சில வகையான பொருளாதார ஊக்கப்படுத்தல் வாய்ப்புக்கள் என்பனவற்றையும் தேவைப்படுத்துபவர்களாகவும் இருக்கக் கூடும். அவர்களுக்கு பாரம்பரிய பாடசாலைக் கல்வி முறையமையிலான பாடங்களை தவறவிட்டிருப்பின் அவற்றை உள்ளடக்கும் வகையில், அவர்களுக்கு விசேடமான தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையிலான தரமான கல்வி அல்லது திறன் விருத்தி செயற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். NVQ போன்ற தொழில் பயிற்சி செயற்பாடுகள், வளர்ந்த பிள்ளைகளிற்கு அவர்களின் தொழில் தொடர்பான நோக்கினை, தன்னிறைவு மற்றும் பொருளாதார சுதந்திரம் என்பனவற்றை விருத்திசெய்யும் வகையிலான வாழ்க்கை மற்றும் சமூக திறன்களுடன் பிள்ளைகளை வளர்க்கின்றன. ஆசிரியர்கள் மற்றும் சக மாணவரகளினால் இழிவாக நடாத்தப்படுவது பிரிந்து வாழும் பிள்ளைகளிடையே பழகிய விடமொன்றாகும். ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சூழலானது பெரும்பாலும் பாரபட்சமிக்கதாகவும், ஆசிரியர்களினால் இழிவுபடுத்தும் வகையிலான நடாத்தைகள் மற்றும் பாதிக்கப்பட்ட பிள்ளையினை ஓரங்கட்டுதல் என்பனவற்றைக் கொண்டிருக்கலாம். இது விசேடமாக பெண்பிள்ளைகளின் விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றதுடன், பாடசாலை முறைமைக்குள் மேற்குறிப்பிட்ட பிற்போக்கான சிந்தனையானது வெளிப்படையாகக் காணக்கூடியதாகவிருக்கும். இந்த செயன்முறையின் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு தொடரச்சியாக ஆதரவு வழங்கப்படவேண்டும் என்பதுடன், அவர்களின் சேவை வழங்குனர்கள் அப்பிள்ளைகளின் சார்பாக ஆதரவாக இருக்கவேண்டும். ஆசிரியர்களை, விற்பனையால் பாதிக்கப்பட்ட எந்த சிறுவர்களையும் குறிப்பாக அப் பிள்ளைகள் வறுமையான அல்லது ஒதுக்கப்பட்ட குடும்ப சூழலிலிருந்து வருகின்றதெனின், அதன் மீது உணர்திறனான ஆரவணைப்புடன், ஆதரவாக மற்றும் கரிசணையுடன் நடந்துகொண்டு அவர்களின் உரிமைகளை உறுதிசெய்வதற்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

உளவியல் ரீதியான ஆதரவு: னூஊஊளுஇ உளவள ஆலோசகர்கள், மற்றும் பிள்ளைக்கு உணர்வு, பொருளாதார, சட்ட மற்றும் நிருவாக ரீதியான ஆதரவு மற்றும் வழிகாட்டலை என்பனவற்றை உள்ளடக்கிய உறுதியான ஆதரவு முறைமையானது விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவசியமாகின்றது. தனியாள் மற்றும் குழு உளவள ஆலோசனையானது அப்பிள்ளைகளை தங்கள் அனுபவங்களை புரிந்துகொள்ள, தன் சுய மரியாதை மற்றும் சுய பராமரிப்பு மற்றும் இணைந்து செயற்படல் ஆகியவற்றுக்கு அவர்களுக்கு உதவிகரமாக அமையும்.

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தங்களுக்கு அவசியமான உளவள மற்றும் உளவியல் ஆதரவு சேவையினைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாவதுடன், அப்பிள்ளை மிகப் பொருத்தமான ஆதரவு சேவைக்கு ஆற்றுப்படுத்தப்படுவர். பிரிந்து சென்ற பிள்ளைகளின் குறிப்பாக பெண் பிள்ளைகளின் சுய மரியாதை, மற்றும் சுய மதிப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தல், பிள்ளைகளுக்கு தங்கள் சுயமரியாதையினை மீளக்கொணரச் செய்யும் வகையில் சிகிச்சையளிக்கும் செயற்பாடுகளானவை செய்யப்படல் வேண்டும், அத்துடன் பிள்ளைகளை பராமரிக்கும் மற்றும் மேற்பார்வை செய்யும் வகிபாகம் கொண்ட வளர்தோர், அவர்களின் பேச்சு மற்றும் நடத்தைகள் அப்பிள்ளைகளை புகழ்வதாகவும், அவர்களின் சுய மரியாதையை மீளுணரச் செய்வதாகவும் இருத்தல் வேண்டும். இடையீடுகளானவை சுதந்திரம், தன்னிறைவு, மற்றும் தன் சுய முடிவுகளை நம்புதல் ஆகியவற்றினை ஊக்குவிப்பனவாக இருத்தல் வேண்டும்.

குடும்ப மற்றும் சமூக ஈடுபாடு: மீளிணைப்பு செயற்பாடானது குறித்த பிள்ளை மீளத்திரும்பவதற்கான பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலினை உருவாக்குவதற்காக, குறித்த பிள்ளையின் குடும்பம். நெருங்கிய உறவினர், அல்லது பாதுகாவலர் ஆகியோரையம் இணைத்து செயற்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். இது விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கான உளவியற் கல்வி, குடும்ப உளவள ஆலோசனை, பராமரிப்பாளர்களுக்கான வாழ்வாதார ஆதரவு, மற்றும் சமூகத்தில் வறுமை மற்றும் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய தன்மையினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றன.

மேலும் அவர்களின் குடும்பத்தவர்கள் தங்களின் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் சமூக மற்றம் வாழ்கதை திறன்களை வளர்க்க வழிகாட்டப்படல் வேண்டும். குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் அவர்களது குடும்பங்களையும் குற்றவாளிகளிடமிருந்து பாதுகாப்பதில் அரசாங்க அதிகாரசபை எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கான சாட்சியங்களை குடும்பத்திற்கு தெரியப்படுத்த முடியும். சமூக ரீதியான விழிப்பணர்வு செயற்திட்டங்களானவை சிறுவர் விற்பனையால் இருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கெதிரான பழமைவாதங்கள், நம்பிக்கையின்மை மற்றும் பாரபட்சம் என்பனவற்றை எதிர்ப்பதற்கும், மற்றும் பாதுகாப்புக்கெதிரான சவால்களைக் குறைக்க மற்றும் மீள பாதிக்கப்படும் அபாயத்தினைக் குறைக்கவும் பயன்படும். வன்முறையினால் பாதிக்கப்பட்டு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையிலுள்ள பிள்ளையொன்று நீதிமன்ற ஆணையின் பேரில் பராமரிப்பு நிலையங்களில் விடப்பட்டிருக்கக் கூடும். இதனால் குறித்த பிள்ளை மற்றும் அதன் குடும்பத்துடன் மீளிணைப்பு செயன்முறையினை ஆரம்பிக்க முன்னர் நீதிமன்ற அனுமதியை சிறுவர் அபிவிருத்தி நிலையம் பெறவேண்டும். சிறுவர் அபிவிருத்தி நிலையமானது குறித்த பிள்ளையினை மீளிணைப்பு செய்வதற்கு அவசியமாகவுள்ள சாதக காரணிகள் பற்றி நீதிமன்றத்திற்கு முன்வைக்க வேண்டும் என்பதுடன், அச்செயன்முறைறை ஆரம்பிப்பதற்கு நீதிமன்றக் கட்டளையொன்றையும் பெறுதல் வேண்டும்.

சட்ட உதவி: கடத்தல்காரர்ளுக்கெதிராக நீதியை நாடவும் மற்றும் தங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யவும், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு சட்ட உதவி அவசியப்படலாம். இது பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் உரிமைகள் பற்றி மற்றும் எந்தெந்த சட்ட ஏற்பாடுகளுக்கு அவர்கள் உரித்தானவர்கள் என்பது பற்றி கற்றுக்கொடுத்தல், சட்ட உதவிக்கான அணுகலை வழங்குதல், சட்ட நடபடி முறைகளுக்கு உதவிசெய்தல் மற்றும் சிறுவர்களுக்கு சுமுகமான நீதிமுறைமை பற்றி கற்றுக்கொடுத்தல் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றது. பாதிக்கப்பட்ட பிள்ளை மற்றும் அதன் குடும்பத்திற்கு சட்டத்தின் தாக்கங்கள் பற்றியும், சட்ட செயன்முறையினைப் பொறுத்தமட்டில் இனிவரும் வருடங்கள் எவ்விதம் இருக்கும் என்பது பற்றியும் தெளிவுபடுத்தல் அவசியமாகும். அப்பிள்ளைகள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகும் போது அவர்கள் ஞீஊஊளு இன் பாதுகாப்பின் கீழ் இருக்க கூடாது. ஏவ்வாறாயினும் நீதிமன்ற தாமதம் மற்றும் ஏனைய காரணிகளின் காரணமாக குறித்த விடய நிறைவடையும் போது அப்பிள்ளைகள் சில நேரங்களில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் இருக்கலாம். ஆகவே குறித்த சம்பவமானது மேல்நிலை நீதிமன்றத்தில் கொண்டுவரப்படும் போது பயன்படுத்தும் வகையில், அப்பிள்ளையின் சட்ட பதிவுகள் மற்றும் நடபடிமுறைகளை சரிவர பேணுதலானது அப்பிள்ளைக்கு ஆதரவளிப்பவரின் கடமையாகும். குறித்த பிள்ளைக்கு வழிகாட்டுதலுடன், குறித்த வழக்கினை கொண்டுசெல்ல முடியும். குறித்த சட்ட நடபடிமுறையின் போது அது மிக நீண்டகாலமாக கொண்டு நடாத்தப்படுவதனால் அது வெவ்வேறு கட்டங்கள் மற்றும் நேரங்களில் மன உளைச்சலை அந்த விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு ஏற்படுத்தக் கூடும் என்பதனால், அவர்கள் MHPSS உடன் தொடர்பிலிருப்பது அவசியமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் தாம் யாருடன் தொடர்புகொள்ள வேண்டும் மற்றும் யாருடன் அவர்கள் சௌகரியமாக உணர்கின்றனர் என்பது அவசியமாகும்.

நீண்ட கால ஆதரவு மற்றும் பின்தொடர்தல்: மீளிணைப்பானது நீண்ட கால ஆதரவு மற்றும் பின்தொடர்தல் செயன்முறையினை தேவைப்படுத்தும் செயன்முறையொன்றாகும். மீள் ஒருங்கிணைக்கப்பட்ட சிறுவர்களின் நல்வாழ்வை உறுதிசெய்வதற்கும் அவர்களுக்கு கல்வி ஆதரவு, திறன் பயிற்சி, உளவியல் ஆதரவு, ஆலோசனை மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகல் உள்ளிட்ட தொடர்ச்சியான உதவிகளை வழங்குவதாக பிந்தைய பராமரிப்பு திட்டங்கள் இருக்க வேண்டும்.

மீளிணைப்பு செயன்முறையானது பிள்ளை மற்றும் தப்பிப் பிழைத்தோரை மையமாகக் கொண்டு அவர்களின் விசேடமான தேவைகள், பால்நிலை, வயது, இயலுமையின் மட்டம் மற்றும் இயலாமை, மற்றும் ஒவ்வொரு பிள்ளையினதும் விருப்புகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டதாக இருக்க வேண்டும். அரச முகவர்கள், அரசுசாரா அமைப்புகள் (சர்வதேச மற்றும் தேசிய), மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கிடையிலான கூட்டிணைப்பானது, வினைத்திறனான, விரிவான, தனிப்பயனாக்கப்பட்ட, மற்றும் நிலையான மீளிணைப்பு அவசியமாகும். பிள்ளை மற்றும் அதன் பராமரிப்பாளருக்கு இடையில் சரியான கருத்துப்பரிமாற்றம் இருத்தல் வேண்டும். பராமரிப்பாளரானவர் அப்பிள்ளையின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் திறமைகள் பற்றி அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இப்புரிதலானது அப்பிள்ளையினை சரியான பாதையில் வழிநடத்ததுவதற்கு உதவிகரமாக அமையும்.

**பிள்ளையின் சிறந்த நலனின் அடிப்படையில் மீளிணைப்பானது சாத்தியமில்லையெனின், சம்பவ முகாமை தொடர்பில் வலுவிலுள்ள உள்நாட்டு/மாகாண வழிகாட்டிகள் பிள்ளையின் நலன், பாதுகாப்பு, விருத்தி மற்றும் நலனை ஆதரவளிக்க பயன்படுத்தப்பட வேண்டும்.

**4.7.3.4. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மீளிணைப்பின் சவால்களை அடையாளங்காணல்**

சேவை வழங்குனர்கள் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சிக்கலான சவால்கள், விசேடமாக குடும்பம் தொடர்பான விடயங்களில் உதவிகளை வழங்குதல். பாதிக்கப்பட்ட சில சிறுவர்கள் அவர்களின் குடும்பப் பொருளாதார சூழல் காரணமாக அவர்களின் குடும்பத்தவர்களினாலேயே பாலியல் தொழில் மற்றும் பலவந்த தொழிலில் ஈடுபடுதத்தப்படுகின்றனர். மீளிணைப்புக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போது, விசேடமாக சிறுவர் விற்பனையில் குடும்பம் முக்கிய பங்கு வகித்திருக்கும் போது இக்குடும்ப உறவுமுறைகளில் உள்ள சிக்கல்தன்மையினை இனங்காணல்.

சேவை வழங்குனர்கள் குறித்த பாதிக்கப்பட்டவர்களிற்குள்ள மட்டுப்படுதத்ப்பட்ட ஆதரவு அல்லது தொடர்பினைக் கருத்திற்கொண்டு. இத்தகைய உறவுமுறைகளின் நுணுக்கங்களை வழிப்படுத்தல் வேண்டும். இழைக்கப்பட்ட துன்புறுத்தலைக் கருத்திற்கொள்ளாமல் பாதிக்கப்பட்டவர்கள் தன் குடும்பத்துடன் மீளிணைவதனை விரும்புவர், இச்சந்தர்ப்பத்தில் தனிநபர் சுதந்திரத்தினை மதித்து அவர்களின் விருப்பமானது மதிக்கப்படல் வேண்டும்.

குறித்த சில சந்தர்ப்பங்களின் போது அக்குடும்பங்கள் அதன் சூழலை மேம்படுத்திக்கொள்ள மற்றும் வேறு சில காரணிகளுக்காக அப்பிள்ளையினை வீட்டிலிருந்து தொழில் நிமித்தமாக வெளியில் செல்ல அனுமதிப்பர். இத்தகைய சூழ்நிலைகளை புரிந்துகொள்ளுதலானது வினைத்திறனான உதவிக்கு அவசியமாகும். எவ்வாறாயினும் பிள்ளையின் பாதுகாப்பிற்கு முக்கியமளித்து அவர்களை மீள வீட்டிற்கு அனுப்புதல் என்பது உடனடியாக சாத்தியமானதாக அமையாது. மாறாக அப்பிள்ளை மற்றும் அதன் குடும்பத்தவருடன் அவர்களின் சட்ட சவால்களை இனங்கண்டு அவரக்ளுடன் அப்பிள்ளைக்கான ஆதரவளிக்கும் மற்றும் ஆரோக்கியமான சூழலினை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

சமுக சேவை நிறுவனங்களுக்கான அணுகலானது குறைவாக இருக்கும் போது குடும்பத்துடனான தொடர்புகளைத் துண்டிப்பதானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். (உ-ம்): பிள்ளையானது 18 வயதினைப் பூர்த்தி செய்கின்றது ஆனால் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு திணைக்களத்தின் பாதுகாப்பின் கீழும் இல்லை என்ற சந்தர்ப்பத்தின் போது. சேவை வழங்குனர்கள் குறித்த பிள்ளையின் குடும்பத்துடனான உறவுகளைத் துண்டிக்க முன்னர் அதன் சாதாக மற்றும் பாதக காரணிகளை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும் என்பதுடன். குறைகளையுடைய குடும்பம் என்றாலும் அது பாதுகாப்பான வலையமைப்பினை உருவாக்கக் கூடியது என்பதனை அறிந்துகொள்ளல் வேண்டும்.

உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமானது விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் முகங்கொடுத்த சவால்களின் பன்முகத்தன்மையினை அறிந்து கொண்டதான முழுமையான ஓர் அணுகுமுறையாக இருக்க வேண்டும் என்பதுடன் அதற்கேற்ற வகையில் உதவி முறைமையானது உருவாக்கப்படல் வேண்டும்.

ஆகவே, இவர்களின் மீளிணைப்பு அணுகுமுறையில் அச் சிறுவர்களின் குடும்பத்திலுள்ள சவால்கள், மற்றும் பரந்தளவிலான கட்டமைப்பு மற்றும் சமூக ரீதியான புரிதலினூடாக, ஓர் நுணுக்கமான பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையானது அவசியமாகின்றது.

### 4.7.3.4. சவால்களை குறைப்பதற்கான வழிமுறைகளை விருத்தி செய்தல்

## 4.8. பராமரிப்பு மற்றும் பராமரிப்பாளர் மன அழுத்த முகாமைத்துவம்

**பாடநெறிக்கான விளக்கம்:**

**விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு ஆதரவினை வழங்குதலானது மிகவும் உயரியது.**

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவருக்கு ஆதரவளித்தலானது மிகவும் உயரிய மற்றும் தனித்துவமான அனுபவமாகும். எவ்வாறாயினும் இலங்கையிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் காணப்படும் பராமரிப்பாளர்களின் எண்ணிக்கை குறைவு மற்றும் பரமாரிப்பாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், அங்குள்ள சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல் போன்ற காரணிகளினால் இது மிகவும் சவாலான விடயமொன்றாக காணப்படுகின்றது. சுஜறுவர் விற்பனைக்குட்பட்ட சிறுவர்களிற்கு ஆதரவளிப்பதில் பராமரிப்பாளர்களின் தீவிரமான ஊக்கம் மற்றும் அர்ப்பணிப்பு என்பனவற்றைத் தாண்டி, அவர்கள் நாள்தோறும் செய்யும் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கைக்கு இடையேயுள்ள மெல்லிய எல்லை என்பனவற்றின் காரணமாக மன அழுத்தம், சோர்வு மற்றும் வேலைப்பளுவால் ஏற்படக்கூடிய சலிப்புத்தன்மை என்பனவற்றால் அவர்கள் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். இதன் விளைவாக துஷ்பிரயோகம் மற்றும் விற்பனையால் பாதிப்புற்ற சிறுவர்களிற்கு காணப்படும் விசேட தேவைகளானவை பராமரிப்பாளர்களின் நலனையும் பாதிக்கக் கூடும்.

ஆகவே பராமரிப்பாளர்கள் பொதுவாக எதிர்கொள்ளும் மன அழுத்தங்கள் மற்றும் மன உளைச்சல்களை இனங்காண்பதும், அவற்றை அவர்கள் முகங்கொடுப்பதற்கான உத்திகளைக் கண்டறிவதும், அவர்களின் நல்வாழ்வினை மேம்படுத்த சுய கவனிப்பு முறைகளை அவர்களின் அன்றாட வாழ்வில் இணைத்துக்கொள்ளுதலும் அத்தியாவசியமாகும்.

**கற்றல் குறிக்கோள்கள்**

**இப்பாடநெறியின் பொதுவான குறிக்கோள்கள்:**

இலங்கையிலுள்ள சிறுவர் பராமரிப்பு ஊழியர்களிடையே அவர்களின மன நலன் மற்றும் நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கான, மன அழுத்த முகாமைத் திறன்கள் மற்றம் அவற்றை எதிர்கொள்ளும் திறன்களை விருத்திசெய்வதே இவ்வலகின் நோக்கமாகும். ஆகவே இவ்வலகின் முடிவில் பராமரிப்பாளர்கள் தங்கள் மன அழுத்தங்களை முகாமை செய்துகொள்வதற்கான அறிவு மற்றும் திறன்களைப் பெற்றிருப்பதுடன், அவர்களுக்கென தனிப்பயனாக்கப்பட்ட சுய பராமரிப்பு வழக்கங்களை வளர்த்துக்கொள்வர்.

**இவ்வலகின் முடிவில் பராமரிப்பாளர்கள் பின்வருவனவற்றுக்கான இயலுமையினைக் கொண்டிருப்பர்:**

1) தங்களின் மற்றும் ஏனையவர்களின் மன அழுத்தத்திற்கான காரணிகளின் வகைகள் மற்றும் மன அழுத்த பதில்கள் என்பனவற்றை இனங்காணல்.
(2) மன அழுத்தம் மற்றும் அதன் பண்புகளை இனங்காணல்
(3) நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைத்தரம் பற்றிய புரிதலை தெளிவுபடுத்தல்.
(4) தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கைக்கிடையிலான ஆரோக்கியமான எல்லைகளைப் பேணுதல்.
(5) சக ஊழியர்களுடன் ஆரோக்கியமான எல்லைகளை பேணல்.
(6) வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட நலன் என்பனவற்றை மேம்படுத்துவதற்கான தனிப்பயனாக்கப்பட்ட சுய பராமரிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
(7) மன அழுத்த முகாமைத்துவ நுட்பங்களை மேம்படுத்தல்.

## 4.8.1. சுயபராமரிப்புக்கான அறிமுகம் மற்றும் அதன் முக்கியத்துவம்

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு நீண்டகால துன்பத்தினை ஏற்படுத்தும் வகையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. மீண்டு வரும் செயன்முறைக்கு முக்கியமான பங்கு வகிப்பவர்களான இப்பராமரிப்பாளர்கள் தீவிர பணி மற்றும் வலிநிறைந்த அனுபவங்களின் காரணமாக உளவியல் ரீதியான சலிப்பு மற்றும் அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். சிறுவர் வியாபரத்தினால் பாதிக்கப்பட்டு தப்பிப் பிழைத்து வாழும் சிறுவர்களினை பராமரிக்கும் சவாலான பணியை மேற்கொள்ளும் இவர்களுக்கு, சுய பராமரிப்பு என்பது ஆடம்பரம் அல்ல மாறாக அவசியமான ஒன்றாகும்.

சுயபராமரிப்பு என்பது உங்கள் உளவியல், உணர்வு மற்றும் உடல் நலத்தினை பராமரிப்பதற்காக நீங்கள் செய்யும் எந்த செயற்பாடுகளும் உள்ளடங்கும்.

சுய பராமரிப்பு என்பது உடல் மற்றும் உணர்வு ரீதியான நல்வாழ்வினைப் பராமரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் நடத்தைகளில் ஈடுபடுதல் உட்பட ஆரோக்கியமான வழிகளில் தன்னைத் தானே மீள்நிரப்பிக் கொள்ளும் திறனாகும் (Myers et al. 2012, p. 56).

பராமரிப்பாளர்கள் அவர்களின் சுய பராமரிப்புக்கான முக்கியத்துவமானது, உணர்வுரீதியாக மீண்டுவரல், மன உளைச்சலை தடுத்தல், மன நலனைப் பேணல், இரக்கம் மற்றும் செயற்திறனை அதிகரித்தல், ஆரோக்கியமான எல்லைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல், சிறுவர் ஆட்கடத்தலில் தப்பிப்பிழைத்தவர்களுக்கு முன்மாதிரியான நேர்மறையான பாத்திரங்களை உருவாக்குதல் மற்றும் ஆதரவான சமூகங்களை உருவாக்குதல்.

### 4.8.1.1. சுய பராமரிப்பானது தொழிலுடன் தொடர்புபடும் வழிமுறைகளை இனங்காணல்

புராமரிப்பாளர்கள் தங்கள் சுயபராமரிப்புக்கு முக்கியத்துவமளிப்பதென்பது, விற்பனையிலிருந்து பாதிக்கப்பட்டு மீண்டுவந்த சிறுவர்களுக்கு மறுவாழ்வளித்து அதிர்ச்சியை எதிர்த்து போராடும் முயற்சியின் வெற்றிக்கு அவசியமானதாகும். ஏனெனில் இது பராமரிப்பாளர்களின் தனிப்பட்ட ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கு மட்டுமன்றி பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீட்டெடுக்கும் செயன்முறையிலும் உதவுகின்றது. மேலும் பராமரிப்பாளர்களின் நீண்டகால அர்ப்பணிப்பு மற்றும் நிலைத்தன்மை, வினைத்திறனான பணி, மன உளைச்சலிலிருந்து மீண்டுவருவதற்கான இயலுமை, மற்றும் மன உளைச்சலினை சமாளிப்பதற்கான இயலுமையும் அதிக்கரிக்கின்றது.

### 4.8.1.2. மன அழுத்ததினைப் புரிந்து கொள்ளல் மற்றும் இது சிறுவர் விற்பனையுடன் தொடர்புபடும் பராமரிப்பாளர்களுடன் அது எவ்விதம் தொடர்புபடுகின்றது

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு ஆதரவளிக்கும் சவாலான பொறுப்புக்கள் பராமரிப்பாளர்களை மிகுந்த மன அழுத்ததிற்கும் மனச் சோர்விற்கும் உள்ளாக்குகின்றன.

#### 4.8.1.2.1. மன அழுத்தத்தினை வரையறுத்தல் மற்றும் அதற்கான வேறுபட்ட பதில்களை இனங்காணல்

தீங்குவிளைவிக்கக் கூடிய வெளிப்புறத் தூண்டுதலுக்கான உடலின் உட்புற எதிர்வினை. (Lasarus & Folkman,1984).

ஒருவருக்கொருவர் வேறுபட்ட மன உளைச்சல்கள், உணர்ச்சி, நடத்தை மற்றும் அறிவாற்றலுக்கான பதில்கள்.

#### 4.8.1.2.2. மன அழுத்தத்தினை விளைவிக்கும் காரணிகள்

பராமரிப்பாளர்கள் அடிக்கடி அதிர்ச்சிகரமான அனுபவங்களை பற்றி கேட்டல் அல்லது பார்த்தல் (இரண்டாம் நிலை மன அழுத்தம்.), உணர்வுச் சுமை, மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள், அதீத பணிச்சுமை, ஒழுக்கவியல் சிக்கல்கள், குறைவான சுய பராமரிப்பு, மற்றும் ஏனையவர்களிடமிருந்து பராமரிப்பாளர்கள் பெற்றுக்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவு போன்ற காரணிகள் அவர்களுக்கு அதீத மன அழுத்தத்தினை விளைவிக்கக் கூடியன.

#### 4.8.1.2.3. மன அழுத்தங்களின் வகைகள்

யூஸ்டிரஸ் - ஊக்கம் தரும் வகையிலான மற்றும் சுறுசுறுப்பான நிலைக்கு கொண்டுசெல்லும் சவாலான அல்லது குதூகலமான சூழ்நிலைகளிலிருந்து எழும் நேர்மறையான அழுத்தம்.

துன்பம்: விரும்பத்தகாத அல்லது தீங்கு விளைவிக்கும் சூழ்நிலைகளின் விளைவாக ஏற்படும் எதிர்மறை மன அழுத்தம், அசௌகரியம் அல்லது அமைதியின்மை உணர்வுக்கு பங்களிக்கின்றது.

### 4.8.2. அதீத மன அழுத்தம் மற்றும் அதன் பண்புகளை வரையறுத்தல்

அதீத மன அழுத்தம் என்பது முறையாக முகாமைத்துவம் செய்யப்படாத வேலைத்தளத்தில் ஏற்படும் நாற்பட்ட மன அழுத்தம் காரணமாக ஏற்படும் ஓர் உளவியல் அறிகுறியாகும். இது மூன்று வகையாக வகைப்படுத்தப்படலாம்:

- ஆற்றல் குறைவு அல்லது சோர்வு போன்ற மன உணர்வுகள்
- தொழிலிலிருந்து தனக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியான தூரம் அல்லது எதிர்மறையான அல்லது இழிவான உணர்வுகள் மற்றும்
- குறைவான தொழில்முறை செயற்திறன் (ICD, 11).

அதீத மன அழுத்தம் என்ற பதமானது ஆக்கிரமிப்பின் பின்னணியில் நிகழும் நிகழ்வுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இது வாழ்க்கையின் ஏனைய கட்டங்களை வகைப்படுத்தப் பயன்படுத்தப்படக் கூடாது. இருப்பினும் சிறுவர் விற்பனை மற்றும் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைக் கையாளும் போது இரண்டாம் நிலை அதிர்ச்சி, தனிப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதிப்புக்களைக் கையாள்வது போன்ற வாடிக்கையாளர் தொடர்பான சிக்கல்கள் காரணமாக பராமரிப்பாளர்கள் மன அழுத்த சோர்வினை அனுபவிக்கலாம்.

#### 4.8.2.1. அதீத மன அழுத்தத்தினை சமாளித்தல் மற்றும் அதிலிருந்து மீண்டு வருவது எவ்வாறு என்பதனை இனங்காணல்

அதீத மன அழுத்த்தினை முகாமை செய்ய விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் பணிபுரியும் பராமரிப்பாளர்கள் பின்வரும் 3 பிரதான விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

I. பணிச்சுமையினை முகாமை செய்தல்: குழுவாக செயற்படுதல். வகிபாகத்தின் மாற்றத்திற்கு நடமாடும் தொழில் முறையினை அனுமதித்தல், தேவையற்ற ஆவணச் செயற்பாடுகளை குறைத்தல், தயார்படுத்தல், மற்றும் பணிச்சுமையின் எல்லைக்கு மதிப்பளித்தல்.

II. ஆதரவான நிறுவன சூழலொன்றை உருவாக்குதல்: சக ஊழியர்களுடனான தொடர்பினை ஊக்குவித்தல், உதவி கேட்டல் மற்றும் பெற்றுக்கொள்வதனை இயல்பாக்குதல், மற்றும் சிறந்த ஆதரவளிக்கக் கூடிய பணியாளர்கள் மற்றம் சிறுவர்களுக்கு மன அழுத்தம் தெரியப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்துதல்.

III. சுய பராமரிப்பினை ஏற்புடையதாக்கல் - சுயபராமரிப்புக்கு யு-டீ-ஊ முறையைப் பயன்படுத்தல்

A – விழிப்புணர்வு

B – சமாளித்தல்

C – தொடர்பு

## 4.8.3. வரையறுக்கபப்பட்ட நலன்

தனிநபர்கள் மற்றும் சமூகத்தினால் அனுபவிக்கப்படும் நேர்மறையான நிலையே நல்வாழ்வாகும். இது அன்றாட வாழ்க்கைக்கான ஆதாரம் மற்றம் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. நல்வாழ்வு என்பது வாழ்க்கைத் தரம் மற்றும் பொருள் நோக்கத்துடன் உலகிற்கு பங்களிக்கும் மக்கள் மற்றும் சமூகங்களின் திறனை உள்ளடக்கியது (WHO, 2021).

### 8.3.2. நல்வாழ்வு என்னும் மலரை அறிமுகப்படுத்தல்

- நல்வாழ்வு என்பது உயிரியல் (உடல்) பொருள், சமூகம், ஆன்மீகம், கலாசாரம், மன (சிந்தனை மற்றும் கற்றல்). உணர்ச்சி போன்ற பல அம்சங்களைக் கொண்டுள்ளது. நல்வாழ்வைத் தக்கவைக்கும் தனிப்பட்ட காரணிகளைக் கண்டறிதல்.

- நல்வாழ்வை மேம்படுத்தக் கூடிய தனிப்பட்ட காரணிகளைக் கண்டறிதல்

- நல்வாழ்வை அடைதலென்பது ஓர் செயன்முறையென்பதை புரிந்துகொள்ளல் வேண்டும், ஆகவே பராமரிப்பாளர்கள் நல்வாழ்வின் ஒரு பகுதியினை அடைந்திராவிடினும். ஏனைய பகுதிகளில் உயர்வாக அடைந்திருக்கலாம்.

### 8.3.3. உதவிகரமற்ற சிந்திக்கும் வடிவங்களை இனங்கண்டு மாற்றுதல்

பராமரிப்பாளர்கள் தங்களை தீவிர மன அழுத்தத்திற்குள்ளாக்கும் அல்லது தங்கள் மன நலனை பாதிக்கும் எவ்வித பாரதூரமான அல்லது பாதிக்கக்கூடிய விடயங்களை இனங்காண வேண்டும். இந்த முறைமை மூலம் பராமரிப்பாளர்கள் இத்தகைய எண்ணங்கைள நீக்கி, தங்கள் உணர்வுகள் மற்றும் மன அழுத்ததினை முகாமை செய்ய உதவிசெய்யும் நேர்மறையான எண்ணங்களை விருத்திசெய்வது பற்றி கற்றுக்கொள்வர்.

**8.3.4. எண்ணம் - நடத்தை - உணர்வு சுழற்சியினை புரிந்துகொள்ளல்**

ஒரு பராமரிப்பாளரின் எதிர்மறை எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் நடத்தைகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதனைக் காட்டும் ஒரு கோட்பாடாக சிந்தனை - நடத்தை - உணர்ச்சி எனப்படுகின்றது. இந்த சுழற்ச்சியானது சோர்வு மற்றும் மன அழுத்தத்தை அதீத மன அழுத்த் சூழலிலிருந்து நீக்கும் ஆற்றல் கொண்டது. இச்சுழற்சி பொதுவாக இவ்விதம் செயற்படுகின்றது.

I. எண்ணங்கள் : எதிர்மறை மற்றும் சிதைந்த எண்ணங்கள் பெரும்பாலும் முக்கியமான வகிபங்கினைக் கொண்டுள்ளன. இந்த எண்ணங்களில் அதிகப்படியான உணர்வுகள் சுய சந்தேகம், பரிபூரணவாதம் அல்லது கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யமுடியாத உணர்வு என்பனவும் உள்ளடங்கும்.

   உ-ம்: நான் அனைத்தையும் சரியாக செய்து முடித்தல் வேண்டும். அல்லது ஒரு இடைவேளையினை என்னால் இப்போது எடுக்க முடியாது போன்ற சிந்தனைகள் அதீத மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும்.

II. உணர்ச்சிகள் : எதிர்மறை எண்ணங்கள் எதிர்மறை உணர்ச்சிகளைத் துாண்டும். அதீத மன அழுத்த வட்டத்தில் நீங்கள் விரக்தி, பதற்றம், சோகம் அல்லது குற்றவுணர்வு போன்ற உணர்வுகளை அனுபவிக்கலாம்.

   இந்த உணர்ச்சிகள் உங்களின் மன அழுத்தத்தினை மேலும் தீவிரப்படுத்துவதுடன், மனச் சோர்வுக்கும் வழிவகுக்கின்றன.

III. நடத்தைகள்: உணர்ச்சிகள் மற்றும் எண்ணங்கள் நடத்தைகளைப் பாதிக்கின்றன. அதிகமாக வேலைசெய்தல், சுய பராமரிப்பினைப் புறக்கணித்தல், அல்லது சமூக நடவடிக்கைகளிலிருந்து விலகுதல் என்பனவற்றின் பின்னணியில் இவ்வதீத மன அழுத்தம் உள்ளடங்குின்றது.

   அதீத மன அழுத்தத்தின் விளைவால் உருவான நடத்தைகளானவை அதிகரித்த மன அழுத்த சுழற்சியை உருவாக்குவதுடன், அந்நபர் மன அழுத்தத்தை குறைக்கக்கூடிய அதீத பணியில் ஈடுபடல், அல்லது கவனயீனமாகச் செயற்படல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடத் துாண்டும்.

## 4.8.4. மீள்தன்மையினைப் புரிந்துகொண்டு, அதனை வலுப்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்குதல்

**4.8.4.1. பராமரிப்பாளர்களின் மீள்தன்மையினை கட்டியெழுப்புவதனை ஆதரவளிக்கும் வகையிலான காரணிகளை அடையாளம் காணல்**

அ. சமூக தொடர்பு மற்றும் ஆதரவினை நாடுதல்
ஆ. மதிப்புக்களைத் தெளிவுபடுத்தி முக்கியமானதைச் செய்தல்
இ. ஒரு நேரத்தில் ஒரு படியை எடுத்துவைத்து நெருக்கடியைச் சமாளித்தல்
ஈ. மாற்றத்தினை ஏற்றுக்கொள்ளல்.
உ. மாற்றத்திற்கான நடவடிக்கையில் ஈடுபடல்
ஊ. தன்னைக் கண்டறிவதற்கான வாய்ப்புக்களைத் தேடுதல்.
எ. உங்களைப் பற்றி இரக்கமாக சிந்தித்தல்

எ. ஏற்புடைமை: இயற்கையுடன் நேரத்தை செலவிடல், மனதிற்கு அமைதியைத் தரும் நடவடிக்கைகளில் ஈடுபடல், தொலைபேசி/கணினியில் செலவிடும் நேரத்தைக் குறைத்தல், ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடல்.தங்களில் மனநிலையை கிளர்ச்சயடையச் செய்யும் தொடர்புகளைத் தவிர்த்து உங்களை வலுப்படுத்தும் சமூகத் தொடர்புகளை மேம்படுத்தல்.

### 4.8.5. பராமரிப்பாளர்கள் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த மற்றும் சுய பராமரிப்பு பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் பராமரிப்பாளர்களின் வாராந்த செயற்பாடுகளை கண்காணித்தல்

**4.8.5.1. பராமரிப்பாளர்கள் பழகிக்கொள்ளக் கூடிய சுய பராமரிப்ப நடவடிக்கைகள் உட்பட தங்களுக்கான சொந்த நாளாந்த மற்றும் வாராந்த நடவடிக்கைகளை விருத்திசெய்துகொள்ளல் வேண்டும்.**

**4.8.5.2. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சுய பாதுகாப்பு நடைமுறைகளைப் பயிற்சி செய்தல்**

அ. கட்டுபாட்டு சுழற்சி
ஆ. அமைதியாக்கல் செயன்முறை
இ. நினைவாற்றல் நடவடிக்கைகள், நினைவாற்றல் மூச்சுப்பயிற்சி, உணவு மற்றும் பிற

### 4.8.6. பிரதிபலிப்பு பயிற்சி நடவடிக்கைகள் - கிப்ஸின் பிரதிபலிப்பு வட்டம்

பராமரிப்பாளர்களின் வாழ்வில் கிப்ஸின் பிரதிபலிப்பு வட்டத்தின் 5 படிமுறைகளையும் இனங்காணல் மற்றும் ஏற்புடையதாக்கல்.

**பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணைகள்**

குழந்தைகள் நல தகவல்கள் நுழைவாயில். (n.d). குழந்தைநலன் வேலைப்பளுவால் ஏற்படக்கூடிய சலிப்புத்தன்மையை அடையாளப்படுத்தலாம். chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://ncwwi.org/files/--Documents/Child_Welfare_CAN_Address_Burnout.pdf.
https://www.childwelfare.gov/topics/workforce/preventing-burnout/

ஆரம்ப குழந்தைப்பருவ தேசிய மையங்கள். (ெ.ன). தகவலறிந்த குழந்தை பராமரிப்புத் தெரிவுகளை மேம்படுத்துதல்: குழந்தைப் பராமரிப்பு மானியப் பணியாளர்களுக்கான பயிற்சி வழிகாட்டி https://childcareta.acf.hhs.gov/sites/default/files/new-occ/resource/files/training_guide_ccsubsidystaff_09_0.pdf

Taephant, N. (2010). மனித வியாபாரத்திற்குட்பட்ட நபர்களுக்கான உளவியல் உதவி குறித்த IOM பயிற்சி கையேடு. புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு, பிராந்திய அலுவலகம், பேங்கொக், தாய்லாந்து. https://thailand.iom.int/resources/iom-training-manual-psychosocial-assistance-trafficked-persons

## 5. விரிவுரை அட்டவணை

| பாடநெறியின் உள்ளடக்கம் | கால அளவு (மணித்தியாலங்கள்) | திகதி மற்றும் நேரம் (தற்காலிகமானது) | நடாத்தப்படும் முறை |
|---|---|---|---|
| **1. சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதான கோட்பாடுகள்** | **4.5** | **கலப்பு முறை** | |
| 1.1 சிறுவர் மற்றும் சிறுவர் உரிமைகளை வரையறுத்தல்<br>1.2 சிறுவர்களின் உரிமைகளை கற்பதன் நோக்கம்<br>1.3 சிறுவர் உரிமைகளின் அடிப்படைக் கொள்கைகள்<br>1.4 பாதிக்கப்படக்கூடிய சிறுவராக மாறுவதற்கான காரணங்களைக் கண்டறிதல் | 1.5 | குழு 1<br>24 ஜுன் 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 2<br>25 ஜுன் 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 3<br>26 ஜுன் 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 4<br>25 ஜுன் 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| 1.5. பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களுக்கான தலையீட்டு முறை<br>1.6. சேவை வழங்குநர்கள் மற்றும் சிறுவர் தொடர்பில் அதிகாரம் வகிப்பவர்களின் கடமை<br>1.7. சிறுவர்களின் பொறுப்பு | 1.5 | குழு 1<br>24 ஜுன் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | நிகழ்நிலை |
| | | குழு 2<br>25 ஜுன் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | நிகழ்நிலை |
| | | குழு 3<br>26 ஜுன் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | நிகழ்நிலை |
| | | குழு 4<br>25 ஜுன் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | நிகழ்நிலை |
| 1.8. நிறுவனங்களில் உள்ள சிறுவர்களின் வகைகளை அடையாளம் காணுதல்<br>1.9. சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களுக்கான சேவைகளை வழங்க பல்துறைசார் பொறிமுறையை எவ்வாறு நிறுவுவது<br>1.10. சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களில் சிறுவர்களின் பங்குபற்றுவதற்கான உரிமைகளை எவ்வாறு உறுதி செய்வது | 1.5 | குழு 1<br>01 ஜுலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 2<br>02 ஜுலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 3<br>03 ஜுலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 4<br>06 ஜுலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| **2. சட்ட கட்டமைப்பு** | **5.0** | **கலப்பு முறை** | நிகழ்நிலை |
| 3.1. மனித வியாபாரம் மற்றும் சிறுவர் விற்பனை குற்றங்கள் பற்றிய அடிப்படை புரிதல் | 1.5 | குழு 1<br>01 ஜுலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | நிகழ்நிலை |
| | | குழு 2<br>01 ஜுலை 2024 | நிகழ்நிலை |

| | | | |
|---|---|---|---|
| 2.2. சிறுவர் விற்பனைக்கு பொருந்தும் சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய சட்டங்கள் | | மு.ப 10.45 – பி.ப 12.15 | |
| | | குழு 3<br>01 ஜூலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | |
| | | குழு 4<br>06 ஜூன் 2024<br>01 ஜூலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | |
| 2.3. சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் விற்பனை சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பிற்குள் தொடர்புடைய சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்குநர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளல்<br>2.4. உலகளாவிய மற்றும் தேசிய அளவில் சிறுவர் விற்பனை பிரச்சனையின் அளவு | 1.5 | குழு 1<br>13 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நேரடி விரிவுரை |
| | | குழு 2<br>13 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | |
| | | குழு 3<br>13 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | |
| | | குழு 4<br>13 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | |
| 2.5. சிறுவர் விற்பனைக்கான தூண்டுகின்ற மற்றும் ஈர்க்கின்ற காரணிகள் மற்றும் புதிய போக்குகள்<br>2.6. சிறுவர் விற்பனைக் குற்றத்தின் கூறுகள்<br>2.7. சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக உள்ள மேலோட்டமான கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகள் | 2 | குழு 1<br>13 ஜூலை 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.15 | |
| | | குழு 2<br>13 ஜூலை 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.15 | |
| | | குழு 3<br>13 ஜூலை 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.15 | |
| | | குழு 4<br>13 ஜூலை 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.15 | |
| **3. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காணல்** | **5.5** | **கலப்பு முறை** | |
| 3.1. இலங்கையில் சிறுவர் விற்பனை மற்றும் பிற வகையான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு இடையிலான தொடர்பு<br>3.2. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காண்பதன் முக்கியத்துவம் | 1.5 | குழு 1<br>16 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| | | குழு 2<br>17 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | |
| | | குழு 3<br>18 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | |
| | | குழு 4<br>19 ஜூலை 2024<br>மு.ப 09.00 – மு.ப 10.30 | |
| 3.3. பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் செயல்முறை | 1.5 | குழு 1<br>16 ஜூலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | |

| | | | |
|---|---|---|---|
| 3.4. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய ஆய்ந்தறியும் சுட்டிகள் மற்றும் ஆரம்ப ஆய்ந்தறியும் கருவிகள் | | குழு 2<br>17 ஜுலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15<br>குழு 3<br>18 ஜுலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15<br>குழு 4<br>19 ஜுலை 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | |
| 3.5. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களினை நேர்காணல் செய்வதிலுள்ள அடிப்படை கோட்பாடுகள்<br>3.6. சிறுவர் உணர்திறன் மிக்க தொடர்பாடல் | 2.5 | குழு 1<br>22 ஜுலை 2024<br>மு.ப 10.00 – பி.ப 12.30<br>குழு 2<br>23 ஜுலை 2024<br>மு.ப 10.00 – பி.ப 12.30<br>குழு 3<br>24 ஜுலை 2024<br>மு.ப 10.00 – பி.ப 12.30<br>குழு 4<br>25 ஜுலை 2024<br>மு.ப 10.00 – பி.ப 12.30 | நிகழ்நிலை |
| **4. சிறுவர் விற்பனை மற்றும் ஏனைய வகை துஷ்பிரயோகம் என்பனவற்றுக்கு அவசியமான பராமரிப்பு** | **6** | **கலப்பு முறை** | |
| 4.1. விற்பனை மற்றும் ஏனைய துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு அவர்களிள் தேவைகளை பூர்த்திசெய்வதன் அவசியம் தொடர்பான அறிமுகம்.<br>4.2. பராமரிப்பு தேவைகளுக்கு உதவி புரிவதற்கு அவசியமான திறன்களை இனங்காணுதலும் அதனை நடைமுறைப்படுத்தலும். | 3 | குழு 1<br>29 ஜுலை 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 2<br>30 ஜுலை 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 3<br>31 ஜுலை 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 4<br>01 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00 | நிகழ்நிலை |
| 4.3. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிடத்தில் பரவலாக காணப்படும் உளவியல் ரீதியான பிரச்சினைகளின் அறிகுறிகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அவர்களை முத்திரைகுத்துவது அல்லது களங்கப்படுத்துவது என்பனவற்றினை விடுத்திருப்பதன் அவசியப்பாடு<br>4.4. பாதிகக்கப்பட்ட சிறுவர்களை பரிந்துரைப்பதற்கான வழிகாட்டிகள் மற்றும் நடபடிமுறைகள் - பாதுகாப்பான பரிந்துரைத்தல் | 3 | குழு 1<br>10 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 2<br>10 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 3<br>10 ஆகஸ்ட் 2024<br>பி.ப 1.00 – பி.ப 3.00<br>குழு 3<br>10 ஆகஸ்ட் 2024<br>பி.ப 1.00 – பி.ப 3.00 | நேரடி விரிவுரை |

| | | | |
|---|---|---|---|
| பரீட்சை I – சமர்ப்பணம்<br><br>தயார்ப்படுத்தல்<br><br>சமர்ப்பித்தல் | 2 வாரங்கள் | 10 ஆகஸ்ட் 2024-<br>23 ஆகஸ்ட் 2024<br><br>31 ஆகஸ்ட்<br>மற்றும்<br>01 செப்டம்பர் 2024 | நேரடி |
| **5. சிறுவர்களின் சவாலான நடத்தைகளை முகாமை செய்தல் மற்றும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள்** | **6** | | **கலப்பு முறை** |
| 5.1. சவாலான நடத்தைகளை உணரச்செய்தல்<br>5.2. சவாலான நடத்தையின் செயற்பாட்டு நோக்கம்<br>5.3. சவாலான நடத்தைகளின் செயற்பாட்டு நோக்கினை பரீட்சிப்பதற்கான அடிப்படை மதிப்பீட்டு திறன்கள் | 3 | குழு 1<br>27 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 2<br>28 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 3<br>29 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 4<br>30 ஆகஸ்ட் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00 | நிகழ்நிலை |
| 5.4. சவாலான நடத்தை மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் விதமான சவாலான நடத்தை மற்றும் பிரதிபளிப்பு செயற்பாடுகளுக்கான விரிவாக்க உபாயமுறைகள்<br>5.5. மேலதிக அல்லது விசேட ஆதரவினை தேவைப்படும், மன உளைச்சலில் உள்ள சிறுவர்களை இனங்காணல்<br>5.6. நடத்தை முகாமைத்துவ இடையீடுகளில் சவால்கள் மற்றும் பாதிப்புக் குறைபாடுகள் என்பனவற்றுக்கான உபாயமுறைகளை அறிமுகப்படுத்தல் | 3 | குழு 4<br>03 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 2<br>04 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 3<br>05 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00<br>குழு 4<br>05 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 12.00 | நிகழ்நிலை |
| **6. சிறுவர் பாதுகாப்பு சம்பவ மேலாண்மை மற்றும் பதிவுகளை பேணுவதற்கு ஆதரவளித்தல்** | **5** | | **கலப்பு முறை** |
| 6.1. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமை என்றால் என்ன?<br>6.2. நிறுவன பராமரிப்பு வசதிகளில் சம்பவ முகாமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் வகிபாகமும் பொறுப்புகளும் | 1.5 | குழு 1<br>09 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30<br>குழு 2<br>10 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30<br>குழு 3<br>11 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30<br>குழு 4<br>12 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| 6.3. சம்பவ முகாமைக்கான வழிகாட்டுதல் கொள்கைகள் | 1.5 | குழு 1<br>09 செப்டம்பர் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | |

| | | | |
|---|---|---|---|
| 6.4. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமைக்கான செயல்முறை தொடர்பான ஓர் அறிமுகம் | | குழு 2<br>10 செப்டம்பர் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15<br>குழு 3<br>11 செப்டம்பர் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15<br>குழு 4<br>12 செப்டம்பர் 2024<br>மு.ப 10.45 – பி.ப 12.15 | |
| 6.5. ஆவணப்படுத்தல் மற்றும் பதிவுகளை பேணுதல்<br>6.6. சிறுவர் பாதுகாப்பு சம்பவ முகாமையில் நிறுவன பராமரிப்பாளர்களின் வகிபாகமும் பொறுப்புகளும் | 2 | குழு 1<br>16 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 2<br>17 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 4<br>18 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 4<br>19 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00 | நிகழ்நிலை |
| **7. தனிநபர் பராமரிப்புத் திட்டம் மற்றும் மீளிணைப்பு** | **5.5** | **கலப்பு முறை** | |
| 7.1. சம்பவ முகாமை மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டங்கள் தொடர்பான அறிமுகம் | 2 | குழு 1<br>16 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 12.45<br>குழு 2<br>17 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 12.45<br>குழு 4<br>18 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 12.45<br>குழு 4<br>19 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 12.45 | |
| 7.2. சம்பவ முகாமை செயன்முறையில் சிறுவர் அபிவிருத்தி நிலைய ஊழியர்களின் வகிபாகம் தொடர்பிலான நெருங்கிய பார்வை | 2 | குழு 1<br>21 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 2<br>22 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 4<br>23 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 4<br>24 செப்டம்பர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00 | நிகழ்நிலை |
| 7.3. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளிணைத்தல் | 2 | குழு 1<br>21 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 1.15<br>குழு 2<br>22 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 1.15<br>குழு 4<br>23 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 1.15<br>குழு 4<br>24 செப்டம்பர் 2024<br>மு.ப 11.15 – பி.ப 1.15 | |

| 8. சுய-கவனிப்பு மற்றும் பராமரிப்பாளர்களுக்கான மன அழுத்த முகாமைத்துவம் | 5.5 | ர்லடிசனை | |
|---|---|---|---|
| 8.1. சுயபராமரிப்புக்கான அறிமுகம் மற்றும் அதன் முக்கியத்துவம்<br>8.2. அதீத மன அழுத்தம் மற்றும் அதன் பண்புகளை வரையறுத்தல் | 1.5 | குழு 1<br>01 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30<br>குழு 2<br>02 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30<br>குழு 3<br>03 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30<br>குழு 4<br>04 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.30 | நிகழ்நிலை |
| 8.3. வரையறுக்கபப்பட்ட நலன்<br>8.4. மீள்தன்மையினைப் புரிந்துகொண்டு, அதனை வலுப்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்குதல்<br>8.5. பராமரிப்பாளர்கள் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த மற்றும் சுய பராமரிப்பு பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் பராமரிப்பாளர்களின் வாராந்த செயற்பாடுகளை கண்காணித்தல் | 2 | குழு 1<br>01 ஒக்டோபர் 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.45<br>குழு 2<br>02 ஒக்டோபர் 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.45<br>குழு 3<br>03 ஒக்டோபர் 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.45<br>குழு 4<br>04 ஒக்டோபர் 2024<br>மு.ப 10.30 – பி.ப 12.45 | |
| 8.6. பிரதிபலிப்பு பயிற்சி நடவடிக்கைகள் - கிப்ஸின் பிரதிபலிப்பு வட்டம் | 2 | குழு 1<br>12 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 2<br>12 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 3<br>12 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00<br>குழு 4<br>12 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 11.00 | நேரடி விரிவுரை |
| ஒப்படைக்கான வழிகாட்டுதல் | 1 | குழு 1<br>14 ஒக்டோபர் 2024<br>மு.ப 9.00 – மு.ப 10.00 | நிகழ்நிலை |
| LMS இனை கையாளுதல் தொடர்பான வழிகாட்டுதல் | 1 | 16 ஒக்டேபார் 2024 | நிகழ்நிலை |
| பரீட்சை II – ஒப்படை<br><br>சமர்ப்பித்தல் | 2 வாரங்கள் | 19 ஒக்டோபர் 2024-<br>26 ஒக்டோபர் 2024<br><br>30 ஒக்டோபர் 2024 | |
| **மொத்தம் (46 மணித்தியாலங்கள்)** | நிகழ் நிலை: 32.5 மணி<br>நேரடி*: 13.5 மணி | நிகழ்நிலை: 71%<br>நேரடி: 29% | |

***மேற்குறிப்பிட்ட திகதிகள் தற்காலிகமானவை என்பதோடு தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுமாயின் குறித்த திகதிகள் மாற்றத்திற்கு உட்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

# 06. இப்பாடநெறிக்கான வழிகாட்டுதல்கள்

## பகுதி I – நுழைவுத் தகைமைகள் மற்றும் பாடநெறி குறித்த விவரங்கள்

1. இலங்கை கல்வித் தகைமை கட்டமைப்பின் (SLQF) படி விண்ணப்பத்தாரிகள் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை பின்பற்ற முடியும்.

   அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) அல்லது அதற்கு சமமான தகைமையைக் கொண்டிருத்தல்

   அல்லது

   ஆ) NVQF நிலை 3 இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

   அல்லது

   இ) CSHR இன் கல்விக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்ட பீடத்தின் பீடச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய தகுதிகள் மற்றும்/அல்லது பணி அனுபவங்களைக் கொண்டிருத்தல்

   மற்றும்

   ஈ) பாடநெறி நடாத்தப்படும் மொழியில் தேர்ச்சிப் பெற்றிருத்தல் வேண்டும்

2. **பாடநெறியின் கட்டமைப்பும் உள்ளடக்கமும்**

   அ) **கட்டமைப்பு:** இந்த பாடநெறி **இலங்கை கல்வித் தகைமை கட்டமைப்பு நிலை 2** (SLQF 2) இன் புள்ளிகள் அமைப்பின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு ஒரு மாணவன் **ஆறு (06) மாதங்களுக்குள் 15 புள்ளிகளை** பெறவும் இது அனுமதிக்கிறது.

   ஆ) **பாடநெறியின் உள்ளடக்கம்:** இப்பாடநெறியானது விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பு பற்றிய ஓர் அறிமுகமாகும். இது தொடர்புடைய விடய பரப்புகளான சிறுவர் உரிமைகள், சட்ட கட்டமைப்பு, சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் பாதுகாப்பு, பராமரிப்புத் திட்டம், மன அழுத்த முகாமைத்துவம், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பராமரிப்பு தேவைகள், சம்பவ முகாமை மற்றும் பதிவுகளை பேணுதல் போன்ற அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்துகிறது.

3. **காலவரையறை:** 06 மாதங்கள்

4. **கற்பிக்கப்படும் மொழி மற்றும் மதிப்பீடு**

   பாடநெறி **சிங்களம் மற்றும் தமிழ்** மொழிகளில் கற்பிக்கப்படும். பாடநெறி நடத்தப்படும் மொழியில் விரிவுரைகள் மற்றும் ஏனைய கல்வித் தகவல்களை எழுதவும், புரிந்துகொள்ளவும் மாணவர்கள் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வளவாளர்கள்**

   வளவாளர் குழுவானது சட்ட பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் குறித்த துறையில் நிபுணத்துவம் வாய்ந்த கல்வியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களை உள்ளடக்கியுள்ளது.

**6. கற்பித்தல் மற்றும் கற்றல் முறை**

பங்கேற்பாளர்களை மையமாகக் கொண்டு கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகள் பின்பற்றப்படும். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் விரிவுரைகள் மற்றும் இதர வகையிலான நெறிப்படுத்தல் அறிவுறுத்தல்களில் மாணவர்கள் தீவிரமாகப் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 71% பாடநெறி ஆன்லைனில் வழங்கப்படும், அதே நேரத்தில் 29% கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும். பாடநெறியை பூர்த்தி செய்வதற்கு வழிவகுக்கும் மதிப்பீடுகளுக்குத் தகுதிபெற 80% வருகைப் பதிவு கட்டாயம். மாணவர்கள் CSHR இன் நூலகத்தினை இலவசமாக அணுக முடியும் என்பதோடு நூலகத்தால் நிர்வகிக்கப்படும் திறந்த அணுகல் - இலத்திரனியல் வளங்களில் கிடைக்கும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

## பகுதி II

## தேர்ச்சி, அதி சிறப்பு தேர்ச்சி, சிறப்பு தேர்ச்சி மற்றும் தோல்விகளுக்கான மதிப்பீட்டுத் திட்டம் மற்றும் அளவுகோல்கள்

7. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு வழிவகுக்கும் வகையில், குறித்த கல்வியாண்டின் நடுப்பகுதியிலும் இறுதியிலும் பரீட்சையினை நடத்துவதற்கும் மற்றும் அதனை மதிப்பீடு செய்வதற்கும் தேர்வுக் குழுவொன்றினை CSHR நியமிக்கும்.

8. மதிப்பீட்டு முறை:

பாடநெறி அதிகபட்சம் 100 மதிப்பெண்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மதிப்பீட்டு முறை சமர்ப்பித்தல் மற்றும் ஒப்படை ஆகிய இரண்டு மதிப்பீட்டுக் கூறுகளை உள்ளடக்கியுள்ளதோடு அவற்றுக்கான மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு மாணவரின் செயல்திறன் மதிப்பிடப்படும். பங்கேற்பாளர்கள் 80% விரிவுரை வருகையுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் 50% மதிப்பெண்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9. சமர்ப்பித்தல் மற்றும் ஒப்படை ஆகிய இரண்டும் ஊளுர்சு ஆல் நியமிக்கப்பட்ட தேர்வுக்குழுவால் மதிப்பிடப்படும்.

10.

10.1. பாடநெறியின் பங்கேற்பாளர் ஒருவர் முதல் மூன்று மாதங்கள் நிறைவின் போது சமர்ப்பணம் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டிய அதேவேளை பாடநெறியின் அனைத்து விரிவுரைகளும் நிறைவடைந்த பின்னர் ஒப்படை ஒன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.2. இது நிதியதவியின் கீழ் வழங்கப்படுகின்ற பாடநெறி என்பதால், இதனை ஒரே முயற்சியில் நிறைவு செய்தல் வேண்டும். இருப்பினும் CSHR இன் கல்விக் குழு மற்றும் பீடச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ சான்றுகள் மற்றும் ஏனைய சான்றுகளின் அடிப்படையில், CSHR இன் கல்விக்குழுவால் வழங்கப்படுகின்ற எழுத்துப்பூர்வ ஒப்புதலை கருத்தில் கொண்டு, பாடநெறியின் மதிப்பீட்டுக் கூறுகளில் பங்குபற்றத் தவறிய எந்தவொரு பங்குபற்றுநருக்கும்

மதிப்பீட்டினை நிறைவு செய்ய மாற்றீட்டு வாய்ப்பொன்று வழங்கப்படும். பாடநெறியை குறிப்பிட்ட கல்வியாண்டிற்குள் நிறைவுசெய்தல் வேண்டும்.

10.3. ஒரு நபர் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை தொடர்வதற்கு பதிவு செய்திருந்தால் அன்றி, அவர் மதிப்பீட்டுக் கூறுகளைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

10.4. இல 1, 1986 ஆம் ஆண்டின் பரீட்சை நடைமுறை, குற்றங்கள் மற்றும் தண்டனை ஒழுங்குமுறை இல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பான அனைத்து விதிகளும், அதன் அடுத்தடுத்த திருத்தங்களும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறிக்கு பொருந்தும்.

10.5. மதிப்பீடுகள் தொடர்பான எந்த விடயமும் CSHR ஆல் தீர்மானிக்கப்படும்.

11. பங்கேற்பாளர் ஒருவர் மொத்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் 50% பெற்றிருந்தால், விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறிக்கு வழிவகுக்கும் மதிப்பீட்டினை வெற்றிகரமாக நிறைவு செய்ததாக கருதப்படுவார்.

12. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை நிறைவு செய்வதற்கு மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பங்கேற்பாளர் ஒருவர், முதல் பதிவு காலத்தில் மொத்த மதிப்பெண்களில் 75% அல்லது அதற்கு மேல் பெற்றிருந்தால், அதி சிறப்பு தேர்ச்சி பெற்றவாராக கருதப்படுவார்.

13. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை நிறைவு செய்வதற்கு மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பங்கேற்பாளர் ஒருவர், முதல் பதிவு காலத்தில் மொத்த மதிப்பெண்களில் 65% - 74% சிறப்பு தேர்ச்சி பெற்றவாராக கருதப்படுவார்.

14. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை நிறைவு செய்வதற்கு மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பங்கேற்பாளர் ஒருவர், முதல் பதிவு காலத்தில் மொத்த மதிப்பெண்களில் 50% - 4% சாதாரண தேர்ச்சி பெற்றவாராக கருதப்படுவார்.

15. பிரிவு 12 இல் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யத் தவறிய பங்குபற்றுநர் ஒருவர் மதிப்பீட்டில் தோல்வியடைந்ததாக் கருதப்படுவார்.

16. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மற்றும் செய்யாதவர்களின் பெயர் பட்டியலை CSHR வெளியிடும்.

## பகுதி III ஏனைய விடயங்கள்

17. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியானது நிதியுதவியின் கீழ் வழங்கப்படுவதால், கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

18. விண்ணப்பிக்கும் முறை

DPCCS அதன் தொடர்புடைய பராமரிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களின் விண்ணப்பப்படிவங்களை CSHR இன் பணிப்பாளருக்கு அனுப்பும்.

# 7. மதிப்பீட்டு அட்டவணை

| மதிப்பீடு | திகதிகள் (தற்காலிகமானது) |
|---|---|
| **1. சமர்ப்பணம்**<br>தயார்ப்படுத்தல்<br>சமர்ப்பித்தல் | **ஆகஸ்ட் 24, 2024**<br>ஆகஸ்ட் 10, 2024 – ஆகஸ்ட் 23, 2024<br>ஆகஸ்ட் 24, 2024 |
| **2. ஒப்படை**<br>தயார்ப்படுத்தல்<br>சமர்ப்பித்தல் | **ஒக்டோபர் 27, 2024**<br>ஒக்டோபர் 19, 2024 – ஒக்டோபர் 26, 2024<br>ஒக்டோபர் 27, 2024 |

***மேற்குறிப்பிட்ட திகதிகள் தற்காலிகமானவை என்பதோடு தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுமாயின் குறித்த திகதிகள் மாற்றத்திற்கு உட்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

## 8. வீட்டிலிருந்து ஆக்கும் ஒப்படை

இந்த ஆவணம் ஒப்படையை தயாரப்படுத்தல், செயற்படுத்தல் தொடர்பான வழிகாட்டுதல்களை உங்களுக்கு வழங்கும். காலவரையறை மற்றும் சமர்ப்பிக்கும் நடைமுறைகள் போன்ற தகவல்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

### வீட்டிலிருந்து ஆக்கும் ஒப்படைக்கான வழிகாட்டுதல்கள்

1. அட்டைப்பக்கம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்
   - முதலெழுத்துடன் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)
   - புதிவிலக்கம்
2. ஒப்படையானது 1500 சொற்களுக்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது என்பதோடு இதில் அடிக்குறிப்புகள் மற்றும் உசாத்துணைகளின் பட்டியல் உள்ளடங்காது.
3. எழுத்துரு வகை, அளவு மற்றும் வரி இடைவெளி பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்:

   எழுத்துரு அளவு – 12

   வரி இடைவெளி – 1.5

   எழுத்துரு வகை – பாமினி / கழகம்

5. ஒப்படையை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி:
6. உரையின் பந்திகள் அல்லது ஆவணங்கள் (பின் இணைப்புகள்) சமர்ப்பணத்தில் குறிப்புகளாகப் பயன்படுத்தப்பட்டால், அதன் மூலத்தைக் குறிப்பிட வேண்டும். புலமைதிருட்டு என்பது ஒரு தீவிர கல்வித் தவறான நடத்தை. புலமைதிருட்டு சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.
7. கொடுக்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் உங்கள் ஒப்படை தயாரிக்கப்பட வேண்டும்
8. பின்வரும் முகவரிக்கு உங்களுடைய ஒப்படையினை எங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

   பணிப்பாளர்<br>மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையம்<br>சட்ட பீடம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br>இல 94,<br>குமாரதுங்க முனிதாச மாவத்தை,<br>கொழும்பு 03.

# 9. தனிப்பட்ட சமர்ப்பணம்

இந்த ஆவணம் உங்கள் தனிப்பட்ட சமர்ப்பணத்தை தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் அதற்காக வாதிடுதல் பற்றி உங்களுக்கு வழிகாட்டும். காலக்கெடு மற்றும் சமர்ப்பிக்கும் நடைமுறைகள் போன்ற தகவல்கள் இதில் உள்ளன.

**தனிப்பட்ட சமர்ப்பணத்துக்கான வழிகாட்டுதல்கள்**

திகதி:

நேரம்:

1. தனிப்பட்ட சமர்ப்பணம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்
2. மேலே கொடுக்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் உங்கள் தனிப்பட்ட சமர்ப்பணம் தயாரிக்கப்பட வேண்டும்
3. தனிப்பட்ட சமர்ப்பணத்தின் காலம்: 10 நிமிடங்கள்
4. உங்களுடைய சமர்ப்பணமானது கீழே தரப்பட்டுள்ள ஏதாவது வடிவத்தில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்

   i. PowerPoint

   ii. பிறிஸ்டில் போர்ட் அல்லது flip chart ஐ பயன்படுத்தி

   iii. கையேடு (handout)

   iv. புகைப்படங்களை பயன்படுத்தி (செய்தித்தாள் பிரசுரங்கள்)

   v. உங்களுடைய சமர்ப்பணமானது PowerPoint ஐ அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்குமாயின் பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளவும்:

   எழுத்துரு வடிவம்: பாமினி அல்லது கழகம்

   எழுத்துரு அளவு: 28

   வரி இடைவெளி: 1.5”

   vi. ளடனைந களுக்கு அதிகமாக பயன்படுத்தியிருக்கக்கூடாது

   vii. உங்களுடைய சமர்ப்பணத்தை நீங்கள் PowerPoint வடிவத்தில் வழங்குவதாயின், இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முதல் எங்களுக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அதுமட்டுமல்லாது, உங்களுடைய PowerPoint வடிவிலான சமர்ப்பணத்தை PDF வடிவில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் dhayalini@cshr.cmb.ac.lk 28 ஆகஸ்ட் 2024 அன்று அனுப்பி வைத்திருத்தல் வேண்டும்.

5. உங்களுடைய பெயர் மற்றும் பதிவு எண்ணை உங்களுடைய சமர்ப்பிப்பில் தெளிவாகக் குறிப்பிடவும்.

6. சமர்ப்பித்தலில் உரைப்பகுதிகள் அல்லது ஆவணங்கள் (உசாத்துணை) சான்றாக பயன்படுத்தபட்டிருந்தால், அது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். புலமைதிருட்டு என்பது ஒரு தீவிர கல்வித் தவறான நடத்தை. புலமைதிருட்டு சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 10. பாடநெறி குறித்த ஏனைய வழிகாட்டுதல்கள்

இந்த பாடநெறி நிகழ்நிலை மற்றும் நேரடி விரிவுரைகளை உள்ளடக்கியுள்ளது. பெரும்பாலான விரிவுரைகள் நிகழ்நிலை வழியாகவே நடாத்தப்படும். நிகழ்நிலை விரிவுரைகள் மாதத்திற்கு மூன்று தடவைகள் என வார நாட்களில் காலை வேளையில் நடாத்தப்படும் என்பதோடு நேரடி விரிவுரைகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வார இறுதி நாளில் மாதத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும். பங்கேற்பாளர்கள் இந்த ஆறு மாத காலப்பகுதியில் மாதத்திற்கு ஒரு முறை என நேரடி வகுப்புகளில் பங்குபற்றுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும். இவ்வாறு அவர்கள் நேரடி விரிவுரைகளில் பங்குபற்றியதற்கான போக்குவரத்து செலவு மற்றும் மதிய உணவிற்கான கொடுப்பனவும், நிகழ்நிலை விரிவுரையில் பங்குபற்றியமைக்கான தொடர்பாடல் செலவுக்கான கொடுப்பனவும் கொழும்புப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும். அந்தவகையில், இக்குறித்த ஆவணம் போக்குவரத்து செலவு, மதிய உணவு மற்றும் தொடர்பாடல் செலவுக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வது குறித்த வழிகாட்டுதலை உங்களுக்கு வழங்கும்.

### 1. போக்குவரத்து செலவிற்கான கொடுப்பனவை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

அ) தகைமை அளவுகள்:

- சிறுவர் விற்பனை குறித்த பாடநெறிக்கு உத்தியோகப்பூர்வமாக பதிவுசெய்யப்பட்டுள்ள அரச பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே போக்குவரத்து செலவிற்கான கொடுப்பனவினை பெற்றுக்கொள்ள முடியும்.
- போக்குவரத்து செலவிற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் நேரடி விரிவுரைகளுக்கு சமூகமளிக்கின்ற பங்குபற்றுநர்கள் தகைமையுடையவர்களாக கருதப்படுவர்.

ஆ) கொடுப்பனவு விகிதங்கள்:

- பங்குபற்றுநர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவு விகிதங்கள் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு பயணித்த தூரத்தினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.
- முன்னரே ஒரு கிலோமீட்டருக்கு இவ்வளவு என தீர்மானிக்கப்பட்ட விகிதம் CSHR ஆல் தீர்மானிக்கப்படும்.
- கணக்கிடப்பட்ட தூரம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பங்கேற்பாளருக்குமான போக்குவரத்து கொடுப்பனவிற்கான தொகை CSHR ஆல் ஒதுக்கீடு செய்யப்படும்.

இ) கொடுப்பனவு செயன்முறை:

- நேரடி விரிவுரைக்கான வருகைப் பதிவேட்டை CSHR மதிப்பீடு செய்யும்.
- முன்னரே ஒரு கிலோமீட்டருக்கு இவ்வளவு என தீர்மானிக்கப்பட்ட விகிதம் மற்றும் குறிப்பிட்ட மாகாணத்திலிருந்து நேரடி விரிவுரையில் கலந்துகொள்ளுகின்ற பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை போன்றவற்றின் அடிப்படையில் ஆறு மாதங்களுக்கான மொத்த போக்குவரத்து செலவிற்கான கொடுப்பனவு பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் படி CSHR பங்கேற்பாளர்களுக்கான கொடுப்பனவை செயல்படுத்தும்.

ஈ) காலவரையறை:

நிர்ணயிக்கப்பட்ட போக்குவரத்துக் கொடுப்பனவு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நேரடி விரிவுரை நடைபெற்று 15 நாட்களுக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் காசோலையாக வழங்கப்படும்.

உ) தொடர்புகளுக்கு:

கொடுப்பனவு செயன்முறை தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் அல்லது உதவிகள் தேவைப்படின் பங்கேற்பாளர்கள் CSHR மற்றும் DPCCS இனை தொடர்பு கொள்ளலாம்.

## 2. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவு கொடுப்பனவை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

- மதிய உணவிற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் நேரடி விரிவுரைகளுக்கு சமூகமளிக்கின்ற பங்குபற்றுநர்கள் தகைமையுடையவர்களாக கருதப்படுவர்.
- நேரடி விரிவுரைகளில் கலந்துகொள்ளுகின்ற ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் மதிய உணவிற்கான கொடுப்பனவாக ரூபா 500.00 வழங்கப்படும்.
- நேரடி விரிவுரைக்கான வருகைப் பதிவேட்டை CSHR மதிப்பீடு செய்து குறிப்பிட்ட தொகையினை பங்கேற்பாளர்களுக்கு வழங்கும்.

## 3. தொலைத்தொடர்பாடல் செலவிற்கான கொடுப்பனவை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

- தொடலைத்தொடர்பு செலவிற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள Zoom வழியாக நடாத்தப்படுகின்ற நிகழ்நிலை விரிவுரைகளில் கலந்துகொள்ளும் பங்குபற்றுநர்கள் தகைமையுடையவர்களாக கருதப்படுவர்.
- நிகழ்நிலை விரிவுரைகளில் பங்குபற்றுகின்ற ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் தொலைத்தொடர்பு செலவிற்கான கொடுப்பனவாக ரூபா 450.00 வழங்கப்படும்.
- நிகழ்நிலை விரிவுரைக்கான வருகைப் பதிவேட்டை CSHR மதிப்பீடு செய்து குறிப்பிட்ட தொகையினை பங்கேற்பாளர்களுக்கு வழங்கும்.

# 11. நிர்வாக வழிகாட்டுதல்கள்

## 1. அறிமுகம்

விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவ முகாமை மற்றும் பராமரிப்பிற்கான மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியின் வினைதிறனான நிர்வாகத்தினை ஆதரிக்கும் வகையில் இந்த வழிகாட்டுதல் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறித்த வழிகாட்டுதலானது குறிப்பிட்ட பாடநெறியினை பின்பற்றுவதற்கான தேவைப்பாடுகளை தெளிவுப்படுத்துகின்றது. இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு விடயங்கள் குறித்தும் அறிந்து கொள்ள, குறித்த பாடநெறிக்கான நிர்வாக ஒருங்கிணைப்பாளர்/கல்வி ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.

## 2. வருகைப்பதிவு

அ. குறித்த பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்ய 80% வருகைப்பதிவு அவசியமானது (அதாவது விரிவுரைகளுக்கு வருகை தராத சந்தர்ப்பங்கள் அதிகபட்சம் 20% ஆக இருத்தல் வேண்டும்).

ஆ. உங்களுக்கு 20% சமூகமளிக்காமல் இருப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் (20% உடன் தொடர்புடைய வகுப்புகளின் எண்ணிக்கை மாணவர்களுக்கு வழங்கப்படும்) உங்களுக்கு விரிவுரைகளில் கலந்துகொள்ள முடியாவிட்டால், கல்வி ஒருங்கிணைப்பாளருக்கு / பாடநெறிக்கான ஒருங்கிணைப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

இ. நீங்கள் விரிரைக்கு சமூகமளிக்காமைக்கு ‘முறையான காரணம்’ (மருத்துவக் காரணங்கள், தொழில் குறித்து வெளிநாடுகளுக்கு பயணம் செய்தல் அல்லது மாநாடுகளில் பங்குபற்றுதல் போன்ற) வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே 80மூ வருகைப்பதிவில் தாக்கத்தை எற்படுத்தாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ. இறுதி சமர்ப்பணத்திற்கு 2 வாரங்களுக்கு முன்னர் வருகைப்பதிவு 80% இற்கு குறைவாக இருந்தால், கீழே தரப்பட்டுள்ள காரணங்களுக்காக அன்றி சமர்ப்பணத்தை சமர்ப்பிக்க உங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

- முறையான காரணம் (ஆதாரங்களுடன்) CSHR இன் கல்விக்குழுவிடம் சமர்பிக்கப்பட்டிருக்குமாயின் மற்றும்
- கல்விக்குழு 80% இற்கும் குறைவான வருகைப்பதிவு வீதத்தை கவனத்தில்கொள்ளுமாயின்

## 3. ஒப்படைகள்:

அ. கல்வி ஒருங்கிணைப்பாளரால் தீர்மானிக்கப்பட்ட காலவரையறைக்குள் ஒப்படைகள் பூர்த்தி செய்யப்பட்டு CSHR இற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. பல்கலைக்கழகத்தின் கற்றல் முகாமைத்துவ முறை (LMS) என்ற மின்னியல் கற்றல் மென்பொருளிற்கு பங்குபற்றுநர்கள் தங்களுடைய ஒப்படைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

இ. எந்தவொரு காரணத்திற்காகவும் குறித்த காலவரையறைக்குள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் ஒப்படை சமர்ப்பிக்கப்படாவிட்டால், இறுதித்திகதிக்கு 05 நாட்களுக்கு

முன்னதாக (அல்லது இறுதித்திகதிற்கு முன் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒரு நியாயமான காலத்திற்குள்) கல்வி ஒருங்கிணைப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

ஈ. சரியான காரணமின்றி இறுதித்திகதிற்குள் ஒப்படையை சமர்ப்பிக்கத் தவறினால், அது தவறிய முயற்சியாக கருதப்படும்.

உ. இருப்பினும் CSHR இன் கல்விக் குழு மற்றும் பீடச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ சான்றுகள் மற்றும் ஏனைய சான்றுகளின் அடிப்படையில், CSHR இன் கல்விக்குழுவால் வழங்கப்படுகின்ற எழுத்துப்பூர்வ ஒப்புதலை கருத்தில் கொண்டு, ஒப்படையை சமர்ப்பிக்கத் தவறிய மற்றும் தோல்வியுற்ற எந்தவொரு பங்குபற்றுநருக்கும் மதிப்பீட்டினை நிறைவு செய்ய மாற்றீட்டு வாய்ப்பொன்று வழங்கப்படும். பாடநெறியை குறிப்பிட்ட கல்வியாண்டிற்குள் நிறைவுசெய்தல் வேண்டும்.

## 4. சமர்ப்பணம்

அ. கல்வி ஒருங்கிணைப்பாளரால் தீர்மானிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பணமானது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. நிர்ணயிக்கப்பட்ட திகதியானது, அவசர காரணமொன்றினைக் குறிப்பிட்டு பங்கேற்பாளர்கள் சமர்ப்பணத்தை ஒத்தி வைப்பதற்கான கோரிக்கையை முன்வைத்தாலே தவிர, குறித்த திகதியில் மாற்றம் செய்யப்படமாட்டாது.

இ. எந்தவொரு காரணத்திற்காகவும் குறித்த திகதியில் அல்லது நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பணம் சமர்ப்பிக்கப்படாவிட்டால், இறுதித்திகதிக்கு 05 நாட்களுக்கு முன்னதாக (அல்லது இறுதித்திகதிற்கு முன் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒரு நியாயமான காலத்திற்குள்) கல்வி ஒருங்கிணைப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

ஈ. சரியான காரணமின்றி குறித்த திகதியில் சமர்ப்பணத்தை சமர்ப்பிக்கத் தவறினால், அது தவறிய முயற்சியாக கருதப்படும்.

உ. இருப்பினும் CSHR இன் கல்விக் குழு மற்றும் பீடச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ சான்றுகள் மற்றும் ஏனைய சான்றுகளின் அடிப்படையில், CSHR இன் கல்விக்குழுவால் வழங்கப்படுகின்ற எழுத்துப்பூர்வ ஒப்புதலை கருத்தில் கொண்டு, சமர்ப்பணத்தை சமர்ப்பிக்கத் தவறிய மற்றும் தோல்வியுற்ற எந்தவொரு பங்குபற்றுநருக்கும் மதிப்பீட்டினை நிறைவு செய்ய மாற்றீட்டு வாய்ப்பொன்று வழங்கப்படும். பாடநெறியை குறிப்பிட்ட கல்வியாண்டிற்குள் நிறைவுசெய்தல் வேண்டும்.

## 12. முக்கிய திகதிகள்

| **தகவல்** | **திகதிகள்** |
|---|---|
| பாடநெறி ஆரம்பம் | 19 ஜுன் 2024 |
| விரிவுரைகள் | 24 ஜுன் 2024 |
| சமர்ப்பித்தல் | 31 ஆகஸ்ட் மற்றும் 01 செப்டம்பர் 2024 |
| ஓப்படை | 30 ஒக்டோபர் 2024 |

***மேற்குறிப்பிட்ட திகதிகள் தற்காலிகமானவை என்பதோடு தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுமாயின் குறித்த திகதிகள் மாற்றத்திற்கு உட்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

# 13. முக்கிய தகவல்கள்

| | | |
|---|---|---|
| 01 | அஞ்சல் முகவரி | மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்<br>சட்ட பீடம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br>93, குமாரதுங்க முனிதாச மாவத்தை<br>கொழும்பு 03<br>இலங்கை. |
| 02 | தொடர்பாடல் | +94-112-500879/503017<br>info@cshr.cmb.ac.lk |
| 03 | பணிப்பாளர் | பேராசிரியர் (தலைவர்) வசந்தா செனவிரத்ன<br>director@cshr.cmb.ac.lk |
| 04 | பிரதிப் பணிப்பாளர் | திரு. எம்.ஏ.எம். ஹக்கீம்<br>deputydirector@cshr.cmb.ac.lk |
| 05 | கல்வி ஒருங்கிணைப்பாளர் | கலாநிதி. தனுஷிகா அபேரத்ன<br>danushika@law.cmb.ac.lk |
| 06 | திட்ட ஒருங்கிணைப்பாளர் | செல்வி. எஸ். ஸ்ரீ தயாளினி<br>dhayalini@cshr.cmb.ac.lk |

குறித்த பாடநெறிக்கான தமிழ்மொழி மூல விரிவுரைகளை நடாத்துகின்ற பின்வரும் **வளவாளர்களுக்கு** எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாநிதி. யசோதரா கதிர்காமதம்பி
சிரேஷ்ட விரிவுரையாளர்
சட்ட கற்கைகள் துறை
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

வி. ஜெயரூபன்
பணிப்பாளர் (சமூகப் பணித் துறை),
சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனம்

நிவேதிதா ஜீவபாலன்
மனநல நிபுணர்/முகாமையாளர் - சிறுவர் பாதுகாப்பு பிரிவு, LEADS

துஷந்திகா குமாரசூரியர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சட்ட பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

விஜிதா ரெங்கநாதன்
மனநல தொழில்நுட்ப ஆலோசகர் - MHPSS

சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன்
சிறுவர் உரிமைகள் ஆர்வலர்

நிதிலா தெய்வேந்திரன்
உளவள செயற்பாட்டாளர்

வரதகௌரி வாசுதேவன்
பணிப்பாளர், பயிற்சி வழங்கல் பிரிவு
சமூகப்பணி துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனம்

****************************